Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.00



செவ்வி:
த. சித்தார்த்தன்

DECEMBER 2009

# நாழிகை

NAZHIKAI
London

International Tamil Newsmagazine



## பலப் பரீட்சை

Niru BRAND®

The N°.1 choice
of Tamils in Canada, Europe & UK.

*"Quality you can taste!"*

North America:

Niru Enterprises Inc.
Tel : +1 416-750-1976
Email: info@niru.com
www.niru.com

Europe:

Niru Europe Ltd,
Tel: +44 20 8640 8228
Email: sales@niru.co.uk
www.niru.co.uk

- இலங்கை, இந்திய மளிகைப் பொருள்கள்
- மரக்கறி வகைகள்
- மீன் மற்றும் கடலுணவு வகைகள்
- CD
- DVD
- வார சஞ்சிகைகள்
- துரித பணமாற்று சேவை
- குறைந்த விலையில் தரமான பொருள்கள்



**ANGEL SUPER MARKET**

273-275 Ilford Lane
Ilford IG1 2SD

Tel: 020-8514 2356

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணிநேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

DEEPAM

★ செய்திகள் ★ காலைக்கதிர் ★ சின்னத்திரைத் தொடர்கள்
★ அரசியல் ஆய்வு விவரணங்கள் ★ மகளிர், சிறுவர் நிகழ்ச்சிகள்
★ நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
★ இசை, நடன நிகழ்ச்சிகள் ★ புத்தம் புதிய திரைப்படங்கள்

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

சந்தா விசேட சலுகைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்

DEEPAM TV
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 3JB, UK

Tel: + 44 (0)208 814 6565, Fax: + 44 (0)208 814 1144
Email: info@deepamtv.tv Web: www.deepamtv.tv



22 | உலக விவகாரம் -
சீனா-இந்தியா
யுத்தம் இனி இல்லை

26 | உலக விவகாரம் - கியூபா
அதிகார மாற்றம்
மாற்றத்தை தருமா?

18 | நோபல் பரிசு
சர்வதேச நிலைமைகளை
மாற்றவல்ல வல்லமை

16 | நடப்பு விவகாரம் -
இந்தியா
புதிய 'தெலுங்கானா'

10 | அட்டை செய்தி
இலங்கை
யுத்த வெற்றிக்குப் பின்னர்
பலப்பரீட்சை

12 | செவ்வி
த. சித்தார்த்தன்
'இனியும் ஓர் அழிவு
வேண்டாம்'





40 | சினிமா
பெரிதினும் பெரிது கேள்

34 | விளையாட்டு - கிரிக்கெட்
ஒரு தலைமுறையின்
கனவு

32 | கலை
பம்பாய் ஜெயஸ்ரீ

36 | சிறுகதை
தேவலோக கவலைகள்

அட்டைச் சித்திரம்: அரஸ்




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: IV, No: 9,10&11
**Editor:** S Mahalingasivam **Published** by: Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
**Canada - Tel: 416 613 2770**
**Anual Subscription** (12 issues): **UK** £20.00 **Europe** £25.00 **India & Sri Lanka** £10.00 **Canada** $30.00 **All Other Countries** £30.00
Payable to **Pannews (IBAN: GB70 LOYD 3096 6602 2983 78)**

# இலங்கையில் ஒரு 'தர்ம' யுத்தம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிறைவேற்று அதிகாரம்மிக்க ஆட்சித் தலைவரான ஜனாதிபதியின் பதவிக்கு, ஆறாவது தேர்தல் அடுத்தமாதம் ஜனவரியில் நடைபெறுகிறது. தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய இன்னமும் இரண்டு வருடங்கள் இருக்கின்ற வேளையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடாத்த முடிவுசெய்து, இரண்டாவது தடவையும் அப் பதவியை வகிக்க தேர்தலில் போட்டியிடுகிறார்.

1948இல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம்பெற்று, பின்னர் 1972இல் குடியரசான இலங்கையின் வரலாற்றில், என்றுமில்லாதவாறு அமைந்த 1977 பொதுத் தேர்தல் முடிவுகள், 1978இல் இலங்கையை இந்த ஜனாதிபதி ஆட்சி முறைக்கு கொணர்ந்தன.

நாடு முழுவதிலும் சுதந்திரத்துக்குப் பின்னரான பொதுத் தேர்தல்களின் வாக்களிப்பு வீதத்தை அவதானித்து, அதனடிப்படையில் தனது ஐக்கிய தேசிய கட்சிக்கு தேர்தல் வெற்றி எப்போதும் பெருமளவில் சாத்தியமாகும் என்ற கணிப்பில், தொகுதிவாரி பாராளுமன்ற தேர்தல் முறைறையை விகிதாசார தேர்தல் முறைக்கு மாற்றியவர் அரசியல் 'கிழநரி' ஜே. ஆர். ஜயவர்த்தன. இந்த விதத்திலேயே, நாட்டின் ஆட்சி முறையையும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு அவர் மாற்றினார்.

ஆனால், நாடு மோசமான ஒரு திசையில் செல்கிறதென்பதை நன்கு தெரிந்திருந்தும், தமிழ் மக்களின் உரிமைப் பிரச்னைகளுக்கு ஓர் அரசியல் தீர்வைக்காண்பதைமட்டும் விரும்பாத அவரின் யூகங்கள் வெகுகாலம் நிலைக்கவில்லை. 1994இல் சிறிலங்கா சுதந்திர கட்சியின் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகி, அவருக்குப் பின்னரும் அவரது கட்சியையே சார்ந்த மஹிந்த ராஜபக்ஷ பதவிவகிப்பது மாத்திரமன்றி, இப்போது நடைபெறவிருக்கும் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி, தனது கட்சி வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தமுடியாத நிலையில், பொது வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசியல் பாடத்தை கற்க ஜயவர்த்தன இல்லை. ஆனால், கற்க வேண்டியவர்கள் இருக்கிறார்கள்.

முன்னைய ஜனாதிபதி தேர்தல்கள் அனைத்தும் தீவிரமான - ஆயுதம்தாங்கிய ஒரு பிரிவினைவாத போராட்டத்தை நாடு எதிர்கொண்ட நிலையில் நடைபெற்றபோது, இந்த தேர்தல் முதன்முதலாக அந்த நிலைமை அற்ற ஒரு நிலையில் நடைபெறுகிறது. அந்த ஆயுத போராட்டத்தை ஒழித்த 'யுத்த வெற்றி'யில், 'வாகைசூடுவது' யார், அரசுத் தலைவரா இராணுவத் தலைவரா? என்ற 'தர்ம' யுத்தமாக இத் தேர்தல் நடைபெறுகிறது.

இதில், 'வெற்றி' என்பது எதில் வெற்றி; யாருடைய வெற்றி?

'நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.'

இலங்கையில் தமிழ் மக்களுடைய உரிமைக்கான கோரிக்கை எல்லோராலுமே நியாயமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான். அது ஒரு கட்டத்தில் ஆயுத போராட்டமாக மாறியது. அதற்கு காரணமானவர்களும் அரசு கட்டிலில் இருந்தவர்களே.


மூன்று தசாப்தகாலம் இந்த ஆயுத போராட்டத்தில் நாடு பெரும் அல்லல்பட்டபோது, அந்த ஆயுத போராட்டத்தை அரசு ஒழித்திருக்கிறது. ஆனால், போராட்டத்துக் காரணமான பிரச்னைக்கு அது என்ன தீர்வைக் கண்டது? அந்தத் தீர்வைக்காணாத இந்த வெற்றியை வெற்றியாக கொண்டாடும் அரசியல்வாதிகள், நாட்டை - மக்களை அல்ல, அடுத்த தேர்தலையேதான் எண்ணுவார்கள். அரசியல்வாதிகள் எல்லோரும் அரசியல் கனவான்கள் அல்லரே.

ஆக, இந்த விதத்தில்தான் இலங்கையில் இந்த ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது. என்றுமில்லாத ஒரு 'கையறு நிலை'யில் இலங்கையில் தமிழ் மக்கள் இன்று இருக்கிறார்கள். ஆனால், மிகவலுவான சத்தியைக்கொண்டிருந்த தமது உரிமைக்கான ஆயுத போராட்டத்தில் இப்படியொரு நிலை - ஏன், எப்படி ஏற்பட்டது என்பதை தெளிவாக - சரிவர தெரிந்துகொள்ளவேண்டிய - புரிந்துகொள்ளவேண்டிய தேவை, இதில் பெரும் அர்ப்பணிப்புகளைப்புரிந்த தமிழ் மக்களுக்கு, அவர்களின் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு மிகவும் அவசியம். சில உண்மைகள் இந்த மக்களுக்கு வேண்டுமென்றே மறைக்கப்படுகின்றன. இவற்றில் தெளிவை அவர்களுக்கு ஏற்படுத்த மறுக்கும் அல்லது விரும்பாத ஒரு நிலை தமிழர் தரப்பில் இருப்பின், அதுவும் தம்மைப்பற்றியேயன்றி, நாட்டை - மக்களை எண்ணாத சிங்கள அரசியல்வாதிகளை ஒத்ததேதான்.

இதேவேளை, கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவுதான், இன்று அவர்களின் இந்த நிலைக்கு காரணம் என்ற ஒரு வாதமும் வைக்கப்படுகின்றபோது, இந்த ஜனாதிபதி தேர்தலில் அவர்களின் நிலைப்பாடுகுறித்த ஒரு முடிவு, தமிழ் அரசியல் கட்சிகளுக்கும்சரி, தமிழ் மக்களுக்கும்சரி மிகவும் கடினமானதே. எனினும், நம்பிக்கையும் ஏமாற்றமும் வரலாகின்றபோது, மீண்டும் நம்பிக்கையைத்தான் இவர்கள் நம்புவார்களா?

ஆக, தம்முடன் கூடவே, நாட்டையும் மக்களையும் சிந்திக்கின்ற ஒரு 'தெய்வ கிருபை' புதிய தேர்தலில் கிட்டினால், கூடவே நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சம் கிட்டுகின்ற ஒரு வாய்ப்பு இலங்கையில் கிட்டும். ■

# உலகம்



## இந்தியா

### குற்றச்சாட்டுக்கு மறுப்பு

கடந்த ஆண்டின் மும்பாய் தாக்குதலில் உயிர்தப்பிய ஒரேயொரு துப்பாக்கிதாரியென குற்றஞ்சாட்டப்படும் முகமட் காசப், அத் தாக்குதல் தொடர்பில் தனக்கு எதுவுமே தெரியாது என்றும், புகைப்படத்தில் காணப்படும் உருவம் தன்னுடையது அல்லவென்றும், பொலிசாரின் துன்புறுத்தலிலேயே தான் முதலில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாகவும் மும்பாய் தாக்குதல் விசாரணைகளின் முடிவில் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்

இந்தியாமீது யுத்த நடவடிக்கை, கொலை என்பன உள்பட 86 குற்றச்சாட்டுகள் இவர்மீது சுமத்தப்பட்டுள்ளன.

தாக்குதல்கள் நிகழ்ந்த பகுதிகளுக்கு தான் ஒருபோதுமே சென்றதில்லை என்றும், ஏ. கே. 47 ரக துப்பாக்கியை முன்னர் தான் பார்த்ததேயில்லை என்றும் தெரிவித்த காசப், 20 தினங்களுக்கு முன்னதாக மகாராஷ்டிரா கடற்கரை பகுதி ஒன்றில் தன்னைக் கைதுசெய்த பொலிசார், தன்மீது இந்த வழக்கை சோடித்திருப்பதாவும் கூறினார். தாக்குதல் நிகழ்ந்தவேளை, தான் பொலிசாரின் பாதுகாப்பில் இருந்தாகவும் அவர் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையின் ஆரம்பத்தில், குற்றச்சாட்டுகள் அனைத்தையும் காசப் மறுத்தாலும், பின்னர் அவற்றை ஒப்புக்கொண்டு, தனக்கு மரண தண்டனை வழங்கும்படியும் கோரியிருந்தார். ஆனால், அப்போது அவரது கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிமன்றம், விசாரணையைத் தொடர்ந்து நடாத்தியது.

வழக்கின் தீர்ப்பு அடுத்த ஆண்டின் முற்பகுதியில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

காசப், பாகிஸ்தான் பிரஜை என்றும், தாக்குதல் பாகிஸ்தானில் திட்டமிடப்பட்டதென்றும் பாகிஸ்தான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறது.

## இலங்கை

### ஐ. நா. சபை விளக்கம் கோருகிறது




இலங்கையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் சிலர் சரணடைய முற்பட்ட வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கமளிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை தம்மைக் கோரியிருப்பதாக இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது.

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவே இக் கொலைகள் தொடர்பாக தெரிவித்ததாக குறிப்பிட்டு இலங்கை பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தபோது, 'அப்படி நிகழவில்லை; விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களேதான் சிலர் அவர்களைச் சுட்டார்கள்' என்று இலங்கை அரசு இக் குற்றச்சாட்டு தொடர்பில் கூறிவருகிறது.

அத்துடன், சரத் பொன்சேகா இழைத்த 'நம்பிக்கைத் துரோகம்' இது என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

மே நடுப்பகுதியில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளின் இறுதிக் கட்டத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூன்று சிரேஷ்ட தலைவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மரணமான சூழ்நிலை குறித்து விளக்கமளிக்குமாறு ஐ. நா. சபை விடுத்துள்ள கோரிக்கையை அரசு பரிசீலித்துவருவதாகவும், தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் இலங்கை ஜனாதிபதியின் அலுவலகம் தெரிவித்திருக்கிறது.




# உலக அமைதியை நினைத்தார்; நோபல் மோக்ஷம்!

## பரிசுக்காக தலையைக் குனிந்தவர் நிமிர்வாரா?

'வாரணாசியில் வசித்தால் மோக்ஷம்; திருவண்ணாமலையை நினைத்தாலே மோக்ஷம்' என்பது இந்து மத ஐதிகம். வேறு யாருக்கும் தெரிந்திருக்கிறதோ இல்லையோ, பராக் ஒபாமாவுக்கு இது தெரிந்திருக்கிறது; நோபல் பரிசு அமைப்புக்கும் தெரிந்திருக்கிறது. வெள்ளை மாளிகையில் வசிக்கிறார்; அதனால் அரசியல் மோக்ஷம் கிடைத்துவிட்டது. உலக அமைதியை நினைத்தார்; உடனே நோபல் மோக்ஷமும் கிடைத்துவிட்டது.

ஆக, அமைதியை நினைத்தால் போதும் என்ற புதிய அளவுகோலை அறிமுகப்படுத்தியிருக்கிறது உலக சமாதானத்துக்கான நோபல் பரிசின் தேர்வுக்குழு. ஒபாமாவும் அதனை ஏற்றுக் கொண்டுவிட்டார். இனிமேல் உலக சமாதானத்துக்குப் பாடுபடவேண்டும் என்பதற்காக தனக்குக் கொடுக்கப்பட்ட உற்சாக 'டானிக்' என்று சொல்லியிருக்கிறார். ரொம்பவும் சரிதான். ஒருவேளை அப்படிப் பாடுபடாவிட்டால் பரிசைப் பிடுங்கிக்கொள்வார்களா, என்ன? அப்படி எதும் இல்லை. இப்போது விழும் விளம்பர வெளிச்சம் நிரந்தரம். உலக சமாதானம்பற்றி ஒஸாமா பின்லாடனும் நினைத்தார் என்று சொல்லி, அடுத்த வருடம் ஒஸாமாவுக்கு உலக சமாதான நோபல் பரிசு கொடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படு

வதற்கில்லை. எதையும் நினைத்தால் போதும்; எதுவும் செய்யவேண்டிய தில்லை!

அமெரிக்காவில் ஒபாமா ஜனாதி யாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது மகிழ்ந்தவர்கள், அவர் உலக சமாதானத் துக்கான நோபல் பரிசைப் பெற்றதை உற்சாகமாக வரவேற்கவில்லையாம். இதெல்லாம் பொறாமை! கருணாநிதி அண்ணா விருது பெற்றதை எதிர்க்கட் சிகள் விமர்சனம் செய்ததுபோல, ஒபாமா நோபல் பரிசு பெற்றதை குடிய ரசுக்காரர்களே விமர்சனம் செய்தார்க ளாம். இதற்காக ஒபாமா மனம் தளர்ந்து விடக்கூடாது! மேலும் மேலும் அமெ ரிக்காவிலும் பிற நாடுகளிலும் அளிக் கப்படும் சர்வதேச பரிசுகளை இனி அவர் எப்படியாவது வாங்கிவிடவேண் டும். பரிசுகள், விருதுகள், பாராட்டுக் கள் என்று இல்லாமல் பதவி என்ன பதவி?

பதவியினால் பணம் சேர்க்க முடிந் தாலும் 'பர்ஸை' வெளியில் காட்டமுடி யுமா? பரிசைத்தானே காட்டமுடியும். அதனால், உலகத் தலைவர்களே, பரிசு கள் பெறுவதில் அக்கறை செலுத்துங் கள். அந்தக் காலத்தில் அசுவமேத யாகம் என்று ஒன்று இருந்ததாம். ராஜா எல்லா நாடுகளுக்கும் போவார். எல்லா இடங்களிலும வரவேற்பும் மரியாதை யும் பெற்றுத் தன்நாடு திரும்புவார். எங் காவது யாராவது கறுப்புக்கொடி காட் டினால் யாகத்தின் பலன் பூஜ்யம்! எனவே, இதுவரை உலக சமாதானத் துக்கு எதுவும் செய்யாவிட்டாலும் இனிமேல் செய்யவிருக்கிறேன் என்று சொல்லி ஒபாமா உலக சுற்றுப் பயணம் செய்யலாம். சென்னைக்கு வந்தால் கரு ணாநிதியை முந்திக்கொண்டு வைகோ அவருக்கு பாராட்டு விழா நடாத்து வார் என்று எதிர்பார்க்கலாம்.

'நான் பெரிதாக எதுவும் செய்துவிட வில்லை; இந்த கௌரவம் வேண்டாம்; அமெரிக்க ஜனாதிபதியாக இன்னும் மூன்று வருடங்கள் சிறப்பாக பணியாற் றினால் போதும்; அதில் திருப்தியுற்று மக்கள் மீண்டும் ஒருமுறை என்னை தங்கள் தலைவராக்கினால், அது உள் நாட்டு பரிசு. அந்தப் பரிசைப் பெற்று விட்டு, இரண்டாம் பதவிக்காலத்தில் உலக அமைதிக்காக ஆக்கபூர்வமாக ஏதாவது செய்ய நினைக்கிறேன். நான் அந்தப் பணியைச் செய்து முடித்தபிறகு, அமெரிக்க ஜனாதிபதியாக இல்லாத போது, வெள்ளை மாளிகைகைவிட்டு வெளியேறிய பிறகு எனக்கு அந்த கௌரவத்தைத் தாருங்கள்; ஏதாவது செய்த திருப்தியில் அதைப் பெற்றுக் கொள்கிறேன்' என்று சொல்லியிருக்க லாம்; சொல்லவில்லை. பரிசு என்றால் தலைவர்கள் மயங்கிப்போகிறார்கள். அதுவும், சர்வதேச கௌரவமான நோபல் பரிசு என்றால் கேட்கவா வேண்டும்?

இப்போதைய தமிழக முதல்வர் மு. கருணாநிதி முன்பு முதல்வராக இருந் தபோது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் 'ராஜராஜன் இலக்கிய விருது' வழங்கப்பட்டது. கருணாநிதி மறுத்திருக்கலாம்; மறுக்ககவில்லை. கல்வியாளர்களின் அடிமைப்பட்டா ளம் வீட்டுக்கேவந்து அவருக்கு விரு தைக் கொடுத்தது. அவரும் பெருமகிழ் வுடன் பெற்றுக்கொண்டார். மாறாக, 'பதவியில் இல்லாதபோது எழுத்தாள னாக மட்டும் இருந்தேன். நான் எழுத் தாளன் என்பது அப்போது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. பதவியில் இருக்கும்போது தருகிறீர், இதைப் பெற விரும்பவில்லை' என்று சொல்லி யிருக்கலாம். அதை அன்று வாங்கிய வர், தானே நிறுவிய பரிசையும் இன்று வாங்கிக்கொண்டிருக்கிறார். ஒபாமா விஷயம் கொஞ்சம் மாறுபட்டது. நோர்வே நாட்டில் உள்ள சர்வதேச நோக்கு உள்ளதாக அறியப்படும் அமைப்பு வழங்கிய பரிசு. அதில் பெரிய வித்தியாசம் இல்லை. ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் துணை அமைப்புக ளில் அமெரிக்காவின் ஆதிக்கம் அதிக மாக இருக்கிறது என்ற பேச்சு உண்டு. இனி, அமெரிக்கர்கள் பிற துறைகளில் சாதனைக்காக பரிசுகள் பெற்றாலும் செல்வாக்கினால் பெற்றதாகவே கருதப் படும் ஆபத்து இருக்கிறது.

ஒபாமாவை இந்தப் பரிசுக்குத் தேர்வு செய்ததற்காகவே நோர்வே நாட் டின் நோபல் உலக சமாதானப் பரிசின் நடுவர் குழுவைப் பலர் குறைகூறுகிறார் கள். பெரும்பாலானவர்கள் நினைக்கி றார்கள் 'பா பா பிளாக் ஷீப்' பாடிய 'ப்ரீ கேஜி' குழந்தைக்கு 'பிஎச்டி' பட்டம் கொடுத்துவிட்டதாக. தவறு; தவறு; தவறு. 'பாபா பிளாக் ஷீப்'பே பாடிக் கொண்டிருக்கட்டும் என்பதற்காக கொடுக்கப்பட்டது அந்தப் பரிசு. நோபல் குழுவினர் அதி புத்திசாலிகள்.

கியூபாவில், வியட்நாமில், குவைத் தில், ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் நுழைந்த அமெரிக்கா - சோவியத் யூனி யனின் வீழ்ச்சிக்குப்பிறகு தனிக்காட்டு ராஜாவான அமெரிக்கா - ஒபாமா காலத்தில் மேற்கொண்டு துள்ளிக் குதித்துவிடக்கூடாது என்று அவரது கைகளைக் கட்டிப்போடுவதற்காகவே உலக சமாதானத்துக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்கொள்கிறார்கள், எதையும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கும் புத்திசா லிகள்.

அமெரிக்க வரலாற்றில் துப்பாக் கிக்கு பலியான ஜனாதிபதிகள் சிலர். உலக சமாதான பரிசு பெற்றவர் என்ப தனால் இனி ஒபாமாமீது யாரும் துப் பாக்கியை நீட்டமாட்டார்கள் என்று நம்பலாம். அந்தவகையில் ஒபாமா வுக்கு இந்த நோபல் பரிசு ஒரு பாதுகாப் புக் கவசம். அதனால், உரிய விலைகொ டுத்து அவர் இந்தக் கவசத்தை வாங்கியி ருப்பார் என்று யாராவது ஊகித்தால் அதைத் தவறு என்று சொல்லமுடி யாது.

தற்காப்பு தவிர, இந்தப் பரிசுப் பதக் கத்தை அணிந்தபடி ஒபாமா போர் ஆயுதங்களைத் தூக்கமுடியுமா? யாரா வது நேரெதிரே வந்து சுட்டாலும் பதி லுக்கு கைத்துப்பாக்கியைத் தூக்கமுடி யாது! வந்தவரைத் தாக்க பாதுகாவலர் கள் துப்பாக்கியைத் தூக்கினாலும் பெரியபுராண மெய்ப்பொருள் நாய னார்போல, 'தத்தா, நமர்' என, தடுத்து விழவேண்டியதே. இல்லையென்றால், 'ஹே ராம், ஹே ஆப்ரகாம்' என்று சொல்லாம்!

எப்படியோ, தன்னைத் தேர்ந்தெ டுத்த குழுவின் தந்திரம் தெரியாத ஒபாமா, சர்வதேச பெருமைக்குரிய பதக்கத்தைப் பெற கழுத்தைக் குனிந்து விட்டார். இனி, அவர் தன் தலையை நிமிர்த்த முடியாது. 'நீர் தான் காந்தி' என்று பட்டம் கொடுக்கப்பட்ட பிறகு ஒருவர் கசாப்புக் கத்தியைத் தூக்கு வாரா? கடலைக்கொட்டையும் ஆட் டுப்பாலும் கதி என்றிருக்கமாட்டாரா? அமெரிக்கா தன் தற்காப்புக்காக தாக்கு தல் நடத்துவதுகூட ஒபாமா பெற்ற உலக சமாதான பரிசுக்கு எதிரானதாக எடுத்துக்கொள்ளப்படும். இனி அவர் எதிர்த்தாக்குதல் செய்யமாட்டார். சுற்றி யுள்ளவர்கள் அவரை அப்படிச்செய்ய விடமாட்டார்கள். எப்படி இந்த நோபல் பரிசின் மகிமை!

ஒரு மூன்றாம் உலக நாடு இன் னொரு நாட்டால் நசுக்கப்படுகிறது என்றால், அங்கே ஒபாமா படைகளு டன் போகமுடியாது. தலாய் லாமா போல, அங்கே உபதேசம் செய்யப்போ கலாம் 'புத்தம் சரணம் கச்சாமி' என்று. நிச்சயமாக 'யுத்தம் சரணம்' இல்லை. பரிசு வாங்க ஒஸ்லோவுக்கு ஒபாமா காவி உடையுடன் போயிருந்திருக்க லாம். கமண்டலம்...? அதை நோபல் குழுவே பதக்கத்தோடு சேர்த்துக் கொடுத்திருந்திருக்கும்! ■




NALLI CHINNASAMY CHETTY
9 Nageswaran Road
T. Nagar, Chennai - 600 017
Tel: 24344115/42604567
Email: inquiry@nalli.com Web: www.nalli.com

# யுத்த வெற்றிக்குப் பின்னர் ஒரு பலப்பரீட்சை

## இலங்கை எங்கே செல்கிறது?

தண்டாயுதன்

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய யுத்தச் சூழல் முடிவுக்கு வந்ததையடுத்து, அரசியல் பலப்பரீட்சை தென்னிலங்கையில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. 2010ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளபோது, 22 பேர் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

இலங்கையின் ஆறாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவிவகித்துவருகிறார். நான்கு வருட காலத்தை இவர் தனது பதவியில் பூர்த்திசெய்துள்ளார். இன்னும் இரு வருட காலத்துக்கு பதவியிலிருக்கக்கூடிய நிலையில், ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலை நடத்த மஹிந்த ராஜபக்ஷ முன்வந்திருப்பது, அவருக்கு எதிராக அரசியல் ரீதியாக முனைப்படைந்து வருகின்ற சவால்களையே சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது.

இதுவரைகாலமும் இலங்கை அரசியல் அரங்கில் அறிமுகமில்லாத ஒரு புதியமுகம் இந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சவாலாக போட்டியிடுகின்றது. இலங்கை இராணுவ தளபதியாகவும், அதனையடுத்து கூட்டுப் படைகளின் பிரதம தளபதியாகவும் பணியாற்றி ஜெனரல் சரத் பொன்சேகா மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சிகளினால் களமிறக்கப்படுகின்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த மறுகணமே இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டவர் ஜெனரல் சரத் பொன்சேகா.

மூத்த அதிகாரிகள் சிலர் இருந்த போதிலும் அவர்களை ஓரந்தள்ளிய நிலையிலேயே ஜெனரல் பொன்சேகா இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டார். இருந்தபோதிலும், இராணுவ தளபதியாக பதவியேற்ற குறுகிய காலப் பகுதியில் தற்கொலைக் குண்டுதாரியின் படுமோசமான தாக்குதலிலிருந்து ஜெனரல் பொன்சேகா உயிர் பிழைத்திருந்தார். இவரை உயிர்பிழைக்க வைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அயராது பாடுபட்டார். தனது நம்பிக்கைக்குரிய தளபதி என்பது ஒருபுறமிருக்க, தென்னிலங்கையில் தனது ருகுணு பிராந்தியத்தைச் சேர்ந்த ஒருவர் என்றவகையில், தமது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி ஜெனரல் பொன்சேகாவை ராஜபக்ஷ அரசு உயிர் பிழைக்க வைத்திருந்தது.

ஆயினும், தற்போது யுத்தம் முடிவுற்ற நிலையில் அவ்வெற்றியின் சூத்திரதாரி யார்? என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி ராஜபக்ஷவும் ஜெனரல் பொன்சேகாவும் அரசியல் பலப்பரீட்சையில் களமிறங்குகின்றனர். இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகம்செய்யப்பட்ட காலப்பகுதியிலேயே வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் பிரிவினைவாத ஆயுதப் போராட்டமும் தலையெடுக்க ஆரம்பித்திருந்தது.


முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் காலப்பகுதியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலம் வரை இலங்கையில் பதவிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளுக்கும் வடக்கு-கிழக்கின் ஆயுதப் போராட்டம் ஒரு சிம்ம சொப்பனமாகவே இருந்து வந்தது.

ஜனாதிபதியாகவிருந்த பிரேமதாச கொல்லப்படவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மயிரிழையில் குண்டுத் தாக்குதலிலிருந்து உயிர்பிழைக்கவுமாக தமிழ்த் தீவிரவாத போராட்டம் உக்கிரமடைந்திருந்தது. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் ஆரம்ப கட்டத்திலேயே வடக்கு-கிழக்கின் ஆயுத போராட்டம் ஒடுக்கப்பட ஆரம்பித்து, தற்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

இலங்கையில், குறிப்பாக கடும்போக்கான தென்னிலங்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளை மஹிந்த ராஜபக்ஷ அரசு முற்றுமுழுதாக வெற்றிகண்டதை, இலங்கையின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஓம் அம்சமாக கருதுகிறார்கள். இந்நிலையில் இந்த வெற்றிக்குரியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவா அல்லது புலிகளுக்கெதிரான யுத்தத்தைத் தலைமையேற்று நடாத்திய தளபதி சரத் பொன்சேகாவா என்பதே தற்போது இலங்கையின் அரசியல் அரங்கில் எழுந்துள்ள கேள்வியாகவிருக்கின்றது.

முப்பது வருட காலம் எந்தவோர் அரசியல் தலைமையினாலோ அல்லது இராணுவ தலைமையினாலோ வெற்றிகொள்ளமுடியாதுபோன விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்று நான்கு வருடங்களில் வெற்றிகொண்டதாக ஜனாதிபதி ராஜபக்ஷமார் தட்டுகிறார். ஜெனரல் பொன்சேகா இராணுவ தளபதியாகவிருந்து யுத்தத்தை நடாத்தியிருக்கலாம்; ஆனால், அவருக்கு ஒரு பின்புலமாகவும், உரிய உதவி, ஒத்தாசைகளை வழங்கி, அரசியல் ரீதியாகவும் யுத்த வெற்றிக்கு வழியமைத்துக்கொடுத்தது தமது அரசாங்கமே என்று ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்தில், களத்தில் இறங்கி படையினரை வழிநடத்தி, யுத்த வெற்றியைப் பெற்றது தாமே எனவும், தமது இராணுவ ரீதியிலான ஆளுமையையும், அதன் காரணமாக தாம் பெற்றுள்ள முக்கியத்துவத்



தையும் சகிக்கமுடியாத நிலையிலேயே ராஜபக்ஷ அரசாங்கம் தன்னை ஓரங்கட்ட முன்வந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருந்தபோதிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குமிடையே கௌரவப் பிரச்னை வலுவடைந்துள்ளது. இதனை நல்ல ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி, இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி உள்பட, பல எதிர்க்கட்சிகள் ஜெனரல் பொன்சேகாவை தமது பொதுவேட்பாளராக களமிறக்கி, ஜனாதிபதி ராஜபக்ஷவை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிப்பதையே பிரதான நோக்காக கொண்டுள்ளன.


எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் தேதி ஜனாதிபதி தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்ட நிலையில், நடந்து முடிந்த விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம், அது குறித்து இதுவரை வெளிவராத பல இரகசிய தகவல்கள் என்பனவை இவர்கள் இருவருக்குமிடையேயான தேர்தல் பிரசாரங்களில் பெருமளவு வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை ஓர் இராணுவ ஆட்சியை நோக்கிச் செல்கின்றதா? சுத்தியின்றி இரத்தமின்றி, பலப்பிரயோகமின்றி ஒரு புதிய பாணியிலான இராணுவ ஆட்சியை நோக்கி இலங்கை நகருகின்றதா? என்பதே அரசியல் அவதானிகளின் கேள்வியாக இருக்கின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளதற்கு அவரது இராணுவ ரீதியான முக்கியத்துவம் மாத்திரமல்ல, எதிர்க்கட்சிகள் சார்பாக ஒரு பலம்மிக்க வேட்பாளர் இல்லாமையும் ஒரு பிரதான காரணமாக இருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி (ஐ.தே.க.) அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எந்தவொரு குறிப்பிடத்தக்க வெற்றியையும் பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் ஓர் ஆளுமையுள்ள தலைமைத்துவம் எதிர்க்கட்சிகளுக்கு அவசியம் என்ற ரீதியிலேயே ஜெனரல் பொன்சேகா ஐ.தே.க. தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பான ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கப்பட்டிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்கள், குறிப்பாக வடக்கு - கிழக்கு, மலையக மற்றும் முஸ்லிம் மக்களுடைய வாக்கு வங்கி வெற்றிகளைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய சக்தியாக இருக்குமென்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், தென்னிலங்கையில் போட்டியாளர்கள் இருவருக்கும் வாக்குகள் எதிரும் புதிருமாக சென்றடையும் பட்சத்தில், சிறுபான்மை மக்களது முடிவுகளே தீர்க்கமான வெற்றிக்கு வழிவகுக்குமென ஜனாதிபதி வேட்பாளர்கள் கருதுகின்றனர். ஆனால், எத்தகைய கோணத்தில், எத்தகைய வாக்குறுதிகளுடன் வடக்கு - கிழக்கு மக்களை இந்த வேட்பாளர்கள் அணுகப்போகிறார்கள் என்பதே பிரதான கேள்வியாக உள்ளது. இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ரெலோ உறுப்பினரான கே. சிவாஜிலிங்கம் எத்தகைய தாக்கத்தை இத் தேர்தலில் ஏற்படுத்தப்போகிறார் என்பதும் கவனிக்கத்தக்கது.

வடக்கு - கிழக்கு மக்கள் இந்த தடவை தேர்தலில் முன்னொருபோதுமில்லாதவாறு சுதந்திரமாக, கட்டுப்பாடுகளின்றி வாக்களிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். எது எப்படியிருந்தபோதிலும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் முன்பொருபோதுமில்லாதவாறு காரசாரமானதாக களை கட்டும் என்பதையே குறிப்பிட்டுச் சொல்லமுடிகிறது. ■



# இனியும் ஓர் அழிவு வேண்டாம்

**ஆபத்தான நிலைமைகளும், கெடுபிடிகளுமான சூழ்நிலைக்கு தள்ளிவிடக்கூடிய நடவடிக்கைகளில் கவனமாக இருக்கவேண்டிய அவசியம் எமக்கு உண்டு**

செவ்வி | த. சித்தார்த்தன்

இலங்கையில், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுள் 'மிகச் சிறந்த மனிதர்' என்று எல்லோராலும் விரும்பப்பட்டவர் மானிப்பாய் தொகுதியின் திரு வி. தர்மலிங்கம்.

'தர்மர்' என்றே போற்றப்படும் அவரது பண்பான குணம் மாத்திரமன்றி, உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் கொள்கைகளில் அவரின் தீர்க்கமும் அவருக்கு இந்த மதிப்பை ஏற்படுத்தின.

இலங்கையின் கடந்த மூன்று தசாப்தகால சிக்கலான அரசியல் நிலைமைகளில், நடைமுறை அரசியல் எப்படியிருந்தாலும், தந்தைமீதானதுபோன்ற இந்த ஒரு மதிப்பு, புதல்வர் சித்தார்த்தன்மீதும் பலருக்கும் உண்டு. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவராக அதன் செயல்பாடுகளுக்கு அப்பால், எப்பொழுதும் ஒரு தெளிவான - நேர்மையான - நீதியான அரசியல் கருத்து திரு சித்தார்த்தனுடையது.

மாலி

## எம்முடைய மக்கள் எம்முடைய பகுதிகளில், தங்களுடைய அலுவல்களை தாங்களே, மத்திய அரசின் இடையூறின்றி கவனிக்கின்ற ஒரு தீர்வு நமக்கு வேண்டும்

**ஐம்பது ஆண்டுகளாக, உங்கள் சிறுபராயத்திலிருந்தே இலங்கை அரசியலில்; இலங்கைத் தமிழர்கள் அரசியலில்; அரசியல் நடவடிக்கைகளில்; மிக நெருக்கமான தொடர்பும் ஈடுபாடும் கொண்டவர் நீங்கள். 1961ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டதிலிருந்து, தமிழரசுக் கட்சியினதும், தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியினதும் பல்வேறு நடவடிக்கைகளிலும், கட்சியின் மாநாடுகளிலும் பங்குகொண்டதுடனல்லாமல், பல அரசியல் நடவடிக்கைகளின் பின்னணிகளையும் தெரிந்துகொள்கின்ற வாய்ப்பையும் பெற்றிருந்தவர் நீங்கள். தமிழர்களுடைய இந்த சாத்வீக போராட்டம் ஆயுத போராட்டமாக மாறியபோது, அதிலும் ஒரு வலுவான இடத்தை வகித்துவந்தவர் நீங்கள். இந்த ஆயுத போராட்ட காலத்தையும், பொதுமக்கள் தரப்பிலும், போராளிகள் தரப்பிலும் மற்றும் அரசியல் தரப்பிலும் முழுமையாக தெரிந்தவர் நீங்கள். ஆக, இந்த பின்னணியில், இலங்கைத் தமிழ் மக்களுடைய இன்றைய நிலையை எப்படி நீங்கள் வர்ணிப்பீர்கள்?**

**சித்தார்த்தன்:** என்றுமேயில்லாதவிதத்தில், எல்லாவிதத்திலுமே மிகவும் நலிவடைந்துபோன ஒரு சமூகமாக எமது மக்கள் ஆகிவிட்டார்கள். கல்வியில், பொருளாதாரத்தில் ஏற்பட்ட நலிவு ஒருபுறமிருக்க, சனத்தொகையில் ஏற்பட்ட நலிவும் மிகவும் முக்கியமானது. சுமார் 40 வீதமான மக்கள் இங்கிருந்து வெளியேறிவிட்டார்கள்; இவர்கள் திரும்பி வரமாட்டார்கள். இப்போதும், தமது பிள்ளைகளை எப்போது, எப்படி வெளிநாட்டுக்கு அனுப்பலாம் என்ற எண்ணமே பெற்றோர் மனதிலும், தாம் எப்படி வெளிநாடு செல்லலாம் என்ற எண்ணமே ஒவ்வோர் இளைஞர் மனதிலும் இருக்கிறது. இந்த மனப்பாங்கு தமிழர் மத்தியில் ஏற்பட்டுவிட்டது.

இதுதவிர, யுத்த அழிவு மனோ ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு மிகப்பெரிது. அண்மையில், ஓர் ஏழு மாத குழந்தையின் தாயைப் பார்த்தேன். அந்தத் தாய்க்கு இரண்டு கைகளும் முழங்காலுக்கும் மேலாக ஒரு காலும் இல்லை. கணவனுக்கும் முழங்காலுக்கும் மேலாக ஒரு கால் இல்லை. ஒரு மருத்துவ கல்லூரி மாணவனுக்கு இரண்டு கால்களுமில்லை. இவர்களைப்போல, அவயவங்களை இழந்தவர்கள் எத்தனையோ பேர். இப்படியாக, மிகப்பெரும் அழிவை எமது இனம் சந்தித்திருக்கிறது. இனியாவது இந்த அழிவை நாம் தவிர்க்கவேண்டும். போராட்டத்தில் அழிவு தவிர்க்கமுடியாதது என்று சொல்லக்கூடும். ஆனால், அழிவுதான் போராட்டமல்ல. 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து, 'தனிநாடு' என்பது சாத்தியமற்றது; ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் ஒரு தீர்வை நாம் காணவேண்டும்; இந்தியாவை மீறி நாம் எதனையும் சாதித்துவிட முடியாது என்பதை நாம் (புளொட்) தெளிவாக கூறினோம். ஓர் அரசியல் தீர்வை வற்புறுத்தினோம்.

ஆனால், தனிநாடு தவிர்ந்த எந்தவொரு தீர்வுக்கும் விடுதலைப் புலிகள் ஒத்துவரமாட்டார்கள் என்பதை தந்தரோபாயமான ஒரு சாட்டாகவைத்து, அரசாங்கங்கள் அனைத்தும் பிரச்னைக்கான தீர்வை பின்தள்ளிவந்தன. இந்தியா போன்ற வெளிநாடுகளுக்கும், மற்றும் அரசியல் தீர்வொன்றைப்பற்றிப் பேசும் எவருக்கும் இலங்கை அரசு இதையே கூறிவந்தது. விடுதலைப் புலிகளும் ஒரு கட்டத்தின்பின்னர் மக்களைவிட இயக்கத்தின்மீதுதான் அதிக அக்கறைகொண்டார்கள். இதற்கு மக்களும்கூட ஒருவிதத்தில் காரணமானவர்கள்தாம். மற்றைய இயக்கங்கள்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை களிப்பாக கொண்டாடியவர்களும் இருக்கிறார்கள். ஆனால், இதற்காக மற்றைய இயக்கங்கள் பிழைவிடவில்லை என்று நான் கூறவில்லை. பிழைகள் எல்லோரிடமுமே இருந்திருக்கின்றன.

**கேள்வி: இன்றைய இந்த நிலை ஏன், எப்படி ஏற்பட்டது என்பது பற்றிய தெளிவு - பார்வை அவசியமில்லையா?**

**சித்தார்த்தன்:** யுத்தம் இதற்குக் காரணம். ஆனால், ஆயுத போராட்டம் தொடங்கப்படுவதற்கான முழுமையான ஒரு தேவை - நியாயம், அது தொடங்கப்பட்ட வேளையில் நிச்சயமாக இருந்தது. அது தொடங்கப்பட்டது பிழை என்று ஒருபோதும் கூறமுடியாது. ஆனால், அந்த ஆயுத போராட்டம் முறையான ஒரு திசையில் செல்லவில்லை. விடுதலைப் புலிகள் தாங்களே தமிழ் மக்களின் 'ரட்சகர்கள்' என்ற விதத்தில், தம்மை நிலைநாட்டுவதில் செயல்பட்டார்கள். தாமே 'ஏக பிரதிநிதிகள்' என்றும், தாமே தமிழ் மக்களின் 'ஒரே சக்தி' என்றும் அவர்கள் ஏற்படுத்திய நிலைமை, அவர்கள் ஒழிக்கப்பட்டதும் இனத்தைப் பலவீனப்படுத்தியது. அவர்களுடைய இந்த போக்கை இலங்கை அரசும் சாதகமாக பயன்படுத்தி உலக அரங்கில் பிரசாரம் செய்கிறது. மக்களும், தாம் கைப்பற்றப்பட்ட மக்களாக - யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டவர்களாக ஒரு மன உணர்வைக் கொள்கிறார்கள்.

'மக்கள் சக்தி' என்பது வெறும் சுலோகமாக இருந்ததே தவிர, மக்களுக்கு விடுதலைப் புலிகள் எந்தவோர் இடமும் அளிக்கவில்லை. அவர்கள் தமது பிள்ளைகளை கொடுக்க வேண்டும்; வேண்டிய வேலைகளைச் செய்யவேண்டும்; விதிக்கின்ற கட்டளைப்படி நடக்கவேண்டும். இதுதவிர, மக்களின் கருத்துக்கள் ஒருபோதும் செவிமடுக்கப்படவில்லை. வெறும் பார்வையாளர்களாக அவர்கள் வைக்கப்பட்டார்களேதவிர, மக்களின் ஆரோக்கியமான பங்களிப்பு இருக்கவில்லை. மக்களுடன் இருந்து போராடுவது வேறு. ஆனால், மக்களைப் பணயமாகவைத்து போராடுவதென்பது மோசமானது. முள்ளிவாய்க்காலில் - எண்ணிக்கையை சரியாக கூறமுடியாவிட்டாலும், மிகப்பெருமளவு எண்ணிக்கையில் மக்கள் உயிரிழந்தார்கள். இது மக்களைப் பணயமாக வைத்து - கேடயமாக வைத்து ஏற்படுத்தப்பட்ட மிகப்பாரிய மனித அழிவு.

மக்களைக் காப்பாற்றவேண்டியதுதான் எமது கடமை. போராட்டத்தை மக்கள் ஆதரித்தார்கள். ஆனால், ஆரோக்கியமான முறையில் இந்த ஆயுத போராட்டம் முன்னெடுக்கப்படவில்லை. இதற்கு சமுதாயத்திலும் சில பிழைகள் உண்டு.

**கேள்வி: அடுத்த நடவடிக்கை என்ன? அதனை செவ்வனே முன்னெடுக்கக்கூடிய வல்லமை - சக்தி இப்போது இருக்கிறதா?**

**சித்தார்த்தன்:** அண்மையில், சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற அனைத்து தமிழ்க் கட்சிகளினதும் சந்திப்பைச் சாதகமான ஒரு விதத்தில்தான் நான் பார்க்கிறேன். ஒருவரையொருவர் சந்தேக கண்ணோடு பார்த்தவர்கள், ஒருவரோடொருவர் மனந்திறந்து பேசுகின்ற ஒரு நிலையாவது அதில் ஏற்பட்டது. முஸ்லிம்களும், மலையகத்தமிழர்களுமாக, நாமும்

எல்லோரும் இணைந்து, இலங்கையில் ஒரு நியாயமான அரசியல் தீர்வுக்கு வற்புறுத்தும் இந்தியா, மற்றும் சில மேலை நாடுகளும் ஓர் அழுத்தத்தைக் கொடுத்தால், இலங்கையில் அடுத்து பதவிக்கு வரும் அரசு ஒரு தீர்வுக்கு முன்வரலாம். இது, சிங்கள மக்களிடையே ஓர் அரசியல் தீர்வை விரும்பும் ஒரு சாராரிடமிருந்தும் ஓர் அழுத்தம் எற்பட உந்துதலாகும்.

ஆக, ஒற்றுமையான கருத்துடனான ஓர் அழுத்தம் வேண்டும்; அதை நாம் செய்யவேண்டும்.

**கேள்வி; வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுடைய பங்கு என்ன?**

**சித்தார்த்தன்:** வெளிநாடுகளில் இருப்பவர்கள் சரியான ஓர் அரசியல் தீர்வுக்கு முழுமையான பங்கை ஆற்றமுடியும். இந்தியா, மற்றும் நாடுகள் இந்த அரசியல் தீர்வுக்கு இலங்கை அரசை வற்புறுத்தும் விதத்தில், இந் நாடுகளுக்கு இவர்கள் அழுத்தத்தைக் கொடுக்கமுடியும். இங்கு மக்கள் நிம்மதியாகவும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான இந்த முயற்சியையன்றி, தொடர்ந்தும் இங்குள்ள மக்களுக்கு இந்த அவல நிலையை நீடிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் உகந்ததல்ல. விடுதலைப் புலிகளுக்கு விசுவாசமான ஆதரவை நல்கி, வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் கோடிக்கணக்கில் அவர்களுக்கு நிதி உதவினார்கள். இப்பொழுது, சின்னாபின்னமுற்றுள்ள தமது சொந்த இடங்களில் தமது வாழ்வைத் தொடர திரும்பியுள்ள மக்களுக்கு ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அரசு செய்யட்டும் என்று அந்த மக்களை அல்லலுற விடாது, அவர்களின் சுபீட்சத்துக்கு அந்த உதவியை, குறைந்த அளவிலாவது இவர்கள் செய்யலாம். இதை, இங்குள்ளவர்களை நம்ப விரும்பாவிட்டால், நேரடியாகவே அவர்கள் செய்யலாம். பிள்ளை ஒன்றின் கல்விப் பொறுப்பை ஏற்கலாம். இப்படி, பலவற்றை வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் செய்யமுடியும்.

**கேள்வி: வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு, நாடு கடந்த தமிழீழம் என்று புலம்பெயர் நாடுகளில் மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கைகள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

**சித்தார்த்தன்:** உண்மையிலேயே இவை இரண்டும்பற்றி எனக்கு புரியவில்லை. நாடுகடந்த அரசு ஒன்றை பாலஸ்தீன விடுதலை இயக்கம் வேறு நாடுகளின் அங்கீகாரத்துடன் வைத்திருந்தது. ஆனால், இவர்கள் கூறுவது என்ன...? 1976ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் 1977 தேர்தலில் மக்களாணைபெற்று, பாராளுமன்றம்சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றார்கள். ஆனால், அதனை ஜே. ஆர். ஜயவர்த்தன குழப்பியது வேறுவிடயம். பிரிவினைக் கோரிக்கையை சட்டவிரோதமாக்கும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்த தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள், பின்னர் பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணமும் செய்தார்கள். ஆக, இங்குள்ள நிலைமைகளை உணர்ந்துதான், அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்படி, இங்கு முயற்சிக்கப்படுகின்ற சில நடவடிக்கைகளை வெளிநாடுகளில் வசிப்பவர்களின் நடவடிக்கைகள் குழப்பிவிடவும்கூடாது.

வெளிநாடுகளில் எதையும் பேசுவதும் செய்தும் சுலபம். ஆனால், அவை இங்கு மக்களை மேலும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கிவிடலாம். ஒருசிலர் தங்களுடைய சுய லாபங்களுக்காக மக்களை பலியாக்கவும், பகடைக்காய்களாக்கவும் முயலக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

**கேள்வி: நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்ன?**


**சித்தார்த்தன்:** ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத் பொன்சேகா ஆகிய இருவரில் எவரையுமே நாம் பெரிதாக நம்புவதற்கில்லை. சரத் பொன்சேகா இராணுவ பின்னணியைக்கொண்டவர். என்னசெய்வார்; அரசியலில் அவரது நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பது பொதுவாக எவருக்கும் தெரியாது. அதேவேளை, முழுநடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் ஒரு விடயத்தைக் கூறமுடியும். முகாம்களில் உள்ள மக்களை கூடியவிரைவில் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்புவேன் என்று அவர் கூறிவந்ததை உலக நாடுகளே பல நம்பவில்லை. ஆயினும், எமக்கு அவர் அதை உறுதியாகவே கூறிவந்தார். அது இப்போது நிறைவேற்றப்பட்டுத்தான் வருகிறது. பூரணமான மகிழ்ச்சியுடனில்லாவிட்டாலும், ஓரளவு சந்தோஷத்துடனும் சுதந்திரத்துடனும் தாம் இருப்பதாக, முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட அந்த மக்கள் கூறுகிறார்கள்.

இந்தவிதத்தில், ஏதோவொரு விதமான அதிகார பரவலாக்கல் பற்றியும் ராஜபக்ஷ உறுதியாக கூறிவருகிறார். ஆகவே, அதனையும் அவர் செய்வார் என்று பொதுவாக எதிர்பார்க்கலாம். ஆக, இந்த அடிப்படையில், மஹிந்த ராஜபக்ஷவை நாம் இந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரிக்கலாம் என்று முடிவுசெய்துள்ளோம்.

**கேள்வி: ஆயுத போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது நியாயமானதே என்றும், எனினும், ஒன்றுபட்ட இலங்கையின்கீழான ஒரு தீர்வுதான் சாத்தியமாகக்கூடியது என்றும், இப்போது, ஆயுத போராட்டம் தோற்கடிக்கப்பட்டு, பலவிதத்திலும் பலவீனமுற்றுள்ள நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு தீர்வை முன்வைக்கக்கூடும்; அது என்னவென்று பார்க்கலாம் என்றும் கூறுகிறீர்கள். ஆனால், இப்போதும், எத்தகைய ஒரு தீர்வை நீங்கள் வற்புறுத்துவீர்கள் அல்லது விரும்புவீர்கள்?**

**சித்தார்த்தன்:** ஜே. ஆர். ஜயவர்த்தன காலத்தில் இந்தியாவின் பெருமளவிலான ஆதரவும் அழுத்தமும் எமக்கு சார்பாக இருந்தவேளையில்கூட, 13ஆவது திருத்தச் சட்டத்தைத்தான் ஏற்படுத்த முடிந்தது. முழுமையான தீர்வாக இல்லாவிட்டாலும், தீர்வுக்கான ஒரு தொடக்கமாக தமிழர் தரப்பில் அது கருதப்பட்டது. எனினும் அதனைக்கூட, பெருந்தொகையான இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் நிலைகொண்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜயவர்த்தன பாராளுமன்றத்தில் கொண்டிருந்தவேளையிலும் முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. அதனை அமுல்படுத்துவதற்கு ஜயவர்த்தன விரும்பவில்லை. பின்னர், ஆயுத போராட்டத்தில் அதைவிட அதிகமான, மிக நியாயமான தீர்வை எட்டியிருக்கக்கூடிய பல சந்தர்ப்பங்களை நாமாக தூக்கி எறிந்தோம்.

இந்த நிலையில், இனி எந்தவோர் அரசும் மூன்றில் இரண்டு பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெறுமென்றோ அல்லது 13ஆவது திருத்தச்சட்டத்துக்கும் மேலாக மிகப்பெருமளவில் எதனையும் வழங்க முன்வருமென்றோ நான் பொதுவாக நம்பவில்லை. ஆனால், எத்தகைய தீர்வு என்பதை ஒரு பெயரிட்டு சொல்வதைவிட, எம்முடைய மக்கள் எம்முடைய பகுதிகளில், தங்களுடைய அலுவல்களை தாங்களே, மத்திய அரசின் இடையூறின்றி கவனிக்கின்ற ஒரு தீர்வு நமக்கு வேண்டும். ■


Rathy Jewellers
&
Silk House
Opening Hours
Monday - Saturday
10.30am - 6.30pm
Sunday
12noon - 6.30 pm
28 Ealing Road, Wembley, Middlesex HA0 4TL
Tel : 020 8903 3063 Fax : 020 8903 9711

# புதிய 'தெலுங்கானா'

## நாட்டு நலனா, அரசியல் நலனா?

ஆர். நடராஜன்



கே. சந்திரசேகர ராவ்

ஆந்திர பிரதேசம் ஆத்திரப் பிரதேசமாகிவருகிறது. சென்னை ராஜதானியிலிருந்து எங்களைப் பிரித்துத்தாருங்கள் என்று கேட்டு பிரிந்துசென்றவர்கள், இப்போது அவர்களில் ஒருபிரிவினர் பிரிவினை கேட்கும்போது வழங்க மறுக்கிறார்கள். என்ன நியாயம், இந்த நியாயம்!

நள்ளிரவில் ஒரு சிறு ரயில் நிலையத்தில் ரயில் நிற்கிறது. ஒரு பெட்டியின் கதவைத் திறக்க முயல்கிறார்கள் இரு பயணிகள். உள்ளே இடமில்லை என்று பெட்டிக்குள்ளே இருப்பவர்கள் முரண்டு பிடிக்கிறார்கள். கெஞ்சிக் கூத்தாடி, 'ஐயா, நீங்கள் திறக்காவிட்டால் நாங்கள் கீழே விழுந்து இறந்துவிடுவோம்' என்று சொல்ல, உள்ளே இருப்பவர்கள் இரக்கப்பட்டு கதவைத் திறந்து அவர்களை அனுமதித்தார்கள். அடுத்த ஸ்டேஷனில் இரண்டு பயணிகள் கதவைத் தட்டி, 'திறவுங்கள், திறவுங்கள்' என்று கேட்டபோது, முடியாது; 'இங்கே கதவைத் திறப்பதற்குக் கூட இடமில்லாமல் நெருக்கடி' என்று உள்ளேயிருந்து இரண்டுபேர் உரக்கக் கூவுகிறார்கள். அந்த இரண்டு பேர் வேறு யாருமில்லை; முந்திய ஸ்டேஷனில் ஏறியவர்கள்தாம்.

இதுதான் இன்றைய ஆந்திர பிரதேசம். ஹைதராபாத் நிஜாமுக்கு நெருக்கடி கொடுத்து, அவரது சமஸ்தானத்தை சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தியாவுடன் சேர்த்தவர் சர்தார் வல்லபாய் படேல். இப்படியெல்லாம் நடக்குமென்று ஊகிக்க முடிந்திருந்தால் அவர் அன்றே தெலுங்கானாவைத் தனி மாநிலமாக்கியிருப்பார். நிஜாமுக்கு மரியாதைசெய்வதாக தெரிவித்து, மொழிவழி மாநிலங்கள் என்பது அப்போது கொள்கையாக இருந்தபடியால் தெலுங்கானாவை ஆந்திராவுடன் சேர்ப்பது இயல்பானதே என்று படேல் கருதினார். அவரது ஆன்மா பாவம், இன்று தவித்துக்கொண்டிருக்கும்.

நாட்டின் பிரிவினைக்கு இன்று மொழி மட்டுமல்லாமல் வேறுபல காரணங்களும் உண்டு. அரசியலில் ஒருவர் வளர்ந்துவிட்டால் தன் தலைவரின்கீழ் பணிபுரியமாட்டார்; தனிக் கட்சி தொடங்குவார். தனிக் கட்சிமட்டும் போதுமா? ஏதாவது குறுகிய பிரதேச உணர்வை வளர்த்துவிட்டு பிழைக்க வேண்டும். என்னதான் செய்தாலும் ஆட்சியைப் பிடிக்கமுடியாது என்ற நிலையில் பாகப்பிரிவினை கேட்க வேண்டும். குடும்பங்களிலேயே 'அப்பனாவது மகனாவது, கொடு என் பங்கை' என்று, கோர்ட்டுக்குப் போவதோ, கொலை செய்வதோ சகஜமாகிவிட்ட இக் காலகட்டத்தில், சுயநல உணர்வை மட்டும் பிரதானமாகக்கொண்ட அரசியலில் வேறு எதை எதிர்பார்க்கமுடியும்?

உத்தர பிரதேசம் மூன்றாகப் பிரிவதற்கு ஓரளவுக்கு எதிர்ப்பு இருந்தாலும் அது அடக்கப்பட்டது. இப்போது, உத்தர பிரதேச மாநில முதல்வரான மாயாவதியே அதிலிருந்து ஒரு பகுதியை தனியாகப் பிரித்துவிடவேண்டும் என்று கோரிக்கைவிடுகிறார். அந்தப் பகுதியில் சாதகமான வாக்காளர்கள் இல்லையென்று நினைக்கிறாரோ என்னவோ? அதுமட்டுமல்ல, இந்திய அரசுக்கு தன்னால் முடிந்த தலைவலியைக் கொடுக்கும் உத்தியாகவும் இருக்கலாம்.

இதேபோல, தமிழ்நாட்டை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கை அவ்வப்போது எழும். இப்போது அறிக்கையாக எழுந்தது. உடனே, முடியாது என்று ஒரு போடு போட்டுவிட்டார் முதல்வர் கருணாநிதி. இனிவரும் சட்டசபைத் தேர்தலில் இந்தப் பிரிவினை கோஷத்தை ஏதாவது ஒரு கட்சி முன்வைத்துப் பிரச்சாரம் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதேபோக்கில் போனால் தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளாகப் பிரிக்கலாம். மொத்த இந்தியாவை 56 தேசங்களாகப் பிரிக்கலாம். எதற்கு வாங்கினோம் சுதந்திரம்? நாடு வளர்வதற்கா? அரசியல்வாதிகள் வளர்வதற்கா?

எல்லா அரசியல்வாதிகளுக்கும் நாடுமுழுவதும் செல்வாக்கில்லை என்ற கட்டம்போய், மாநிலம் முழுவதும்கூட இல்லை என்றாகிவிட்டது. பிறகு, கட்சித் தலைவர்கள் எப்படியாவது ஆட்சித் தலைவர்களாக ஆக வேண்டுமென்றால் மண்ணைப் பிரித்துக் கொடுக்கவேண்டியதுதான். வேறு வழி..?

சரி, அதிலும்தான் என்ன தவறு? எப்போதோ சொன்னார் ராஜாஜி, மொழிவழி மாநிலங்கள் வேண்டாம் என்று. இந்தியாவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மத்திய பகுதி என ஐந்தாகப் பிரிக்கலாம் என்றார். யார் கேட்டார்கள்? மதிப்புக்குரிய அப்போதைய அரசியல் தலைவர்களே சிறிய வட்டங்களில் மட்டுமே தமக்கு செல்வாக்கு இருக்கிறது என்பதை உணர்ந்ததால் மொழிவழி மாநிலங்களுக்கு ஆதரவளித்தார்கள், அவரவர் மண்ணில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள. அடுத்த தலைமுறைத் தலைவர்களுக்கு மாநிலச் செல்வாக்கு மட்டுமே இருந்தது. அப்படித்தான் இருக்கவேண்டும் என்று நினைத்த அப்போதைய பிரதமரும் காங்கிரஸ் கட்சித் தலைவியுமான இந்திரா காந்தி, தேசியத் தலைவர்கள் வளரவிடாமல் என்னென்னவெல்லாமோ செய்தார். அதனால், மாநில தலைவர்கள் வளர்ந்தார்கள். மாநிலத் தலைவர்களின் குறி நாடு அல்ல, தத்தம் மாநிலங்களே. அதில் வலுவாக இருந்தால் போதும். நாடாளுமன்றத் தேர்தலில் ஒப்புக்கு கொஞ்சம் பங்கு கொண்டால் போதும் என்று நினைத்துவிட்டார்கள்.

அடுத்த கட்டத்தில் மாநிலத் தலைவர்களுக்கு எத்தனை மாவட்டங்கள் தம் கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்பதிலேயே கவனம் சென்றது. மாநிலத்தை ஆளும் தலைவர்களைத் தவிர, மற்றையவர்கள் மாவட்டச் செல்வாக்கை மட்டும் தக்கவைத்துக் கொண்டு அதைத் தேர்தல்களின்போது பெரிய கட்சித் தலைவர்களுக்கு மாற்றி மாற்றி அடகு வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆந்திராவின் தெலுங்கானா பிரிவினைப் பிரச்னை இவர்களை இப்போது தூண்டிவிட்டுள்ளது. இனி, சிறுசிறு கட்சித் தலைவர்கள் எல்லோரும் தைரியமாக பிரிவினை கேட்பார்கள். முடியாது என்று சொல்லும் தைரியம் தலைவர்களுக்கு இல்லாமல் போயிற்று; ஏன்? பெரிய தலைவர்களுக்கென்று நிர்ப்பந்தங்கள் உண்டு. அவர்களும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஏதாவது வாக்குறுதி கொடுத்துவிடுகிறார்கள். அதைக் காப்பாற்றாமல் இருக்க என்னென்னவோ செய்கிறார்கள். முடியாத சமயத்தில் விட்டுக்கொடுத்துத் தம்மை காப்பாற்றிக்கொள்கிறார்கள். தெலுங்கானா - சோனியா விஷயத்தில் இதுதான் நடந்தது.

ஆந்திர பிரதேச தேர்தலில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது சோனியா தெலுங்கானா பிரச்னையை சாதகமாக பரிசீலிப்பதாக சொல்லியிருக்கிறார். காங்கிரசே மீண்டும் பதவிக்கு வந்தும் உடனே எதுவும் செய்யவில்லை. ஒருவேளை, காங்கிரஸ் வராமல் தெலுங்கு தேசமோ, சிரஞ்சீவியின் புதிய கட்சியோ ஆட்சிக்கு வந்திருந்தால் காங்கிரசே தெலுங்கானா பிரச்னையை மறைமுகமாகத் தூண்டிவிட்டிருக்கும். ஜெயித்தபிறகு யார் வாக்குறுதியைக் காப்பாற்றுவார்கள்? ஆக, சோனியா காப்பாற்றவில்லை. காரணம், ராஜசேகர ரெட்டி வலுவான முதல்வராக இருந்தார். வளமான முதல்வர்கள் எல்லோரும் வலுவான முதல்வர்களே!

ராஜசேகர ரெட்டி அகால மரணமடைந்தார். அவரது மகன் ஜெகன் மோகன் ரெட்டி முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டார். கிழவர்களுக்கே பதவி ஆசை போய்விடவில்லை. பெயர் ‘ஜெகன்’ என்றிருந்தாலும் ஆந்திர மோகன் ரெட்டியாகவில்லை. அவர் முதல்வரின் மகன்தானே. பிரதமரின் மகனாக இருந்திருந்தால் சாவுக்குப் பின் பிரதமராகியிருப்பார். அவரது கோஷ்டி ஒன்று; முதல்வர் ரோசய்யாவின் ஆதரவு கோஷ்டி, எதிர்ப்புக் கோஷ்டி என்று இரண்டு. இதுதான் சரியான நேரம் என்று சந்திரசேகர ராவ் மீண்டும் தன் தெலுங்கான போராட்டத்தை தொடங்கினார். இம்முறை விபரீதமாக சாகும்வரை உண்ணாவிரதம் என்று, பதினொரு நாள்கள் உண்ணாவிரதமிருந்தார்.

பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததால் ஆந்திர பிரதேசம் பிறந்தது. சந்திரசேகர ராவும் அப்படி உயிர் நீத்தால் தெலுங்கானா பிறக்கும். அவர் பெயரைச் சொல்லி தாம் கல்லா கட்டலாம் என்று அவரை அடுத்த தலைவர்கள் நினைத்தார்கள். டெல்லியில் ‘மகாராணியின் தர்பார்’ கூடியது. அதுதான், சோனியா தலைமையில் கட்சி ஆட்சிக்குழு. கொள்கை அளவில் தெலுங்கானா ஜனிக்க ஆதரவு என்றது. சட்டசபை அதன் சாந்தி முகூர்த்தத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றது.

இங்கேதான் யாரும் எதிர்பாராத சம்பந்தி சண்டை வெடித்தது. காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்களே சோனியாவின் முடிவுக்கு எதிராக திரண்டார்கள். பதவிகளை ராஜினாமா செய்தார்கள். தெலுங்குதேச எம். எல். ஏ.க்களும் தெலுங்கானா உருவாவதை விரும்பவில்லை. அதனாலென்ன, அந்தப் புதிய மாநிலம் உருவாவது தாமதப்படுமே ஒழிய, பிரச்னை தவிர்க்கப்படுவதற்கில்லை. ஒருவேளை, தெலுங்கானா, ராயலசீமா, கடலோர ஆந்திரா என்று ஆந்திரா இனி மூன்றாகப்பிரியலாம். காலப்போக்கில் வேறுவழியிருப்பதாக தெரியவில்லை; ஏன்?

அதன் காரணம் நாற்பது வருடங்களுக்கு முன்பு, பழுத்த தேசியவாதி ஜே. பி. கிருபலானி கேட்ட கேள்வியில் இருக்கிறது. காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு எல்லோரும் டெல்லி சென்றோம். ஒரு தேசிய ஒருமைப்பாடு மாநாட்டில் பங்குகொண்டோம். டெல்லியில் அப்போதைய ஜனாதிபதி சாகிர் ஹுசேனையும் பிற தலைவர்களையும் சந்தித்தோம். அப்போது கிருபலானி மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்: “இந்தியாவின் தேசிய தலைவர் யார்?'' ஒவ்வொரு மாநில மாணவரும் ஒவ்வொருவராக பெயரைச் சொல்ல, கிருபலானி கேட்டார்: “சரி, நீங்கள் எல்லோருமாக ஒரே தலைவரை சொல்லவில்லையே, ஏன்? நீங்கள் சொல்லும் தலைவருக்கு அவரது மாநிலம் தவிர வேறெங்கே செல்வாக்கு?'' எங்களால் அன்று சரியாக பதில்சொல்ல முடியவில்லை. இன்றும் யாரும் அந்தக் கேள்விக்கு சரியாக பதில் சொல்லிவிட முடியாது. அதுவே இந்தியாவின் தேசிய ஒருமைப்பாடு.

சொந்த மாநிலத்தில்கூட முழுமையான செல்வாக்கு இல்லாமல் ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களில் மட்டுமே செல்வாக்குள்ள தலைவர்கள் இன்று ஏதேதோ பிதற்றித்திரிகிறார்கள். நாட்டை ஆளும் தேசிய உணர்வுள்ள வலுவான தலைமை இல்லை. தேசிய தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் மாநிலங்களால் தாங்கப்படுகிறார்கள். மாநிலத் தலைவர்கள் மாவட்டங்களால் தாங்கப்படுகிறார்கள்.

ஆகவே, தலைமை இப்படிச் சிறுத்துப் போவதால் அடுத்த சில வருடங்களில் மாவட்டங்கள் எல்லாமே மாநிலங்கள் என்று மாறும் நிலைமை உண்டாகலாம். பின்னர், தாலுகாத் தலைவர்கள் மட்டுமே மிஞ்சுவார்கள். அப்போது தாலுகாக்களும் மாநிலங்களாகும். இன்று, பிரதேசத் தலைவர்கள் கூட இல்லை. குட்டிப் பிரதேசத் தலைவர்கள்தான் தமக்கென்று அவர்களின் குட்டிப் பிரதேசங்களைக் கேட்கிறார்கள். சுதந்திர இந்தியா வளரவளர, குட்டி, குட்டித் தலைவர்கள் வளர்வார்கள். அவர்கள் பெரியவர்கள் ஆவார்கள். ஆனால், நாடு...? ■

பராக் ஒபாமா

# சர்வதேச நிலைமைகளை மாற்றவல்ல வல்லமை

## "உனக்குக் கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பைப் புரிந்துகொண்டு செயல்படு" -கடோபநிஷதம்

டி. ஐ. ரவீந்திரன்


அமெரிக்க அதிபர் பராக் ஹுசேன் ஒபாமாவுக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசு பற்றிய செய்தி வெளியானதும் பலரால் அதை நம்பமுடியவில்லை என்பதுதான் உண்மை. அமெரிக்காவிலிருந்து வெளிவரும் சர்வதேசப் பத்திரிகைகளான வாஷிங்டன் போஸ்ட், லொஸ்ஏஞ்சல்ஸ் ரைம்ஸ், ரைம் போன்றவை இந்த முடிவை ஆதரித்து எழுதவில்லை. அமைதிக்கான நோபல் பரிசு ஒபாமாவுக்கு வழங்கப்பட்டதைப்பற்றிய இவற்றின் கருத்துக்கள் ஒன்றில் கிண்டலாகவோ அல்லது எரிச்சலை வெளிப்படுத்துவனவாகவோதான் இருந்தன.

நோபல் பரிசு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1895. இதை தோற்றுவித்த அல்பிரட் நோபல் எப்படிப்பட்டவர்களுக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்படவேண்டும் என்பதை தனது உயிலில் எழுதிவைத்தார். அதன்படி, 'நாடுகளிடையே சகோதரத்துவம், நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தவும் அவற்றை தொடர்ந்து பேணவும் அமைதி மற்றும் சமாதான உடன்படிக்கைகளை ஏற்படுத்தி, அதற்கு இசைவாக படைபலத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு யார் வெற்றிகரமாகச் செயல்படுகிறார்களோ, அவர்களுக்கே அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படவேண்டும்'.

நோபல் பரிசு என்பது சமாதானம், பௌதிகம், இரசாயனம், உடற்றொழிலியல் அல்லது மருத்துவம், இலக்கியம் ஆகியவற்றுக்காக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு துறையிலும் பரிசு பெறுபவர்களைத் தேர்ந்தெடுக்க, அந்தந்தத் துறைகளின் தலைசிறந்த வல்லுநர் குழு அமைக்கப்படும். பெயர்களைப் பரிந்துரைக்க இரகசிய துணைக் குழுக்கள் உண்டு. குறிப்பிட்ட பெயரை யார் பரிந்துரை செய்தார் என்பது தெரியக்கூடாது என்ற விதி இருக்கிறது. ஐம்பது ஆண்டுகள் கழித்துத்தான் இந்தத் தகவல்களை வெளியிடலாம் என்றும் விதி இருக்கிறது. அதாவது, ஒபாமாவின் பெயரைப் பரிந்துரை செய்தது யாரென தெரியவேண்டுமானால் 2059வரை காத்திருக்கவேண்டும்.

மற்றைய துறைகளில் நோபல் பரிசைப் பெறுவதற்கு யாருக்குத் தகுதி இருக்கிறது என்பதை நிபுணர்கள் குழு மூலம் முடிவுசெய்யும் நோபல் கமிட்டி, அமைதிக்கான பரிசை மட்டும், நோர்வே நாட்டு நாடாளுமன்ற

> ‘உலகின் அனைத்து குரூரங்களையும் கஷ்டங்களையும்பற்றிய எமது உயர்ந்த அபிலாஷைகளை உணர்த்தும் விருது இது.
>
> நாம் விதியின் கைதிகள் அல்லர். எமது செயல்பாடுகளில் நீதியின் திசையில் வரலாற்றை திருப்பமுடியும்’



உறுப்பினர்களிலிருந்து இவர் குழுவைத் தேர்ந்தெடுத்து இக்குழுவின் மூலம் தேர்வு செய்கிறது. இந்த ஆண்டு இக் கமிட்டியில் மூன்று இடதுசாரிச் சிந்தனையாளர்களும் இரண்டு வலது சாரிச் சிந்தனையாளர்களும் இருந்தனர். கமிட்டியின் தலைவரான தொப் ஜோன் ஜக்லாண்ட், பரிசை அறிவித்த பின்னர் கூறியது இதுதான்: “ஒபாமாவுக்குப் பரிசு வழங்கப்பட்டதற்கான காரணம், சர்வதேச அளவில் நிலவுகின்ற சூழ்நிலையை, அவரால் மாற்ற முடிந்திருக்கிறது.”

பராக் ஒபாமாவுக்கு முன்னதாக பல அரசு மற்றும் அரசியல் தலைவர்கள் இப்பரிசைப் பெற்றிருக்கின்றனர். ஹென்றி கீஸிங்கர், நெல்சன் மண்டேலா, ஆங் சான் சூ கிய், தலாய் லாமா போன்றவர்களுக்கு இது வழங்கப்பட்டிருக்கிறது. இவர்களில் யாருமே அல்பிரட் நோபலின் உயில் வாசகங்களுக்குத் தகுந்தாற்போன்ற செயல்களைச் செய்தவர்களல்லர் என்றே கூறலாம். 1983இல் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற போலந்தின் முன்னாள் அதிபரும் தொழிற்சங்கத் தலைவராகப் பொதுவாழ்வைத் துவங்கியவருமான லெக் வலேசா வேண்டுமானால், இதற்கான தகுதியை ஓரளவு பெற்றிருந்தார் என்றும் கூறலாம். அவர் அமெரிக்காவுடனும் வத்திக்கானுடனும் சேர்ந்து கொண்டு, தனது நாட்டில் ரஷ்ய கம்யூனிசத்தை முடித்துவைத்தவர். இதனால்தான் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை தனது நேரடி அதிகாரத்தில் வைத்திருந்த சோவியத் சிதறுண்டது. அதன் விளைவாக பிளவுபட்டிருந்த ஜெர்மன் ஒன்றுசேர்ந்தது. பல புதிய குடியரசுகள் தோன்றின. இவையெல்லாம் அமெரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகளுக்குச் சாதகமாக இருந்தன என்பது வேறுவிஷயம். ஆனால் ‘பனிப்போர்’ முடிவுக்கு வந்தது. இதற்காகவே அவர் நோபல் பரிசுக்குத் தகுதி உடையவராக கருதப்பட்டார்.

1964இல் நோபல் பரிசு பெற்ற கறுப்பினத் தலைவரும் கிறிஸ்தவ மத போதகருமான மார்ட்டின் லூதர் கிங், அவர் போராட்டத்தில் வெற்றிபெறுவதற்கு முன்புதான் பெற்றார். தன் வாழ்நாளில் நாடுகளுக்கு இடையே ஒற்றுமை மற்றும் அமைதிக்காகப் பாடுபட்டார் என்று சொல்ல முடியாவிட்டாலும், தன் இன மக்களுக்காகப் பெரும் துன்பத்தை அநுபவித்த நெல்சன் மண்டேலாவுக்கு, அவரது நாட்டை இனவெறிக் களமாக்கிய பிரிட்டிஷாரை தனது அமைதிப் போராட்டம் மூலம் வெளியேற்றியதற்காகக் கொடுக்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசும் பரவ

லாகப் பாராட்டப்பட்டது. ஆனால், வியட்நாம் போரை 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணியில் முடித்துவைத்த ஹென்றி கிஸீங்கர் எந்தவிதத்தில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற தகுதியைப் பெற்றிருந்தார் என்பது இதுவரை புரியாத புதிர்.

அதேபோல, பர்மிய தலைவரான ஆங் சான் சூ கிய், இராணுவ ஆட்சியினை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து, 14 வருடங்களுக்குமேல் வீட்டுச் சிறையில் பொறுமையாக இருந்ததற்கு நோபல் பரிசைப் பெற்றார் என்று கூறினால் மிகையல்ல. நோபல் பரிசு பன்னெடுங்காலமாக மேற்கத்திய நாடுகளால், நுட்பமான அரசியல் செய்தியை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக, ஆயுதமாகப் பயபடுத்தப்பட்டுவந்திருக்கிறது. பர்மிய தலைவருக்கான நோபல் பரிசு இதற்கு ஓர் உதாரணம். 'பர்மாவின் (மியான்மர்) இராணுவ தலைமை நிர்வகிக்கும் அரசு தங்களுக்குப் பிடிக்கவில்லை' என்பதை மேற்கத்திய நாடுகள் 'சூசகமாக' சொல்லியிருப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டுமாம். அதை அவ்வாறு அந்நாட்டு இராணுவ அரசு எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்கு, இன்றுவரை அங்கு தொடரும் இராணுவ ஆட்சியே சாட்சி.

இன்னோர் உதாரணம், புத்தமத தலைவரும், திபெத்தின் ஆன்மீக, அரசியல் தலைவருமான தலாய் லாமாவுக்குக் கொடுக்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசு. கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்தியாவில் அரசியல் தஞ்சம் பெற்றிருக்கும் தலாய் லாமா, தன் இன மக்களின் முன்னேற்றத்துக்கும் அந்தப் பகுதியில் அமைதி திரும்புவதற்கு எந்த விதத்திலும் உதவ முடியாதவராகவுமே இருந்துவருகிறார். ஆனாலும், சீனாவை வெறுப்பேற்றும் முக்கிய முயற்சியாக தலாய் லாமாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு விமர்சனம் இருந்தாலும், தலாய் லாமாவின் வழிமுறைகள் முழுக்க முழுக்க வன்முறை தவிர்த்ததாக, அமைதியும் சமதானமும் தழுவியதாக இருக்கிறது என்பதால் இந்த தேர்வைப் பலரும் வரவேற்றார்கள்.

அமைதிக்கான நோபல் பரிசைத் தனிநபர்கள்தாம் பெறவேண்டும் என்பதல்ல. அமைதிக்காக உழைக்கும் - பணிபுரியும் செஞ்சிலுவை சங்கத்துக்குக்கூட 1917, 1944 மற்றும் 1963ஆம் ஆண்டுகளில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

இப்போது பராக் ஒபாமாவுக்கு இது வழங்கப்பட்டிருக்கிறது. இவர் அதிபர் பதவிக்கு வந்து ஒன்பது மாதங்கள்கூட ஆகவில்லை. அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்றது 2009 ஜனவரி 20. அவர் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது இதே ஆண்டு பெப்ரவரி 10ஆம் தேதி. அப்படியானால் 20 நாட்களில் அவரது செயல்பாடு அமைதி வழியில் வெற்றியைக் குவிக்கும் அளவுக்கு இருந்திருக்கிறது என்ற முடிவுக்கு யாராலும் வந்திருக்க முடியாது. அமெரிக்காவே தனது அரசின் பலம், அதிகாரம் ஆகியவற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பயன்படுத்தி, இப்பரிசு தனக்கு வரும்படியாக செய்ததா? ஆனால், நோபல் பரிசு அறிவிக்கப்பட்டவுடன் ஒபாமாவினது எதிர்வினை, உண்மையிலேயே ஆச்சரியமடைந்த ஒருவரது எதிர்வினையாகவே இருந்தது. எதிர்பார்த்தது நடந்ததைப்போல இருக்கவில்லை.


அது ஒருபுறம் இருக்க, ஒபாமா உண்மையிலேயே இப்பரிசைப் பெறத் தகுதியற்றவரா? அமெரிக்கா என்கிற நாடு படைபலத்திலும், இயற்கை வளத்திலும், பிற நாடுகளிடையே செல்வாக்கு என்ற வகையிலும், உலகின் போட்டியில்லாத ஒரே நாடாக விளங்குகிறது. இதன் படைத்தளங்கள், ஏதோவொருவிதத்தில் பல்வேறு காரணங்களுக்காக உலகின் 90 வீத நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரே சமயத்தில் இரு பெரும் யுத்தங்களை, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் நடத்திக்கொண்டிருக்கிறது. ஆசிய, ஐரோப்பிய நாடுகள் எவ்வளவுதான் முன்னேறினாலும், அமெரிக்காவில் நடக்கும் நிகழ்வு, அங்கே எடுக்கப்படும் அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகள் உலகின் அனைத்து நாடுகளிலும் எதிரொலிப்பதை இந்நாடுகள் மறுக்கமாட்டா.

ஜோர்ஜ் வாஷிங்டனிலிருந்து இப்போது பராக் ஹுசேன் ஒபாமா வரை அமெரிக்க அதிபராக இருந்த அனைவருக்கும் இந்த விஷயம் தெரிந்தே இருக்கிறது. அதிபராக யார் வந்தாலும், அவர் அமெரிக்காவில் உள்ள உள்நாட்டுப் பிரச்னைகள் பற்றியும், வெளிநாடுகளில் அமெரிக்க செயல்பாடுகள் பற்றியும், அமெரிக்கா உலகுக்கு வழிகாட்டும் 'கடமை'யில் அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகிறது என்பதுபற்றியும் அறிக்கையாக, உரையாக வெளிப்படுத்துவார்கள். எந்த அதிபரும் 'அமெரிக்கா இதுவரை பெற்ற லாபங்களே போதும்; குறிப்பிட்ட பகுதியில் அமெரிக்க தலையீடு இருக்காது' என்று கூறியதே இல்லை. அவர்களது உரை மற்றும் அறிக்கை, புதிய உலகத் தலைவராக, அதிகாரத் தொனியில் அமெரிக்காவின் அடையாளத்தை மறுபதிவு செய்யும் விதத்தில் இருக்கும். இதன் விளைவாக ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகள், ரஷ்யா, சீனா ஆகியவை தங்களது செயல்பாடுகளிலிருந்து சற்றும் விலகாமல் மேலும் உறுதியாக தமது போக்கைத் தொடரும். சர்வதேசச் சிக்கலும் நாடுகளிடையே நம்பிக்கையின்மையும் சந்தேகமும் குறைகூறலும் தொடரும். இதற்கு எந்த நாடும் விதிவிலக்காக இருக்க முடியாது. உலகின் பெரும் சக்தியான அமெரிக்கா முண்டா தட்டிக்கொண்டிருக்கும் வரை இந்த நிலை தொடரத்தான் செய்யும்.

அப்படிப்பட்ட ஒரு நாட்டிலிருந்து முதன் முதலாக உலக அமைதிக்கான குரல் எழுந்திருக்கிறது என்பதுதான் இங்கு கவனிக்கவேண்டியது. அதுவும், அதன் அதிபராகப் பொறுப்பேற்றிருப்பவர் இதைக் கூறியிருப்பது குறிப்பிடத் தகுந்தது. அமெரிக்காவின் எதிரிகளை எச்சரிப்பதுதான் இதுவரையில் அந்நாட்டு அதிபர்களின் வழக்கமாக இருந்தது. ஆனால், ஒபாமாவோ அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார். ஈரான் மற்றும் வட கொரியாவை விரட்டிக்கொண்டிருக்கும் நிலையிலிருந்து விலகி, பேச்சுவார்த்தை மற்றும் கருத்துப் பரிமாற்றம் மூலமாக அணு ஆயுதப் பரவலைத் தடுக்கப்போவதாக அறிவித்திருக்கிறார். ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்படும் என்று அறிவித்துள்ளார். அங்கே நடக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவர பெரும் முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார். கடந்த எட்டு ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் சண்டையை எப்படி நிறுத்துவது என்பதுபற்றி ஆய்வுசெய்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார். இஸ்ரேல் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளை நேரடியாகப் பேசவைத்து, பிரச்னைகளைத் தீர்க்கமுடியுமா என்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

உள்நாட்டில் எழுந்த பொருளாதார நெருக்கடி விஷயத்திலும், மோதல் போக்கு இல்லாமல், நிதானமாக விஷயங்களைக் கையாண்டார். அதற்கான பலன் இப்போது தெரிய ஆரம்பித்திருக்கிறது.

உலக அளவில் இவரது முயற்சிகள் இன்னமும் பெரிதாகப் பலன் அளிக்க



வில்லை என்பது உண்மைதான். ஆனால், அவை அலட்சியம் செய்யப் படவில்லை என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம். அமைதி மந்திரம் ஓதுபவர் சாதாரண மனிதர் அல்லர். அணு ஆயுதம் தாங்கிப் பாயக்கூடிய பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஏவுகணைகளை உலகின் அனைத்து முக்கிய நகரங்களையும் குறிபார்த்துத் தயாராக வைத்திருக்கும் நாட்டின் அதிபர் ஒபாமா என்பது அனைவருக்கும் தெரியும். இதுதவிர, இதே போன்ற சக்தியுள்ள 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வைத்திருக்கும் நாடு அமெரிக்கா என்பதும் தெரியும். எல்லாவிதங்களிலும் மிருகபலத்தை ஒத்த ஆயுத பலம்பெற்ற நாடு அமெரிக்கா என்பதும் உலகம் அறிந்ததுதான். இதன் அதிபர் சமாதானம், அமைதி என்று பேசினால் அதை அலட்சியப்படுத்தாமல் மதிக்கவேண்டும் என்ற புரிதல் ஏற்படச் சிறிதுகாலம் ஆகலாம் ஆனால் இதை இவர் தொடர்ந்து கூறிவந்தால், அதில் ஒரு நம்பிக்கை மற்றையவர்களுக்கு, சம்பந்தப்பட்டவர்களுக்கு, ஏற்படும். இதனால் அமைதிபிறக்க வாய்ப்புகள் இருக்கவேசெய்கின்றன்.

நாடுகளுக்கு இடையேயான விரோதமும் தகராறுகளும் முதலில் கருத்தளவில்தான் தோன்றுகின்றன. ஒரு தரப்பினருக்கு எதிராக இன்னொரு தரப்பினரின் (இனம், மொழி, மதம், தேசிய அடையாளம், நிறம் முதலானவை) கருத்தாக, எண்ணமாக முதலில் உருவெடுக்கும் பேதங்களும் பகைமையும் செயல் வடிவம் பெறும்போது பெரும் போராக, பிரச்னையாக வெளிப்படுகின்றன. அதேபோலத்தான் இப்போது அமைதி என்பது ஒரு வலுவான கருத்தாக, ஒருதரப்பினரின் நோக்கமாக, ஒபாமாவினால் வெளிப்பட்டிருக்கிறது. இதை இந்தச்சமயத்தில் அடையாளம் கண்டுகொண்டு, உலகிலேயே மிகப்பெரிய கௌரவ விருதான அமைதிக்கான நோபல் பரிசை அமெரிக்க அதிபருக்கு வழங்கியதன் மூலம், அவரது எண்ணத்தை, உறுதிமொழியை செயல்படுத்தும் கடமை அவருக்கு இருக்கிறது என்பதை நோபல் கமிட்டி உரக்கக் கூறியிருக்கிறது என்று கருத இடமிருக்கிறது.

கடோபநிஷத்தில் ஒரு வாக்கியம் வரும். "எழுந்திரு, விழித்திரு; உனக்குக் கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பைப் புரிந்து கொண்டு செயல்படு" *(1:3:14)* இதையே வேறுவிதமாக அமெரிக்க அதிபர் பராக் ஹுசேன் ஒபாமாவுக்கு நோபல் குழு சொல்லியிருக்கிறது. ■

**‘ உலக அரங்கில் எனது பணியின் முடிவிலன்றி, தொடக்கத்தில் நான் நிற்கிறேன்.**


**இப் பரிசைப்பெற்ற வரலாற்று மாமனிதர்களுடன் ஒப்பிடுகையில் நான் ஆற்றிய பங்களிப்பு சொற்பமானதே ’**

## இந்திய-சீன எல்லைப் பிரச்னை:


# யுத்தம் இனி இல்லை

### அரசும் இராணுவமும் நம்பிக்கைகொள்ளும்போது இராஜதந்தர மோதல்கள் தொடரவே செய்யும்

கிரீஷ்வரன்



நேரு, காந்தி, சர்தார் படேல்




உலகின் மொத்த சனத்தொகையில் 40வீதத்தை இந்தியாவும், சீனாவும் கொண்டுள்ளன. இரண்டுக்கும் வெவ்வேறு அடையாளங்கள் இருக்கின்றன. உலகின் மிகப்பெரும் சனத்தொகையைக் கொண்ட கம்யூனிச நாடு சீனா. உலகின் இரண்டாவது பெரும் மக்கள் தொகை கொண்ட, மாபெரும் ஜனநாயக நாடு இந்தியா. இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே இருந்துவரும் எல்லைப் பிரச்னை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இந்தப் பிரச்னை இருந்துவருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, அது சந்தித்துவரும் பல பிரச்னைகளை உருவாக்கியது, அல்லது தூண்டிவிட்டது பிரிட்டிஷ்காரர்கள் என்று கூறிவிடலாம். ஆனால், சீனாவுடனான எல்லைப் பிரச்னை மட்டும், பிரிட்டிஷ்காரர்கள் இங்கு வருவதற்கு முன்னரேயே ஆரம்பித்திருந்தது.

இந்தியாவில் மன்னராட்சி இருந்த காலகட்டமான 1834ஆம் ஆண்டில் வட இந்தியா முழுவதையும் ஆட்சி செய்த சீக்கியப் பேரரசு, லடாக் பகுதியைக் கைப்பற்றி தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இதையடுத்து 1841ஆம் ஆண்டில் அதற்குப் பக்கத்தில் இருந்த திபெத்தில், சீக்கியப் படை நுழைந்தது. சீனா இதனை எதிர்த்தது. அதன் பின்னர் ஒப்பந்தம் ஏற்பட்டு, சீக்கியப் படை, திபெத்திலிருந்து வெளியேறியது. 1846இல் அப்போதுதான் ஆசியாவில் காலூன்ற ஆரம்பித்திருந்த பிரிட்டிஷ் பேரரசு, சீக்கிய அரசைத் தோற்கடித்தது.

இந்தக் காலகட்டத்தில் சர்வதேச நிலை எப்படி இருந்ததெனில், ரஷ்ய சாம்ராஜ்யமும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் ஆசியாவில் தங்களை நிலைநிறுத்தப் பார்த்துக் கொண்டிருந்தன. சீனப் பேரரசு இந்த இருபெரும் சக்திகளுடன் தனியாக போரிட்டு வெல்லமுடியாதிருந்தாலும், இருவரில் யாருடன் சேர்ந்தாலும் மற்றையவர்பாடு திண்டாட்டம்தான். ரஷ்யாவும் சீனாவும் ஆசிய பிராந்தியங்களாக இருந்தாலும், நல்லுறவு என்பது இல்லை. ஆனாலும், ஐரோப்பிய நாட்டுக்கு எதிராக இரு நாடுகளும் சேருவதற்கு வாய்ப்புகள் இருந்தன. இதைத் தடுப்பதற்காக பிரிட்டிஷ் அரசு, சீக்கிய பேரரசு கைப்பற்றிய பகுதியை சீனாவுக்கு மறுபடியும் கொடுத்துவிட்டது. ஆனால், அக்சாய் சின் என்ற பகுதியைப் பற்றி இருதரப்பினரும் கண்டுகொள்ளவில்லை.

1865ஆம் ஆண்டு, காஷ்மீர் பகுதியை ஆண்ட ராஜா ஹரிசிங், தனது ராஜ்யத்தின் எல்லைப் புறங்களை வரையறுக்க பிரிட்டிஷ் நாட்டிலிருந்து நில அளவையாளர் ஜோன்சன் என்ப

வரை வரவழைத்து, பணியில் அமர்த்தினார். இவர், பல ஆவணங்கள், ஆதாரங்களின் அடிப்படையில் எல்லையை வரையறுத்தார். இதன்படி அக்சாய்சின், காஷ்மீரத்துக்கு சொந்தமானது என்று அறிவித்தார். அதன்படி எல்லைக்கோடு தீர்மானிக்கப்பட்டது. இதுதான் 'ஜோன்சன் எல்லைக்கோடு'; இதை சீனா ஏற்க மறுத்தது. இந்தப் பகுதி தனது எல்லைப்புற மகாணமான சின்ஜியாங்கைச் சேர்ந்தது என்று சீனா கூறியது. எல்லைப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின. இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, 1892 இல் காரகோரம் பகுதியில் சீனா எல்லைச் சுவரைக் கட்டியது. இதனைப் பிரிட்டிஷ் அரசு எதிர்த்தது.

மறுபடியும் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. சீனாவில் குழப்ப நிலையும், உள்நாட்டு அமைதியின்மையும் ஆரம்பித்த நேரம் அது. இந்த நிலையில், அதிகமாக நெருக்கடி ஏற்பட்டால், ரஷ்யாவின் பக்கம் சீனா சாயும் என்று கணக்கிட்ட பிரிட்டன், அக்சாய்சின்னை சீனாவுக்கு அளிக்க முன்வந்தது; புதிய எல்லைக்கோடு உருவானது. இதுதான் 'மக் கார்ட்னி - மக்டொனால்ட்' எல்லைக் கோடாகும். 1911 இல் சீனாவில் கம்யூனிச புரட்சி ஏற்பட்டது. கம்யூனிசத்தை ஏற்காத பிரிட்டிஷ் அரசு, எல்லைக் கோட்டைப் பொறுத்தவரை ஜோன்சன் கோடுதான் சரியானது என்று கூறியது. இந்த காலகட்டத்திலிருந்து, இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் கொடுத்த 1947 வரை பிரிட்டன் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக, எல்லைக் கோட்டை 11 தடவைகள் மாற்றியது. நெவில் மக்ஸ்வெல் என்ற பிரிட்டிஷ் ஆய்வாளர் இதனைக் கூறுகிறார்.

எது எப்படி இருந்தாலும், மகாராஜா ஹரிசிஸ் உத்தரவுபடி நில ஆய்வு செய்து முடிவு கூறிய ஜோன்சன் கோடுதான் உண்மையான வரையறை என்று இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் புதிய அரசு முடிவு செய்தது. ஆனால், சீனா இதை ஏற்றுக்கொள்ளவில்லை. நேரடியாக எதுவும் சொல்லாமல், 1950களில் இந்திய அரசுக்குத் தெரியாமல் ஜோன்சன் எல்லைக் கோட்டை பல முனைகளில் தாண்டிவந்து, சீன எல்லைப்புற மாகாணமான ஜின்ஜியாங்குடன், திபெத்தை இணைக்கும் சாலையை உருவாக்கியது. இதற்கு முன்பு 1949 ஆம் ஆண்டு, முன்னறிவிப்பு எதுவுமின்றி சீனப் படைகள் திபெத்துக்குள் நுழைந்து ஆக்கிரமிப்பு செய்தன. இதை இந்தியா கண்டிக்கவேண்டும்; ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் படேல், நேருவை வலியுறுத்தினார். இதை நேரு ஏற்றுக்கொள்ளவில்லை. இதுதான் இந்தியா செய்த முதல் தவறு என்று சிலர் கூறுகிறார்கள். திபெத்தை வைத்துதான், அருணாசலப் பிரதேசத்தை தெற்கு திபெத் என்று சீனா இன்றளவும் கூறிவருகிறது. 1954இல் திபெத் சீனாவின் ஒரு பகுதி என்று ஒப்புக் கொண்டு, இந்தியா கையெழுத்திட்டது.

திபெத்துக்கும் இந்தியாவுக்குமிடையே காலம் காலமாக, மதம், சமூகம், பொருளாதாரம், கலாசாரம். இனம், அரசு ஆகியவை தொடர்பான உறவுகள், வியாபாரம் போன்றவை இருந்துவந்தன. ஆனாலும், இந்த நாடு, சீனாவால் விழுங்கப்பட்டபோது இந்தியா எதையுமே செய்யவில்லை. திபெத்தியர்களுக்கும் இந்தியாவில் உள்ள புத்த கயா, சாரநாத், காஞ்சி போன்றவை புனித தலங்கள். அதேபோல, திபெத்தில் உள்ள மானசரோவர் மற்றும் கைலாச மலை ஆகியன இந்தியர்களுக்கு புனிதத் தலங்கள். இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு வருடங்கள்கூட ஆகாத நிலையில், 1949 இல் திபெத்தை சீனா தாக்கி, தன் கையகப்படுத்திக் கொண்டது.

1959 இல் சீனா, இந்தியாவின் எல்லைப் புறங்களில் தாக்குதல் நடத்த ஆரம்பித்தது. இதன் உச்சக்கட்டம் தான் 1962 அக்டோபர் 20இல் நடந்த யுத்தம். இதில் சீனா இந்தியாவை அவமானப்படுத்தும் வகையில் தோற்கடித்தது. சீனா இப்படித் தாக்கும் என்பதை அப்போதைய பிரதமர் நேருவுக்கு பாதுகாப்புப் படைத்தலைவர்கள் எச்சரித்தார்கள். படைகளை நவீனப்படுத்துவது முக்கியம் என்றும் இவர்கள் வலியுறுத்தினர். ஆனால், இதை நேரு கேட்கவில்லை. அதன் பலனை நாடே அநுபவித்தது.

உலக நாடுகளில் எதுவுமே அந்தச் சமயத்தில் இந்தியாவுக்கு ஆதரவுக் கரம் நீட்டவில்லை. அமெரிக்காவும், இந்தியாவின் நட்பு நாடு என்று கருதப்பட்ட ரஷ்யாவும், வெவ்வேறு காரணங்களுக்காக எட்ட நின்று வேடிக்கைபார்த்தன. திபெத்தை சீனா கையகப்படுத்தியதும், அதை இந்தியா வேறு வழியின்றி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டது. இந்தியா தனது உதவிக்கு வரும்; குறைந்த பட்சம் சீன ஆக்கிரமிப்பை எதிர்க்கவாவது செய்யும் என்று திபெத் எதிர்பார்த்தது. இதில் எதுவுமே நடக்கவில்லை. இந்தியாவின் பலவீனமான அப்போதைய இராணுவ அமைப்பு; உள்நாட்டுக் குழப்பங்கள்; எப்படியாவது சமாதானம் என்பதை விரும்பிய அரசியல் தலைமை என்பன சேர்ந்து, நடந்த இந்த அநியாயத்துக்கு இந்தியாவை மௌன சாட்சியாக மாற்றின. அதன்பின் 'அதுதான் நடந்து விட்டதே, ஒப்புக் கொள்ளத் தானே வேண்டும்' என்கிற பாணியில் சீனாவுக்கு ஆதரவாக கையெழுத்துமிடப்பட்டுவிட்டது.

அதே சமயத்தில், உள்ளுக்குள் மறையாமல் இருந்த புகை ஏதாவது ஒரு விதத்தில் வெளியே வருகிறாற் போல், திபெத்தின் மதம் மற்றும் இனத் தலைவரான தலாய் லாமாவுக்கு அரசியல் அடைக்கலமும் பாதுகாப்பும் கொடுத்து, தன்னை ஓரளவுக்கு சமாதானப் படுத்திக்கொண்டது இந்தியா. இதன்மூலம், திபெத்திய விடுதலை என்பது கானல் நீராக முற்றிலும் ஆகிப் போய்விடவில்லை. ஏதோ ஓர் உருவகமாக, நம்பிக்கையாக அது தலாய் லாமாவின் வடிவில் இருப்பதை இந்தியா உறுதிசெய்தது. மேற்கத்திய நாடுகளும், சீனாவை வெறுப்பேற்ற தலாய் லாமாவை இன்றளவும் பயன்படுத்தி வருகின்றன. இப்படியெல்லாம் ஆகும் என்பது சீனாவுக்குத் தெரியும். ஆனால், இதற்குக் காரணமான இந்தியாவுக்கு ஒரு பாடம் புகட்டவேண்டும் என்று சீனா விரும்பியது. ஆனால், பல்லாயிரக் கணக்கில் ஓட்டைகள் இருந்தாலும், கொசுவை உள்ளே விடாமல் கொசுவலை பாதுகாப்பது போலத்தான், ஏறக்குறைய அனைத்து விதங்களிலும் பிரிக்க முடிகிற இந்திய நாடு, ஏதோ ஒரு வகையில், பிரியாமல், வலுவடைந்து வர ஆரம்பித்தது. அதற்கு உலக அளவில் இருந்த மதிப்பு, அணிசேரா நாடுகள் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து செயல்பட்டதால் ஏற்பட்ட பெயர்; எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயகம் என்பதன்மேல் மக்களுக்கு இருந்த நம்பிக்கையால் கட்டுக்கோப்பான ஆட்சி முறை உருவானதுபோன்ற அனைத்து விஷயங்களைக் குறித்தும் சீனாவுக்கு, குறிப்பாக மா சே துங்குக்கு எரிச்சலும், பொறாமையும் இருந்தது. இவற்றை 1962 போரின் மூலம் தீர்த்துக் கொண்டார். இந்தியர்களைப் பொறுத்தவரை சீனா என்பது நம்பத்தகாத ஒரு நாடு என்பதை சீனா 1962 போரின் மூலம் தெளிவாக்கியிருப்பதாகவே நினைக்கிறார்கள். மீண்டும் ஒரு யுத்தம் நடந்தால் இன்றைய நிலையில் பெரும் நாசம் ஏற்படும் என்றாலும், வாய்ப்புக் கிடைத்தால் பட்ட அவமானத்தைத் துடைக்க

இந்திய இராணுவமும் தயாராகக் காத்திருப்பதாகவே தெரிகிறது. இந்த விஷயம் 1980களின் ஆரம்பத்தில் அருணாசலப் பிரதேச எல்லையில் சீன ஊடுருவல் இருந்தபோது வெளிப்பட்டது.

இந்திய எல்லைக்குள் வந்த சீனப் படைகள் அளவில் சிறியனதான். ஆனால், இதற்கு எதிர்வினையாக அன்று இராணுவத் தலைவராக இருந்த ஜெனரல் சுந்தர்ஜி செய்தது என்ன தெரியுமா? இருபெரும் படைப் பிரிவுகளையும், ஆயுதங்களையும் உடனடியாக அருணாசல பிரதேச எல்லைக்கு அனுப்பிவைத்ததுதான். சீனப் படைகளை, இந்திய இராணுவம் விரட்டும்போது வெளிப்படுத்திய மூர்க்கம் சீனா கவனிக்கத்தக்கதாக இருந்தது. அதன் பிறகு, 1984இல் ராஜீவ் காந்தி சீனாவுக்கு விஜயம் செய்து நல்லுறவை வளர்க்க பல ஒப்பந்தங்களை செய்தார். பின்னர், பாரதிய ஜனதா ஆட்சிக் காலத்தில் மேல்மட்ட அளவில் மறுபடியும் ஒரு சமாதான முயற்சி நடந்தது. சீனாவிலும் மாற்றங்கள் ஏற்படத் துவங்கியுள்ளன. அதாவது, பொருளாதாரக் கொள்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களால், சீனாவின் உற்பத்தித் திறன் உலகில் உள்ள எந்த நாட்டைவிடவும் அதிகமாகவே இருந்துவருகிறது. இதனாலேயே, இந்தியா உள்பட அண்டை நாடுகளில் தனது பல்வேறு பொருள்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் கொண்டுகுவித்து, பெரும் லாபம் ஈட்டிக்கொண்டிருக்கிறது.

இந்தியாவில் இப்போது இருந்துவரும் மிகப்பெரிய உள்நாட்டுப் பிரச்னையான நக்ஸல்கள் பிரச்னை இந்த அளவுக்குப் பெரியதாக இருப்பதற்குக் காரணங்களில் மிக முக்கியமானது, அவர்களுக்குக் கிடைக்கும் பணபலம் மற்றும் ஆயுதங்கள். இவற்றுக்குப் பின்னால் சீனா இருப்பதை இந்தியா நம்புகிறது. இதன் எதிர்வினையாக இந்தியாவும், இங்கே குடியமர்ந்துள்ள திபெத்தியர்களின் நடவடிக்கைகளை மறைமுகமாக ஊக்குவித்து வருகிறது. ஒலிம்பிக்கின்போது, இந்தியாவில்தான் சீனாவுக்கு எதிரான, திபெத்திய போராட்டங்கள் பெரிய அளவில் இருந்தன.

இந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங், தேர்தல் நடக்கவிருந்த அருணாசலப் பிரதேசத்தில் பிரச்சாரம் செய்யச் சென்றிருந்தார். சீனா, அதிரடியாக, 'பிரச்னைக்குரிய இடத்தில் இந்தியப் பிரதமரின் விஜயம் ஆட்சேபத்துக்கு உரியது' என்று பத்து நாள்கள் கழித்து அறிக்கை வெளியிட்டது. சீனாவின் நோக்கம், மன்மோகன் சிங் வருகையை எதிர்ப்பது அல்ல. அடுத்து அந்த இடத்துக்கு வரவிருக்கும் தலாய் லாமாவின் வருகையைக் கடுமையாக எதிர்ப்பதுதான். அதன் அடையாளமாகத்தான் மன்மோகன் சிங் வருகையை சீனா ஆட்சேபித்தது. இதற்கான பதிலாக அருணாசலப் பிரதேசத்தின் முதல் மந்திரி டோர்ஜி காண்டு, 'தலாய் லாமா வருகைக்கு எல்லா ஏற்பாடுகளையும், முழுமூச்சில் செய்ய, மன்மோகன் சிங் அநுமதி வழங்கியுள்ளார்' என்று கூறினார். சீனாவுக்கு இந்த நிலைப்பாடு பெரும் எரிச்சலூட்டியிருக்கிறது. 'திபெத்தில் தலைவர் தலாய் லாமாவின் சீன எதிர்ப்புப் அனைவருக்கும் தெரிந்ததுதான். இத்தகைய நபர் பிரச்னைக்கு உரிய பகுதிக்கு வருவதை சீனா முழுமையாக எதிர்க்கிறது' என்று அறிக்கை மூலமாகத் தெரிவித்தது.

இதற்குப் பதிலாக, இந்திய வெளிவிவகாரத் துறை செயலர் நிருபமா ராவ் கூறியது என்னவெனில், 'இந்திய அரசின் விருந்தினராக இருக்கும் தலாய் லாமாவுக்கு இந் நாட்டில் எங்கே வேண்டுமானாலும் சென்றுவர உரிமை உண்டு. அதன்படி, அவர் அருணாசல பிரதேசத்துக்கும் விஜயம் செய்யலாம்'.

எல்லைப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வை இரு நாடுகளும் விரும்புகின்றனவா? பிரதமர் மன்மோகன் சிங் சமீபத்தில் முப்படைத் தளபதிகளையும் ஒரு நிகழ்ச்சியில் சந்தித்தார். அப்போது அவர்களிடம் அவர் குறிப்பிட்டது குறிப்பிடத் தகுந்தது. "உளவுத் துறையின் எச்சரிக்கைகளின்படி பார்த்தால், நாட்டுக்கு எதிராக உடனடி தாக்குதல்கள் நடக்கலாம். அதனால் இராணுவம் எச்சரிக்கையுடன், தயாராக இருக்க வேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறார். ஒருவேளை சிறிய அல்லது நெடும் போர் ஏற்படுமானால், முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாவும், கம்யூனிஸ்டுகள் நீங்கலான அனைத்துக் கட்சிகளும் ஆளும் காங்கிரசுக்கு முழுமையான ஆதரவையே அளிக்கும்.

அதே சமயத்தில், சீனாவுடனான நல்லுறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லவேவேண்டும். இரு நாடுகளுக்குமிடையில் கிட்டத்தட்ட முதலாம் நூற்றாண்டிலிருந்தே, கலாசார, மத மற்றும் வியாபார உறவுகள் இருந்துவந்திருக்கின்றன. இவற்றைப் பலப்படுத்துவதன் மூலம், இரு நாடுகளுக்குமே லாபம். இதற்கு ஒரே வழி, உயர்மட்டத் தலைவர்கள் நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதுதான் என்றுகூறும் சுப்பிரமணிய சுவாமி போன்ற அறிவுஜீவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எது எப்படியிருந்தாலும், சீனாவின் பொருளாதார முன்னேற்றம், சேர்ந்திருக்கும் டொலர்கள், பெற்றுவரும் அரசியல் வெற்றிகள் ஆகியன, அந்நாட்டை மிதமிஞ்சிய தன்னம்பிக்கையும் வேகமும் கொண்ட ஆதிக்க சக்தியாக மாற்றியிருக்கிறது என்பதைத்தான் சமீபத்திய நடவடிக்கைகள் தெரிவிக்கின்றன. அதேபோல, இந்தியாவின் சர்வதேச மதிப்பை உயர்த்தும் விஷயங்களும் சர்வதேச அரங்கில் நடந்திருக்கின்றன. சீனாவுடன் மோதல் என்பது இனி பயப்படவேண்டிய விஷயம் அல்ல என்ற நிலைக்கு இராணுவமும், அரசியல் தலைமையும் வந்திருக்கின்றன. அதாவது, அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அதைச் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு இருக்கிறது என்பதே இதன் பொருள்.

இம்மாதிரியான மனநிலையில் உள்ள இரண்டு தனிநபர்கள்கூட, தங்களுக்கு இடையேயான பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள தாங்களாக முன்வரமாட்டார்கள். அப்படியிருக்கும்போது, நாடுகளைப் பற்றி சொல்லத்தேவையில்லை.

ஆனால், இப்போதுள்ள நிலையில் வலுவான இரண்டு நாடுகள் மோதிக் கொண்டால் இரு நாடுகளுக்கும் பெருத்த சேதம் ஏற்படும் என்பது, சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்குமே தெரியும். அதிலும், தெற்காசியப் பிராந்தியத்தில் வேகமாக வளர்ந்துவரும் இந்த இரு சக்திகளும் மோதிக்கொள்வது அவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பின்னடைவாக இருக்கும் என்பதும் தெரியும். இந்த இரு நாடுகள் மோதிக்கொள்வது இந்த நாடுகளின் போட்டியால் அவஸ்தைக்குள்ளாகியிருக்கும் முன்னேறிய நாடுகளுக்கு அனுகூலமாகிவிடும் என்பதும் தெரியும். இந்தக் காரணங்களை வைத்துப் பார்க்கும்போது, போர் என்பது இரு நாடுகளுக்குமே நல்லதல்ல. இந்நிலையில் பரஸ்பர சீண்டல்கள் வெறும் இடி, மின்னலாக இருக்குமே தவிர, பெருமழையோ சூறாவளியோ தோன்ற வாய்ப்பில்லை. அதே நேரத்தில் இரு நாடுகளுக்கிடையே முரண்பாடுகள் அதிகம் இருப்பதால் சுமுக நிலையும் உடனடியாகத் திரும்பிவிடாது. எனவே, ராஜதந்திர ரீதியிலான மோதல்களை இனிவரும் நாள்களில் அதிகமாகக் காணலாம். ■


TIME TRAVEL
& Tours
ucanfly.co.uk
KINGFISHER
AIRLINES
JET AIRWAYS
THE JOY OF FLYING
SriLankan
Airlines
QATAR
AIRWAYS
KUWAIT AIRWAYS
297 Rayners Lane
Pinner
Middx. HA5 5EH
Tel: 020-8429 8333




சே குவேரா சிலை
சாந்தா கிளாரா

உலக விவகாரம் | கியூபா

# அதிகார மாற்றம் மாற்றத்தை தருமா?

**கேந்திர முக்கியத்துவம் ஏற்படுத்திய நிலைமை என்ன?**

தனஞ்செயன்

உலக நாடுகளில் ஒருசில நாடுகள் பூகோள ரீதியில் மிக முக்கியமான இடத்தில் இருப்பதால் மற்றையவர்களால் கூர்ந்து கவனிக்கப்படும் நாடுகளாக ஆகிவிடுகின்றன. உதாரணமாக, பாகிஸ்தான். இந் நாடு என்னதான் செய்தாலும், உதவியைப் பெற்றுக்கொண்டு குறையே கூறினாலும், அமெரிக்காவுக்கு இது ஏன் மிகமுக்கிய நாடாக விளங்குகிறது? ஆப்கானிஸ்தான், இந்தியா, சீனா போன்ற நாடுகளின் எல்லைகளுக்கு மிக அருகில் இருப்பதால், அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் முக்கியமான நாடாக உள்ளது.

கியூபாவும் அதுபோலவேதான். வட அமெரிக்காவின் ஆதி மக்களை தனது மூத்த குடிகளாகக்கொண்ட தீவு கியூபா. இதன் மக்கள்தொகை தற்போது ஒன்றரைக் கோடிதான். இந்தத் தீவில் 15 பிராந்தியங்கள் இருக்கின்றன. பெரும்பாலானோர் (65.5 வீதம்) ஸ்பெயின் நாட்டு வழிவந்தவர்கள். மீதிப்பேர் ஆபிரிக்கர்கள், மற்றும் ஆதிகுடிகளைச் சேர்ந்தவர்கள்.

ஆரம்பத்தில் வாழை, கரும்பு, கோப்பி, புகையிலை ஆகியன ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அதிகமாக விளைந்தன. கோப்பி, புகையிலை, சர்க்கரை என்பன ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தன.

கியூபாவின் மக்களில் பெரும்பாலோர் ஸ்பானிஷ் மக்களாக இருப்பதற்குக் காரணம் இருக்கிறது. இங்கே ஆரம்பத்தில் வசித்தவர்கள் வட அமெரிக்காவைச் சேர்ந்த ஆதிவாசிகள். இவர்களில் இருபிரிவினர் இருந்தனர். விவசாயம் இவர்களின் முக்கிய தொழிலாக இருந்தது. அந்த சமயத்தில்தான், அதாவது 1492இல், கொலம்பஸ் கியூபாவுக்கு அருகில் உள்ள தீவில் வந்திறங்கினார். அப்போது, பலம்பெறத் தொடங்கியிருந்த ஸ்பெயின் ராஜ்யத்தின் ஒரு பகுதி இந்தத் தீவு என்று கொலம்பஸ் அறிவித்தார். 1511ஆம் ஆண்டில் ஸ்பெயின் மக்களின் குடியேற்றம் இங்கு தொடங்கியது. அப்போது, கியூபா தீவில் ஒரு லட்சம் அமெரிக்க ஆதிகுடிகள் இருந்தனர். இவர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்குப் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேசமயத்தில், அந்த தீவில் தங்கம் கிடைக்கிறதா என்று தேடிப்பார்க்குமாறு இந்த மக்கள் துன்புறுத்தப்பட்டனர். ஏறத்தாழ அடிமைகளைப்போலவே நடத்தப்பட்டனர். தொடர்ந்து அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், ஐரோப்பாவிலிருந்து ஸ்பானிஷ் மக்கள் மூலமாகப் பரவிய தொற்று வியாதி போன்றவற்றால் உள்ளூர்வாசிகள் பெரும்பாலோர் மறைந்து அழிந்தார்கள்.

கியூபா அதன்பின் 400 வருடங்கள் ஸ்பெயினின் ஆட்சியில் இருந்தது. பின்னர் 1762இல் பிரிட்டன் கைக்கு மாறியது. அதேசமயத்தில் பலம்பெற்ற நாடாக வளர்ந்திருந்த அமெரிக்காவோடு கியூபா சேரவில்லை. பல விஷயங்களுக்கு அவர்கள் ஸ்பெயினையே சார்ந்திருந்தனர். அதுமட்டுமன்றி, இங்கே இருந்தவர்கள் ஸ்பெயின் தேசத்துக் கீழ்மட்ட மற்றும் நடுத்தர மக்களே.

இப்படியே, நூறு வருடம் கழிந்தது. 1868இல் ஸ்பெயினில் ஏற்பட்ட பஞ்சம், வறுமை காரணமாக புரட்சி வெடித்தது. இதன் விளைவு கியூபாவிலும் எதிரொலித்தது. கியூபாவின் புரட்சிக்காரர்கள் பக்கத்தில் உள்ள அமெரிக்காவிலிருந்து இயங்கினார்கள். 1892இல் கியூபாவின் முதல் புரட்சிக்காரரான ஜொஸி மார்ட்டி, கியூப புரட்சிக் கட்சியை நியூயோர்க்கிலிருந்து துவங்கினார். இந்தக் கலகப்படை பெருகி, ஸ்பெயின் படைகளோடு நேரடியாகச் சண்டையிடும் அளவுக்கு வளர்ந்தது. இதனால் புரட்சிப் படைகள் தோற்றுப்போயின. கியூபாவின் சுமார் 4 லட்சம் மக்கள் முகாம்களில் மிக மோசமான நிலையில் தங்கவைக்கப்பட்டனர். பசியாலும் சிகிச்சையில்லாத வியாதியாலும் இவர்களில் பெரும்பாலோர் இறந்துபோனார்கள். இதனைப் பக்கத்து நாடான அமெரிக்காவும் பிற ஐரோப்பிய நாடுகளும் வன்மையாகக் கண்டித்தன.

அமெரிக்கா இதைக் கண்டித்ததோடு நிற்கவில்லை. தட்டிக் கேட்கத் தனது போர்க் கப்பலை அனுப்பியது. இதற்குக் காரணம், கியூபாவில் அப்போதே பல்லாயிரக்கணக்கில் அமெரிக்கர்கள் குடியேறியிருந்தனர். இவர்களைக் காப்பாற்றவென்று கூறி, கியூபாவின் அருகில் வந்து நிலைகொண்ட கப்பல், ஒரு நாள் நள்ளிரவில் மர்மமான முறையில் வெடித்துச் சிதறியது. அதிலிருந்த அத்தனை அமெரிக்க வீரர்களும் இறந்துபோனார்கள். 1898இல் அமெரிக்கா, ஸ்பெயின்மீது அதிகாரபூர்வமாகப் போர் அறிவித்தது. இதில் ஸ்பெயின் தோற்றுப்போனது. கியூபாவின் மீதான உரிமையை விட்டுக் கொடுத்தது. இந்தப் போரை நடத்திய அமெரிக்க அதிபர் மக்கின்லே. ஸ்பெயினுடன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி அடுத்த 20 வருடங்கள் ஆட்சிசெய்ய உரிமை பெற்றிருந்தார். ஆனால், போருக்குப் பின் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் இவர் தோற்றுப்போய், தியோடோ ரூஸ்வெல்ற் அதிபராகப் பொறுப்பேற்றார்.

ரூஸ்வெல்ட்டிற்கு கியூபாவின் புரட்சிக்காரர்களின்மேல் ஏற்கனவே அநுதாபம் இருந்தது. ஆகவே, கியூபாவின்மேல் அமெரிக்காவுக்கு இருந்த உரிமையைக் கைவிட்டு, 1902இல் அந்நாட்டுக்கு சுதந்திரம் என்று அறிவித்தார். அதேசமயம், தேவைப்பட்டால் கியூபாவின் வெளிவிவகாரத்துறை மற்றும் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் உரிமை போன்றவற்றை அமெரிக்கா தக்கவைத்துக்கொண்டது. மற்றுமொரு ஒப்பந்தப்படி, குவான்டனாமோ வளைகுடாப் பகுதியை தனது கப்பற்படைத் தளமாக வைத்துக்கொள்ளக் குத்தகை உரிமையின்படி ஒப்பந்தம் செய்துகொண்டது.

இதேசமயத்தில் கியூபாவிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. கியூபாவின் விடுதலைக்கு ஆரம்பத்திலிருந்து போராடியவர்கள் அமைதியாக இருக்க மறுத்தனர். அதற்கான காரணங்களும் இருந்தன. 1906இல் கியூபாவின் முதல் தேர்தல் நடைபெற்றது. அப்போதே தேர்தல்களில் குளறுபடிகள், மோசடிகள் நடந்ததாகப் பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்தன. இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை, புரட்சிக்காரர்கள் அடுத்த சில மாதங்களில் கவிழ்த்தனர். மறுபடியும் அமெரிக்கா உள்ளே நுழைந்து, தனது பிரதிநிதியாக கவர்னர் ஒருவரை நியமித்து ஆட்சியை நடத்தியது. மறுபடியும் தேர்தல்கள் நடத்தப்பட்டன. புதிய அதிபர் தெரிவுசெய்யப்பட்டார். அவரும் சில நாட்களில் பதவியிறங்க வேண்டியதாயிற்று. இப்படியாகத் தேர்தல்கள், புரட்சிகள் என்ற நிலை 1940 வரை நீடித்தது.

அமெரிக்க தலையீடு எல்லா வேளைகளிலும் இருந்தது. இதை அந்நாட்டு இராணுவத்தினர் மற்றும் புரட்சியாளர்களில் கணிசமானவர்கள் விரும்பவில்லை. இதனைக் கவனித்த ரஷ்யா, அவர்களைத் தன்பக்கம் இழுக்க ஆரம்பித்தது. அமெரிக்காவின் அருகில் இருக்கும் ஒரு தீவு, தங்களது நட்பு நாடாக இருந்தால், அதைவிட சாதகமான விஷயம் சோவியத் ரஷ்யாவுக்கு வேறு இருக்கமுடியாது. கியூபாவின் புரட்சியாளர்களுக்கு ஆயுதங்களையும் ஆதரவையும் தொடர்ந்து அளித்துவந்தது ரஷ்யா. இப்படிப்பட்ட ஆதரவைப் பெற்றுவந்த ஜெனரல் பரிஸ்டா 1940இல் ஆட்சியைப் பிடித்தார். இவர்தான் கம்யூனிசத்தை கியூபாவுக்குள் முழுவதுமாக அமல்படுத்தியவர். அடுத்து வந்த இரு தேர்தல்களில் இவர் தொடர்ந்து தோற்றுப்போனார். ஆனால், மூன்றாம் முறையாக 1952இல் மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். இவரது ஆட்சிமுறையை கியூபாவின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஏற்

றுக்கொள்ளவில்லை. இவர் மக்களுக்குக் கம்யூனிசத்தைக் கொடுத்துவிட்டு, தான் மட்டும் மிக ஆடம்பரமாக வாழ்கிறார் என்பதிலிருந்து பல குற்றசாட்டுகளை முன்வைத்து புரட்சிக்காரர்கள் போராடினர்.

ஜெனரல் பரிஸ்டாவின் வன்முறைகள் இராணுவத்திலுள்ள இடைநிலை அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்குப் பிடிக்கவில்லை. இவர்கள் புரட்சிக்காரர்களுக்கு உதவினார்கள். 1956இல் பரிஸ்டாவுக்கு எதிராக நடந்த இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கானவர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் இராணுவத்தின் இடைநிலை அதிகாரிகள். இந்த நடவடிக்கையால் இராணுவம் என்ற அமைப்பு சீரழிந்துபோனது. ஆனாலும்கூட, புரட்சிக்காரர்கள் தங்களது முயற்சியை விடவில்லை. இவர்களில் முக்கியமானவர்கள் சே குவேரா, பிடல் காஸ்ட்ரோ, இவரது தம்பி ராகுல் காஸ்ட்ரோ ஆவார்கள். இவர்கள் ரஷ்யாவிடம் உதவி பெற்றாலும், அமெரிக்க அரசை நேரடியாக எதிர்க்கவில்லை. ஏனெனில், பரிஸ்டாவுக்கு ரஷ்யா நேரடியாக ஆதரவு அளித்துவந்தது என்று தெரியும். இவர்களும் கம்யூனிச சிந்தனையில் ஆழ்ந்த பற்று உடையவர்களாக இருந்தாலும் பரிஸ்டாவின் ஆட்சிமுறை பிடிக்காதவர்கள்.

1958இல் பிடல் காஸ்ட்ரோ ஆட்சியைப் பிடித்தார். தான் அதிகாரத்துக்கு வராமல், டாக்டர் மனுவல் யுரிற்ரியாவை அதிபராக்கினார். ஆனாலும், தன் கையில் பல அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொண்டார். புரட்சியாளர்கள் அரசு அதிரடியாக பல மாற்றங்களைக் கொண்டுவந்தது. முழுக்க முழுக்க சோவியத் பாணியிலான கம்யூனிசம் நாட்டில் அமல்படுத்தப்பட்டது. தனியார் சொத்து என்று எதுவுமின்றி, அமெரிக்காவிலிருந்து பல வியாபாரிகள் சூதாட்டக் கூடங்களை உருவாக்கி நடத்திவந்தனர். இவற்றையும் அரசு கடுமையான நடவடிக்கைகள் மூலம் ஒழித்தது. அரசுடமையாக்கப்பட்டதால், 25 பில்லியன் டொலர்கள் மதிப்புடைய தனியார் சொத்து அரசிடம் வந்தது. இதில் ஒரு பில்லியன் டொலர்கள் மதிப்புடைய சொத்துக்கள் அமெரிக்க நிறுவனங்களைச் சேர்ந்தவை.

கியூபாவின் போக்கு, குறிப்பாக பிடல் காஸ்ட்ரோ சோவியத் பக்கம் சாய்ந்தது, அமெரிக்காவுக்கு சற்றும் பிடிக்கவில்லை. பிடல் காஸ்ட்ரோவைத் தீர்த்துக்கட்ட, அங்கே ஏற்கனவே அவர்மீது ஆத்திரமுற்றிருந்த மாபியாவோடு அமெரிக்க உளவுத்துறை கைகோத்தது. 1960, 1962ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் பிடல் காஸ்ட்ரோவை மாபியாவின் 'உதவியோடு' தீர்த்துக்கட்ட முயற்சிசெய்து தோற்றுப் போனது.

இதே காலகட்டத்தில் பிடல் காஸ்ட்ரோ தனது பிடியை மேலும் இறுக்கும் விதமாக எதிர்க்கட்சி என்பதை இல்லாமல் செய்தார். அரசுக்கு எதிரான பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்கள் மூடப்பட்டன. அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. அரசை அதாவது பிடல் காஸ்ட்ரோவை எதிர்த்த எதிர்க்கட்சியினரையும் பிற எதிர்ப்பாளர்களையும் ஒன்று திரட்டி, சித்திரவதை செய்து கொன்ற சம்பவம் அரங்கேறியது. இவ்வாறு இறந்தவர்கள் 20 ஆயிரம்பேர் என்று சொல்லப்படுகிறது. கம்யூனிசத்தின் 'ஒருகட்சி ஆட்சி முறை' அமல்படுத்தப்பட்டது. மக்களை வேவு பார்ப்பதற்கென்றே புரட்சிப் பாதுகாப்பு கமிட்டி என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

அமெரிக்கா தொடர்ந்து கியூபாவின் அரசைக் கவிழ்க்க, பிடல் காஸ்ட்ரோவைக் கொல்ல முயற்சிகளை மேற்கொண்டது. பன்றி வளைகுடா ஊடுருவல் மூலம் அரசைத் தூக்கியடிக்க முயற்சிசெய்தது; முடியவில்லை. அமெரிக்காவுக்கு வெறுப்பேற்ற சோவியத் ரஷ்யா கியூபாவை மிக நன்றாகப் பயன்படுத்திக்கொண்டது. அமெரிக்கச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த கியூபாவை பகடைக்காயாகவும் பயன்படுத்தியது. அமெரிக்கா, அக்காலகட்டத்தில் துருக்கி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஏவுகணை தளங்களை நிறுவியிருந்தது. இவற்றை சோவியத்தால் தடுக்க முடியவில்லை. ஆனால், அமெரிக்காவின் வாயிலில் உள்ள கியூபாவில் ஏவுகணைகளை நிறுவியது. உடனடியாக அமெரிக்கா பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டது. கியூபாவிலிருந்து ஏவுகணைகளை எடுக்கவேண்டுமானால், துருக்கி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஏவுகணைகளை அமெரிக்கா நீக்கவேண்டும்; கியூபாவை அடுத்த 20 வருடங்களுக்கு எந்த விதத்திலும் தாக்கக்கூடாது என்று 'ஒப்பந்தம்' ஏற்பட்டது.

இதன் பின்னர் அமெரிக்கா கியூபாவுடனான அனைத்து ராஜீய உறவுகளையும் துண்டித்தது. பொருளாதார உதவிகளை, கடன்களை முழுவதுமாக நிறுத்தியது. சோவியத் யூனியனிடம் கியூபா மேலும் நெருக்கமடைவதற்கு இது மேலும் காரணமாக அமைந்தது.

இந்தச் சமயத்தில் பிடல் காஸ்ட்ரோவுக்கு தனிப்பட்ட முறையில் எல்லா வகையிலும் போட்டியாக வரக்கூடும் என்று இருந்த சே குவேரா போர்க்களத்தில் மரணம் அடைந்தார். அவர் இயற்கையிலேயே பெரும் போராளி, பெரும் கொள்கைப் பிடிப்புக் கொண்டவர். கியூபாவில் புரட்சி வெற்றிபெற்ற பிறகு அங்கு அதிகாரத்தில் பங்கு கோராமல், ஆபிரிக்க நாடுகளில், அதே போன்ற ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த போராளிகளைச் சேர்க்க ஆரம்பித்துவிட்டார். கொங்கோ, பொலிவியா போன்ற நாடுகளில் ஆயுதம் ஏந்திய போராட்டங்களை அந்தந்த அரசுகளுக்கு எதிராக நடத்தினார். பொலிவியாவில் 1967இல் நடந்த சண்டை யின்போது செ குவேரா கொல்லப்பட்டார்.

இந்த நிகழ்வு பிடல் காஸ்ட்ரோ மற்றும் அவரது தம்பி ராகுல் காஸ்ட்ரோவுக்கு வரப்பிரசாதம்போல அமைந்தது. ஏற்கனவே கியூபாவின் இராணுவ தலைவராக இருந்த ராகுல் காஸ்ட்ரோ, இப்போது துணை அதிபரானார். 1970களில் சோவியத் பங்குபற்றிய அனைத்து இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குபெற கியூபா தனது இராணுவத்தை அனுப்பி வைத்தது. பிடல் காஸ்ட்ரோவின் ஆதரவும் அன்பும் இருந்தால்தான் அல்லது குறைந்தபட்சம் அவரது விசுவாசியாக இருந்தால்தான் கியூபாவில் எதுவும் செய்யமுடியும் என்ற நிலை உருவானது. இதேநிலை காஸ்ட்ரோ உடல்நிலை பலவீனமடைந்து 2008 பெப்ரவரி மாதத்தில் பதவியிலிருந்து ராஜிநாமா செய்யும்வரை நீடித்தது. அதன்பின்னர் பொறுப்பேற்றவர் அவரது தம்பி ராகுல் காஸ்ட்ரோ.

இடையே 1991 அளவில், சோவியத் ரஷ்யா சிதறுண்ட நேரம் காஸ்ட்ரோவுக்குப் பெரும் சோதனை காலமாக இருந்தது. நாட்டில் உணவுப் பொருள்கள், மருந்துகள், அத்தியாவசிய வசதிகள் ஆகியவற்றுக்குப் பெரும் திண்டாட்டம் ஏற்பட்டது. இந்தநிலை இரண்டு ஆண்டுகள் நீடித்தது. இவ்வேளை, அமெரிக்கா கியூபாவுக்கு உதவ முன்வந்தது. இதை காஸ்ட்ரோ ஏற்கவில்லை. ஆனால், வேறு வழியில்லாததால் 1993இலிருந்து அமெரிக்க உதவியை வேண்டாவெறுப்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. கியூபாவிலிருந்து ஆயிரக் கணக்கில் மக்கள் அமெரிக்காவுக்குப் பிழைப்புத் தேடி குடிபெயர்ந்தனர். இவ்வாறு சென்ற 1.2 மில்லியன் கியூபன்கள் இன்றும் அமெரிக்காவில் இருக்கிறார்கள். 2003ஆம் ஆண்டிலிருந்து, அமெரிக்காவின் முதலாளித்துவத்தை வெளிப்படையாக எதிர்க்கும் எண்ணெய் வள









சே குவேரா,
பிடெல் காஸ்ட்ரோ

**பொலிவியாவில் 1967இல் நடந்த சண்டையின்போது செ குவேரா கொல்லப்பட்டார். இந்த நிகழ்வு பிடல் காஸ்ட்ரோ மற்றும் அவரது தம்பி ராகுல் காஸ்ட்ரோவுக்கு வரப்பிரசாதம்போல அமைந்தது**

நாடுகளான வெனிசுலா மற்றும் பொலிவியா ஆகியன கியூபாவுக்கு உதவிசெய்ய ஆரம்பித்தன. இவர்களுடன் சீனாவும் சேர்ந்துகொண்டது.

இன்றைய நிலையில் கியூபாவிலிருந்து மிக அதிகமாகக் கிடைக்கும் நிக்கல், அதன் துணைப் பொருளான கோபால்ட் ஆகியனமூலம் வருமானம் கிடைத்துவருகிறது. 2004 இல் வட கியூபாவின் கடல் பகுதியில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மட்டும் உண்மையாகி எண்ணெயை எடுத்தால், 9.3 மில்லியன் பரல்கள் வரையில் எண்ணெய் எடுக்க முடியும் என்று தகவல்கள் கூறுகின்றன. இது நடந்தால் எண்ணெய் வளமுள்ள கம்யூனிச நாடாக கியூபா புதுவடிவம் பெறும். அப்படி நடந்தால் அங்கே கம்யூனிசம் நிலைத்திருக்குமா என்பதை இப்போது உறுதியாகச் சொல்லிவிடமுடியாது.

தனிநபர் உரிமைகள் மறுக்கப்படும் - ஒரு குறிப்பிட்ட கருத்தை ஏற்றே ஆகவேண்டும் என்னும் சூழலை வலியுறுத்தலின் பேரில் ஏற்றுக்கொண்ட மக்கள் வசிக்கும் கியூபாவை, தனிநபரின் விருப்பு வெறுப்புகள் 50 வருடங்களாக ஆட்சி செய்து வந்திருக்கின்றன. ஆளுபவர் மாறினாலும் நிலைமை மாறவில்லை. இப்போது அவரது (பிடல் காஸ்ட்ரோ) தம்பி ஆட்சிக்கு வந்தவுடன் கூறியது என்ன தெரியுமா? "சாதாரண மக்களைக் கட்டுப்படுத்திவைக்கும் சில கட்டுப்பாடுகள் இனி ஓரளவுக்கு தளர்த்தப்படும்"

அதாவது, கியூபாவில் மாறுதல்கள் ஓரளவுக்குத்தான் ஏற்படும் என்பதுதான் இதன் பொருள். ■





சுதந்திரமாக உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள
எமது சேவைகள் உங்களுக்கு வழிகாட்டும்!
Personal & Corporate Advice
Retirement planning
Mortgage arrangement service and Financial re-engineering
Life assurance and protection planning
Mortgage Conveyancing
Investment planning
Key event advisory service
Debt Problems?
call us for confidential and expert advice
Free Consultation
to solve your financial problems
Mortgage 4US
Independent Financial Advisers
Karthigesu Sivanesan MBA BSc Eng FPC
Independent Financial Adviser
Mobile: 07775 578 552
Tim Drakes MSci CEFA CEMAP
Independent Financial Adviser
Mobile: 07515 891 295
020 7386 0924
www.mortgage4usltd.com
6 Barton Road, London W14 9HD
FSA
Mortgage 4US Ltd (FSA No.478944) is an appointed representative of Unleash Advice Partnership Ltd (FSA No. 473157) which is authorised and regulated by the Financial Service Authority.



கலை

**செவ்வி | பம்பாய் ஜெயஸ்ரீ**

# எண்ணித் துணிந்த கருமம்

## என் பாடல்; என் ராகம்

**கர்நாடக இசை உலகில் தனி முத்திரை பதிக்கும் பம்பாய் ஜெயஸ்ரீயை, சென்னை ஊடக இயல் கல்லூரியில் மாணவர்கள் செவ்விகாண்கிறார்கள்**

**மாணவர்கள்: உங்களுக்கு எப்படி இசையில் ஆர்வம் ஏற்பட்டது?**

**ஜெயஸ்ரீ:** என் தந்தை தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்துவந்தார். காலை 4 மணிக்கே எழுந்து சங்கீத சாதகம் செய்துவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பார். என் தாயை எல்லோரும் பட்டு மாமி என்றே அழைப்பார்கள். தந்தை, தாய் இருவருமே பாட்டு சொல்லிக்கொடுத்துவந்தார்கள். அதனால் நாள் முழுவதும் எங்கள் வீட்டில் பாட்டும் இசையும் ஒலித்துக் கொண்டே இருக்கும். என்னுடைய ஆரம்ப பாடமும் என் பெற்றோரிடம்தான்.

ஆனால், இளம் வயதிலேயே என் தந்தை இறந்துவிட்டார். குடும்பத்தைக் காப்பாற்ற என் தாய் பாட்டு வகுப்புகள் நடத்தினார். நான் சிறந்த பாடகியாக வேண்டும் என்பது அவருடைய விருப்பம். எனவே, என்னை ரி. ஆர். பாலாமணி என்ற தன் சிநேகிதியிடம் பாட்டு கற்க அனுப்பினார்.

**கேள்வி: சரி, அவர் எப்படி பாடம் நடத்தினார்?**

**ஜெயஸ்ரீ:** ரி. ஆர். பாலாமணி கச்சேரிகள் அதிகம் செய்ததில்லை. ஆனால், அவர் தலைசிறந்த ஆசிரியை. முசிரி சுப்பிரமணிய ஐயர், பிருந்தா - முக்தா, ரி. கே. கோவிந்தராவ் ஆகியோரிடம் பயின்றவர். எனவே, இவர்கள் அனைவரிடமுமிருந்த சிறப்பு அம்சங்களையும் அவர் எனக்குக் கற்றுக்கொடுத்தார்.

**கேள்வி: பள்ளிக்கூடங்களில் பாடியதுண்டா?**

**ஜெயஸ்ரீ:** நான் படித்த பள்ளி சென். அன்ரனீஸ் என்ற கத்தோலிக்க கன்னியர் மடம். தினமும் இறைவணக்கம் பாடவேண்டும். பெரும்பாலான நாள்களில் நான்தான் இறைவணக்கம் பாடுவேன். ஆனால், கர்நாடக இசையில் அல்ல. பஜன்களைப் பாடுவேன். பம்பாயில் அப்பொழுது கர்நாடக இசை என்பது தென்னிந்தியர்கள் மட்டுமே ரசிக்கக்கூடியதாக இருந்தது. பள்ளி நாடகங்களுக்கு இசை அமைத்தேன். சிறிய வேடங்களில் நடித்ததும் உண்டு.

**கேள்வி: பள்ளியில் இசைப் போட்டிகள் இருந்திருக்குமே?**

**ஜெயஸ்ரீ:** பல போட்டிகளில் பரிசு பெற்றிருக்கிறேன். குறிப்பாக, ஆஷா போன்ஸ்லே, லதா மங்கேஷ்கார் ஆகியோர் பாடிய திரைப்படப் பாடல்கள் அதிகம் பாடினேன். எனக்குப் பிடித்த பாட்டு, "சத்யம் சிவம் சுந்தரம்..'' என்ற பாட்டுத்தான். (பாடுகிறார்)

பின்னர், கல்லூரியில் பி. கொம். வகுப்பில் சேர்ந்தபின், நான்குபேர் கொண்ட இசைக்குழுவை உருவாக்கினேன். பின்னர், இந்தக் குழுவில் 20பேர் இருந்தனர். மகாராஷ்டிரா, குஜராத் முழுவதும் பல ஊர்களுக்கும் சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்தினோம் - திரைப்படப் பாட்டுக்கள்தான்.

பின்னர், விளம்பரங்களுக்கான 'ஜிங்கிள்ஸ்' பாடிவந்தேன். போர்ண்விற்றா, பெப்சிபோன்ற விளம்பர ஜிங்கிள்ஸ்களில் பாடினேன். இன்று புகழ் பெற்றுவிளங்கும் பிரபலமான இசைக் கலைஞர்கள் ஒரு காலகட்டத்தில் ஜிங்கிள்ஸ் பாடியவர்கள்தாம். எனவே, எனக்கு ஜிங்கிள்ஸ் பாடுவதில் ஒரு கர்வம்கூட இருந்தது. ஒருநாள் என்னை ஒளிப்பதிவு கூடத்தில் ரோனு மஜூம்தார் என்ற புல்லாங்குழல் கலைஞர் பார்த்துவிட்டார். "இங்கே என்ன செய்

கிறாய்'' என்று கேட்டார். அவரைச் சிறுவயது முதலே எனக்குத் தெரியும். 'நான் ஜிங்கிள் பாடவந்திருக்கிறேன்' என்றவுடன் என்னை ஏளனமாகப் பார்த்தார். அப்பொழுது முடிவுசெய்தேன் - என்னுள் ஒரு வெறி - இசைத்துறையில் வளர்ச்சியடைந்து, அவர் முன்னே சவாலாக நிற்கவேண்டும்!

பின்னர், அவரும் நானும் ஜுகல்பந்தி நிகழ்ச்சி நடத்தினோம் என்பதை இப்பொழுது பெருமையுடன் நினைத்துப்பார்க்கிறேன்.

**கேள்வி: நீங்கள் முதலில் மேடையேறியது எப்போது?**

**ஜெயஸ்ரீ:** முதல் மேடைக்கச்சேரி செய்தபோது எனக்கு வயது 18. 1982இல் பம்பாய் செப்பூரில் விநாயகர் சதுர்த்தி விழாவில்தான் கர்நாடக இசையில் முதலில் கச்சேரி செய்தேன். அதே ஆண்டு சென்னைவந்து இசைவிழா நிகழ்ச்சிகளைக் கேட்டது ஓர் அற்புதமான - அருமையான அநுபவமாக இருந்தது. கச்சேரி கேட்க வந்தவர்களின் இசை ஞானமும் ரசனையும் எனக்குப் பிரமிப்பூட்டின. 1989ஆம் ஆண்டு சென்னை மியூசிக் அக்கடெமி போட்டிகளில் கலந்து கொண்டு ஆறு பரிசுகள் பெற்றேன்.

சஞ்சய் சுப்பிரமணியம், விஜய் சிவா இருவரும் அவர்கள் ஈடுபட்டிருந்த *Youth Macay* என்ற இளைஞர் இசை அமைப்பில் பாடச்சொன்னார்கள். அதுதான் சென்னையில் நான் செய்த முதல் கச்சேரி. அப்பொழுது சிறந்த இசைக் கலைஞருக்கான பரிசை லால்குடி ஜெயராமன் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன். பரிசைக் கொடுக்கும்போது, "என்ன, நான் சொன்னதை மறந்துவிட்டாயே'' என்றார். அவர் ஒருமுறை பம்பாய் வந்திருந்தபோது எங்கள் வீட்டுக்குவந்து, நான் பாடியதைக் கேட்டுப் பாராட்டினார். "நீ சென்னைக்கு வந்தால் நான் உனக்கு கற்றுத்தருகிறேன்'' என்றார். அதைத்தான் அவர் அப்போது நினைவுபடுத்தினார்.

நான் சென்னைக்கு வந்தேன். பல மாதங்கள் தங்கி அவரிடம் கற்றுக்கொண்டேன். அதுதான் பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

**கேள்வி: உங்கள் குருவைப்பற்றிக் கூறுங்களேன்?**

**ஜெயஸ்ரீ:** கர்நாடக இசையில் ஒப்பற்ற புலமை படைத்தவர் அவர். என்றாலும், எல்லா இசையிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு. பயிற்சி முடிந்தபின், "லதா மங்கேஷ்காரின் பாட்டு ஒன்றைப் பாடு'' என்று என்னைப் பாடச் சொல்லிக் கேட்பார்.

பாட்டின் பொருள் உணர்ந்து பாடவேண்டும் என்பார். என் பாட்டில் பாவம், உணர்வுகள் அதிகம் இருப்பதாக கருதி, உற்சாகமூட்டினார். பாட்டுக்களின் பொருளைச் சொல்லிக்கொடுப்பார்; ஒவ்வோரு சொல்லாக விளக்கம் தருவார். சிலசமயம், வகுப்பு நேரம் முழுவதையுமே ஒரு வார்த்தைக்கு விளக்கம் அளிப்பதில் செலவிடுவார். அதெல்லாம் மகத்தான - மறக்கமுடியாத அநுபவம். அவர்தான் என்னை முழுமையான கலைஞராக்கினார்.

**கேள்வி: உங்கள் பாட்டில் வயலின் பாணி இருப்பதாக சொல்வார்கள்...**

**ஜெயஸ்ரீ:** உண்மைதான்; வயலின் பாதிப்பு இருக்கத்தான் செய்தது. ஆனால், பெரிதும் முயன்று அதை மாற்றிக்கொண்டு, எனக்கென ஒரு பாணியை உருவாக்கிக்கொண்டேன்.

**கேள்வி: நீங்கள் பரதநாட்டியமும் கற்றுக்கொண்டதாக அறிகிறோம்...**

**ஜெயஸ்ரீ:** பம்பாய் ராஜராஜேஸ்வரி மந்திரில் கல்யாணசுந்தரம் என்பவரிடம் பரதநாட்டியம் கற்றுக்கொண்டேன். ஒருமுறை அவர் ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்தினார். அதில் நான் கலந்துகொள்ள ஆர்வமாக இருந்தேன். ஆனால் அவர், "ஜெயஸ்ரீ, நீ ஆடவேண்டாம்; இந்த நாட்டிய நிகழ்ச்சியில் பாடு'' என்று கூறிவிட்டார். எனக்குப் பெரும் ஏமாற்றமாகிவிட்டது. நாட்டியமாட எனக்குத் தகுதி இல்லையா என்று வருத்தம் ஏற்பட்டது.

**கேள்வி: ஹிந்துஸ்தானி இசை கற்றுக் கொண்டீர்களா?**

**ஜெயஸ்ரீ:** நான் எல்லா வகை இசையையும் கற்றக்கொள்ளவேண்டும் என்பது என் அன்னையின் விருப்பம். விநாயக சதுர்த்தி, நவராத்திரி போன்ற விழாக்களின்போது பாடவரும் கலைஞர்களைக்கண்டு பேசி, அவர்களிடம் நான் இசைபயில ஏற்பாடு செய்வார்.

பிரபல ஹிந்தி இசைக்கலைஞர் ஹேமந்குமாரின் மருகன் கௌதம் முகர்ஜி என்பவரிடம் என்னை அனுப்பினார். "நீ உன் முகத்தைக் கண்ணாடியில் போய் பார். பாடும்போது எப்படித் தலையை ஆட்டுகிறாய்; முகத்தை எப்படியோ வைத்துக்கொண்டு, மூக்கை வளைத்து - பார்க்கவே சகிக்கவில்லை'' என்று கூறினார். அவர் ஓர் இளைஞர்; என்னைப்பற்றி இவ்வாறு கூறிவிட்டாரே என்று பெரும் துயரம் ஏற்பட்டது. ஆனால், அவர்தான் மேடையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்; மேடை எழிலுணர்வு ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்தார். பாடும்போது அழகுணர்வின் வெளிப்பாடு மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்தேன்.

**கேள்வி: ஒருமுறை ஒரு பேட்டியில், 'இசைக்கு பக்தி தேவையில்லை' என்று கூறியுள்ளீர்களே...?**

**ஜெயஸ்ரீ:** அப்படி நான் கூறவில்லை. ஒரு கச்சேரியில் "கிருஷ்ணா நீ பேகனே...'' என்ற பாடலைப் பாடினேன். அப்பொழுது ஒரு ரசிகர் கேட்டார், "இந்தப் பாட்டைப் பாடும்போது, கிருஷ்ணன் உங்கள் கண் முன்னே தோன்றுவதாக நினைத்துப் பாடுகிறீர்களா?'' என்று.

நான் சொன்னேன்: "அப்படி இல்லை; கண்ணனோ அவனது மயில் பீலி கொண்டையோ என்முன் வரவில்லை; என் கவனமெல்லாம் அந்த பாட்டு அமைந்த 'யமுனா கல்யாணி' ராகத்தின் அழகிலேயே லயித்திருந்தது'' - என்று.

நான் கூறியது தவறாக புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. ஜெயஸ்ரீக்கு கடவுள் பக்தி இல்லை என்று திரித்துக் கூறிவிட்டார்கள்.

**கேள்வி: ஏதேனும் புதிய முயற்சிகள்?**

**ஜெயஸ்ரீ:** ஹெல்சிங்கியில் பீனிஷ் வாத்திய குழுவுடன் இரண்டு சிம்பனி நிகழ்ச்சிகளில் பாடியுள்ளேன். பின்லாந்தின் 'அவந்தி சேம்பர் வாத்திய குழு'வுடன் சங்க இலக்கிய பாடல்களை பாடியுள்ளேன். ஈரோ ஹமேனிமி என்ற மேல்நாட்டு கலைஞர்தான் இதற்கு ஏற்பாடுசெய்தார். கர்நாடக இசையில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்.

**கேள்வி; பம்பாயிலிருந்து சென்னை வந்தவுடன் இந்தச் சூழல் எப்படி ஒத்துப் போனது?**

**ஜெயஸ்ரீ:** உண்மையில் நான் 1996இல் சென்னை வந்தபோது எனக்கு தமிழ் படிக்கத் தெரியாது. அது ஒரு தடையாக இருப்பதை உணர்ந்தேன். தீவிரமாக முயன்று, அந்தத் தடையை தகர்த்துவிட்டேன். இப்பொழுது நிறைய தமிழ்ப் பாடல்கள் பாடுகிறேன்.

திரைப் படங்களிலும் பாடுகிறேன். ("வசீகரா...'' என்ற பாட்டையும் அதன் ஹிந்தி வடிவத்தையும் பாடுகிறார்.)

புதிய இசை முயற்சிகளையும் செய்துவருகிறேன். ■





விளையாட்டு | கிரிக்கெட்

சச்சின் ரெண்டுல்கர்

# ஒரு தலைமுறையின் கனவு

அரவிந்தன்

சச்சின் என்னும் 'ஒரு நபர் படை'

கிரிக்கெட் வாழ்வில் 20 ஆண்டுகளைப் பூர்த்திசெய்த சச்சின் ரமேஷ் ரெண்டுல்கரிடம் அப்படி என்ன சிறப்பு? அவர் ஏன் கிரிக்கெட்டின் கடவுளாக ஆராதிக்கப் படுகிறார்? ஆட்ட நுணுக்கங்கள் அதிகம் தெரியாத சாமானிய மக்கள் மட்டுமல்ல, ஆழமான கிரிக்கெட் அறிவுகொண்ட பீற்றர் ருபேக் போன்ற விமர்சகர்கள், விவியன் ரிச்சர்ட்ஸ் போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்கள், அனில் கும்ப்ளே, ராகுல் திராவிட், ஸ்டீவ் வா, வாசிம் அக்ரம் போன்ற சமகாலத்து திறமைவாய்ந்த வீரர்களும் அவரை ஆராதிக்கிறார்கள். ரெண்டுல் கரைப்போல இன்னொருவர் பிறப்பது அரிது என்கிறார் உலகிலேயே அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய முத்தையா முரளிதரன்.

அப்படி என்ன சிறப்பு அவரிடம்? அவர் அடித்த 'சதங்களா'? குவித்த ஓட்டங்களா? பெற்றுத்தந்த வெற்றிகளா? வென்ற 'ஆட்ட நாயகன்' விருதுகளா? இவ்வளவு ஆண்டுகள் தொடர்ந்து ஆடுவதா? எத்தனையோ விழுப்புண்களைத் தாண்டி தன் உடல் திறனைப் பேணிவருவதா? காலத்துக்கும் காயங்களுக்கும் மதிப்புக் கொடுத்து தன் துடுப்பாட்ட முறையில் நுட்பமான மாற்றங்களைச் செய்துவருவதா? இன்றைக்கும் பந்து வீச்சாளர்களின் பிரதான சவாலாக இருப்பதா? இளம் வீரர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதா? கோடிக்கணக்கான ரசிகர்களின் அன்புக்கும் ஆராதனைக்கும் உரியவராக இருப்பதா? வீரேந்திர சேவக், யுவராஜ் சிங், மகேந்திரசிங் தோனி போன்ற புதிய நட்சத்திரங்கள் மத்தியில் துருவ நட்சத்திரமாக ஜொலிப்பதா? ராகுல் திராவிட், விவிஎஸ் லட்சுமணன் போன்ற மூத்த வீரர்களும் மதிக்கும் அளவில் ஆடிவருவதா? இவ்வளவு திறமை இருந்தும் தன்னடக்கத்தின் வடிவமாக திகழ்வதா?

இப்படிக் கேட்டுக்கொண்டே போகலாம்; சம்பவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். 16 வயதில் வாயில் அடிபட்டு, பற்கள் உடைந்து, ரத்தம் கொட்டியபிறகும் வாசிம் அக்ரம், இம்ரான் கான் போன்ற பந்து வீச்சாளர்களை உறுதியுடன் எதிர்கொண்டு, இந்திய அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்றியவர் சச்சின். அதற்குச் சில மாதங்கள் கழித்து இங்கிலாந்தில் சொற்ப ஓட்டத்துக்கு மூன்று விக்கெட்டுகள் விழுந்த நிலையில் களம் இறங்கி, இங்கிலாந்தின் வலுவான பந்து வீச்சை எதிர்கொண்டு ஆடி, சதம் அடித்து, இந்தியாவைத் தோல்வியிலிருந்து மீட்டவர்.

இன்னும் பல சம்பவங்களைச் சொல்லலாம். ஷாஜாவில் மணல் புயலுக்கு நடுவில் பிரகாசித்த சம்பவத்தை நினைவு கூரலாம். 'இந்தப் பையன் ஆடுவதைப் பார்க்கும்போது நானே ஆடுவதுபோல



'பத்ம விபூஷண்' விருது

இருக்கிறது' என்று கிரிக்கெட்டின் பிதாமகர் டொன் பிராட்மன் கூறிய தைச் சுட்டிக்காட்டலாம். உலகின் சிறந்த சுழல் பந்து வீச்சா ளர்களில் ஒருவரான ஷேன் வார்னைத் துவம்சம் செய்ததைக் காவியமாகப் பாடலாம்.

சிறந்த ஆட்டக்காரர்கள் எல்லோரது வாழ்விலும் இது போன்ற கதைகள் இருக்கும். சச்சினின் சிறப்பு என்னவென்றால், அவரது கிரிக்கெட் வாழ்வு நெடுகிலும் இத்தகைய கதைகள் நிரம்பியிருப்பதுதான். தன் ஆட்ட வாழ்வின் பெரும் பகுதியில், அவ்வளவு வலுவில்லாத ஓர் அணியின் உறுப்பினராக இருந்து ஆடும் நிலை சச்சினுக்கு வாய்த்ததுபோல வேறு யாருக்கும் வாய்த்ததில்லை. மார்க் வா, இன்சமாம் உல் ஹக், ரிக்கி பொண்டிங் ஆகியோர் சிறந்த பந்து வீச்சு என்னும் பக்க பலத்தோடு களம் இறங்கினார்கள். பிரயன் லாராவின் கிரிக்கெட் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அவரது அணியின் பந்து வீச்சு சொல்லிக்கொள்ளும்படி இல்லைத்தான். ஆனால், முதல் பத்து ஆண்டுகளில் வால்ஷ், அம்புரோஸ் போன்ற சிறந்த வீச்சாளர்கள் இருந்தார்கள். அந்த வாய்ப்பு சச்சினுக்குப் பெரும்பாலும் கிடைக்கவில்லை. அது அவரின் சுமையை இன்னமும் கூட்டியது.

பந்து வீச்சில் மட்டுமன்றி, துடுப்பாட்டத்திலும் இந்தியாவின் வலிமை சொல்லிக்கொள்ளும்படி இல்லை. 2000ஆவது ஆண்டுக்குப் பிறகுதான் லட்சுமணன், திராவிட், சேவாக் போன்றோர் அவரது சுமையைக் குறைத்தார்கள். அதுவரை, இந்தியாவை 'சச்சின் என்னும் ஒரு நபர் கொண்ட படை' என்று சற்றே மிகைப்படுத்திச் சொல்லிவிடலாம். "சச்சினை அவுட் ஆக்கிவிட்டால் ஆட்டத்தை வென்றுவிடலாம் என்பதே எங்கள் கணக்கு" என்று வாசிம் அக்ரம் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். இன்றும்கூட எல்லாப் பந்து வீச்சாளர்களும் பிரதானமாகக் குறிவைப்பது சச்சினின் விக்கெட்டுக்குத்தான்.

நெருக்கடி, எதிர்பார்ப்பு, திறமையான எதிரணி ஆகியவற்றுக்கு மத்தியில் ஆடிப் பழகிய சச்சினுக்கு சவால்கள் அதோடு முடிந்துவிடவில்லை. காலில், முதுகில், முழங்கையில், தோள் பட்டையில் என்று அடுக்கடுக்காக காயங்கள். பெரும் பொறுப்பைச் சுமந்து போராடியதன் அடையாளங்களாகப் பல விழுப்புண்கள். வேறொருவராக இருந்திருந்தால் எப்போதோ காணாமல் போயிருக்கக்கூடிய நெருக்கடிகள் இவை. ஆனால், சச்சின் இவற்றையும் தாண்டிவந்தார். ஒவ்வொரு காயத்துக்குப் பிறகும் புதிய உத்வேகத்துடன் மீண்டுவந்தார். ஆட்டத்தில் சிறுசிறு மாற்றங்கள் செய்துகொண்டு தொடர்ந்து சீராக ஆடிக்கொண்டிருக்கிறார்.

அவரைப் பற்றிய விமர்சனங்களும் இல்லாமலில்லை. இன்னும் அவர் டெஸ்ட் போட்டிகளில் போதிய அளவு சாதிக்கவில்லை. பொண்டிங், லாரா, இன்சமாம் அளவுக்கு, அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் வெற்றி தேடித் தரவில்லை. இரண்டாவது இன்னிங்ஸில், குறிப்பாக, 'சேஸிங்' செய்யும்போது, அவரது துடுப்பு அவ்வளவாகப் பிரகாசிப்பதில்லை என்றெல்லாம் குற்றம்சொல்ல வாய்ப்பிருக்கிறது. ஆனால், மேற்சொன்ன நெருக்கடிகளின் பின்னணியில் பார்க்கும்போது இந்தக் குறைகள் மங்கிவிடுகின்றன. தவிர, சச்சின் முதல் இன்னிங்ஸில் ஆடிய ஆட்டமே பல சமயங்களில் ஆட்டத்தின் முடிவை இந்தியாவுக்குச் சாதகமாகத் திருப்பியிருக்கிறது. மேலும், அவர் சிறப்பாக ஆடியும், பிறர் இழைத்த தவறுகளால் போட்டி கைவிட்டுப்போகும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. தவிர, சச்சின் களத்தில் இருக்கும் வரை நெருக்கடி எதுவும் இருக்காது. அவர் ஆட்டமிழந்த பின்னர்தான் நெருக்கடி உருவாகும். அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியில் சச்சின் ஆடிவருகிறார் என்பதையும் மறந்துவிடமுடியாது.

இவையெல்லாம் அற்புதமான அம்சங்கள்தான். ஆனால், ரெண்டுல்கரின் பங்களிப்பு இவற்றைக் கடந்தது. எழுபது மற்றும் எண்பதுகளின் இந்தியக் கிரிக்கெட் அணியின் போராட்ட முகத்தின் அடையாளங்களாக முறையே கவாஸ்கர், கபில்தேவ் போன்றவர்கள் இருந்தார்கள். கபில்தேவின் வேகம் ஒரு புதிய கலாசாரத்தை இந்திய கிரிக்கெட்டில் தொடங்கிவைத்தது. இவர்களது பங்களிப்பு முக்கியமானதுதான். ஆனால், உலகுக்குச் சவால் விடுமளவுக்கு இவர்களது திறமை விகசிக்கவில்லை. 1983 உலகக் கோப்பைப் போட்டியைத் தவிர, வேறு எந்தச் சமயத்திலும் இந்திய அணியோ இந்திய ஆட்டக்காரரோ எந்த அணிக்கும் சிம்ம சொப்பனமாக இருந்ததில்லை. அப்படிப்பட்ட நிலை வராதா என்று எண்பதுகளின் இறுதியில் ரசிகர்கள் ஏங்கினார்கள்.

அப்போதுதான் சச்சின் என்னும் அதிசயப் பிறவி களத்தில் பிரவேசித்தது. கவாஸ்கரின் உறுதி, கபில்தேவின் போர்க்குணம் ஆகியவற்றை ஒன்றுதிரட்டிய உருவமாக அந்தப் பிரவேசம் நிகழ்ந்தது. உத்வேகத்துடனும் பன்முக திறமையுடனும் இந்திய அணியின் வேகத்தை வளர்த்தெடுத்து, இந்திய அணியின் அடையாளமாகவே மாற்றியது இந்தப் பிரவேசம். இந்தியாவின் சராசரிக் குடிமக்களின் அபிலாஷைகளின் வெளிப்பாடாக சச்சினின் ஆட்டம் விளங்கியது. பெரிய துடுப்பாட்டக்காரர்களே கவனமாக ஆடும் அப்துல் காதரின் பந்துகளை மைதானத்துக்கு வெளியே அடித்து விரட்டிய 16 வயதுப் பையன் ஒரு தலைமுறையின் கனவுக்கு உயிர் கொடுத்தான். பல துடுப்பாட்டக்காரர்களும் சந்திக்க அஞ்சிய ஷேன் வார்னின் பந்துகளை அடித்து துவைத்தபோது, தேசம் ஆனந்தக் கூத்தாடியது. நெடுங்காலமாக அவர்கள் காணவிரும்பிய காட்சி அது. புயல்வேக ஷோயிப் அக்தார்களோ, பிரட் லீகளோ அவரை அசைக்கமுடியவில்லை. அவுஸ்திரேலியாவின் கட்டுக்கோப்பான ஆவேசத்துக்கு தக்க பதிலடி கொடுத்ததும் மக்களின் விருப்பத்துக்கு வடிவம்கொடுத்த செயலாக அமைந்தது. கடந்த மாதம் ஹைதராபாதில் அதிரடியாக எடுத்த 175 ஓட்டங்கள் மீண்டும் அந்தக் கனவைப் புதுப்பித்தன. சச்சின் மக்கள் நாயகனாக இருப்பதற்குக் காரணம், மக்கள் எதைப் பார்க்க ஏங்குகிறார்களோ அதை அவர் நிகழ்த்திக் காட்டுவதுதான்.

இந்த வயதிலும், இத்தனை காயங்களுக்குப் பிறகும் வேகப் பந்து வீச்சைத் துணிச்சலாக எதிர்கொண்டு ஆட அவரால் முடிகிறது. வேகப் பந்தை எதிர்த்து ஆடி, 'லோங் ஓன்' திசையில் தூக்கி அடிக்க முடிகிறது. பவுன்சர் பந்துகளை 'ஹூக்' செய்யும் துணிச்சலும், 'அப்பர் கட்' அடிக்கும் துல்லியமும் அவருக்கு இப்போதும் வசப்படுகின்றன. 'லெக் ஸ்பின்னரி'ன் பந்துகளில் 'இன்சைட் அவுட் ஷொட்'டை அவர் அளவுக்கு கச்சிதமாக யாரும் ஆடுவதில்லை. 'அவருக்கு முன்னால் நான் ஓய்வுபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என்று கப்டன் மகேந்திர சிங் தோனி சொல்லுமளவுக்கு சச்சினின் ஆட்டத் திறன் இப்போதும் மிளிர்கிறது. வாராது வந்த இந்த மாமணி இன்னும் எவ்வளவு நாள் பிரகாசிக்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. ஆனால், சச்சின் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் புதிய வரலாற்றின் வரிகளாக அமையும். அவர் எடுக்கும் ஒவ்வொரு சதமும், ஒவ்வோர் அரை சதமும் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலத்துக்கு இடப்படும் உரமாக அமையும். நவீன கிரிக்கெட் வரலாற்றின் நாயகனான சச்சின் ரெண்டுல்கர், வரலாற்றின் பக்கங்களை மேலும் மேலும் அலங்கரிக்கட்டும். ■

**சிறுகதை | ஆர். நடராஜன்**

# தேவலோக கவலைகள்

அன்று தேவலோகம் அல்லோலகல்லோலப்பட்டது. பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரையும் மற்றைய கடவுள்கள் மொலுமொலுவென்று பிடித்துக்கொண்டார்கள். என்ன, ஏது என்பதைச் சொல்லாமல் “காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என்று கதறினார்கள். பார்வதி, மஹாலக்ஷ்மி முதற்கொண்டு ஒரு தெய்வீக குழு, முருகன் தலைமையில் இப்படி வந்ததைக்கண்ட மும்மூர்த்திகளுக்கு ஒன்றும் புரியவில்லை. எங்கே, என்னவாயிற்றோ என்று கலவரப்பட்டார்கள். அவர்களை ஆசுவாசப்படுத்திய பிரம்மதேவன் முருகனைப் பார்த்துக் கேட்டார், “உனக்கு தேவசேனாதிபதி என்று பட்டம் உண்டு; நீயே இப்படி, ‘காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று அலறிக்கொண்டு வரலாமா? நீ தளபதி அல்லவா!''

“இல்லை. முருகன் தளபதி இல்லை; தளபதிதான் முருகனாம்.''

“முருகா, என்ன சொல்கிறாய்? புரியவில்லையே'' என்று பிரம்மன் கேட்க, முருகன் சொன்னார்; “படைத்துவிடுகிறீர்; அத்துடன் நின்றுவிடுகிறீர். உமக்கு நாட்டு நடப்பு எதுவுமே தெரிவதில்லை. என் உருவத்தில் தமிழ்நாட்டில் ஓர் அரசியல்வாதி அருள் பாலிக்கிறார். அது உமக்குத் தெரியுமா? தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பது உமக்குத் தெரியாது. என் அப்பாவைக் கேளுங்கள், அவர் சொல்வார்.''

“மகனே, எனக்கென்ன தெரியும்? என்னைவிட உனக்குத்தான் அதிகம் தெரியும் என்பதனால்தானே உன்னைத் ‘தகப்பன்சாமி' என்று அழைக்கிறார்கள்'' என்று நழுவினார் சிவபெருமான்.

அதற்குள், பார்வதிதேவியும் மஹாலக்ஷ்மியும் கூட்டாகக் குரல்கொடுத்தார்கள். “முதலில் என்னென்னவோ வேஷங்கள் போட்ட கதாநாயகிகள், சினிமாவிலே அம்மன் வேஷமும் போட்டார்கள். எங்களுக்கு சங்கடமாக இருந்தது. ஆனாலும் பொறுத்துக்கொண்டோம். எப்போதாவது கோபப்பட்டு நீங்கள் சாபம்கொடுத்தால் நாங்கள் பூமியில் பிறப்பதில்லையா, அதுபோல இது சினிமாப் பிறப்பு, அதுவும் கொஞ்சகாலம்தானே என்று எடுத்துக்கொண்டோம். ஆனால், இப்போது பூமியில் நடப்பதே வேறு. தெருக்களில் தட்டிகளாக, குட்டிச் சுவர்களில் சுவரொட்டிகளாக எங்கள் முகத்தையும் அலங்காரத்தையும் யார் யாருக்கோ நாம் கொடுக்கிறோம்.''

குறுக்கிட்டார் மஹாவிஷ்ணு; “என்ன நடந்துடுச்சுன்னு இப்போ நீங்க கவலைப்படறீங்க?''

“வெற்றிநளினம்னு பூமியில் ஒரு நாரீமணி இருக்கிறார். கொண்டைய ராஜூவும் மாதவனும் மற்றவர்களும் வரைந்த எங்களது படங்களின் முகப்பகுதியை நீக்கிவிட்டு, அவங்க கட்சிக்காரங்க அந்த அம்மாவையே அம்மனாக அதில் பொருத்தி, தட்டிகள் வைக்கிறார்கள். கழிப்பறைச் சுவர்களிலும் சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். இன்னும் கொஞ்சநாள் போனால் கோவில்களுக்கு வரும் பக்தர்களும் ‘நாங்கள் வெற்றிநளினம் மாதிரியே இருக்கிறோம்' என்று சொல்லிவிடுவார்கள் போலிருக்கிறது. நீங்களும் உங்க தேவலோக பரிவாரங்களும் அந்த விளம்பர தட்டிகளை தொடர்ந்து பார்த்துவந்தீர்களென்றால் எங்களைக் கண்டதும் ‘யாரம்மா நீங்க, எங்கே வந்தீங்க, இது தேவலோகம்; போங்க, போங்கன்னு' விரட்டிவிடுவீங்களோன்னு பயமா இருக்கு.''

“அடடா, இது மத அபச்சாரம் அல்லவோ?''

“இந்து மதத்தைப் பொறுத்தவரை அபச்சாரம் இல்லையாம். மற்ற மதத்துக்காரங்க இவங்களை மன்னிப்பு கேட்க வைச்சாங்க. இவங்களும் கேட்டாங்க.''

“போகட்டும், நம் மக்கள் பெருந்தன்மையானவர்கள். நாம் மன்னிப்பு கொடுப்பவர்களாகவே இருப்போம்.




**பிரம்மதேவன் முருகனைப் பார்த்துக் கேட்டார், ''உனக்கு தேவசேனாதிபதி என்று பட்டம் உண்டு; நீயே இப்படி, 'காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று அலறிக்கொண்டு வரலாமா? நீ தளபதி அல்லவா!''**

**''இல்லை. முருகன் தளபதி இல்லை; தளபதிதான் முருகனாம்.''**

ஆகவே, எது நடந்தாலும் இப்படிப் பதறிப்போகாதீர்கள்.''

'இப்படி உங்கள் பெருந்தன்மை அதிகமாகப் போய்க்கிட்டிருந்தா மக்களுக்கும் தெய்வங்களுக்கும் வித்தியாசம் தெரியாமப்போகுமே'' என்று பார்வதி கவலையுடன் கேட்டார்.

"இதுக்கெல்லாம் வருத்தப்படக்கூடாது. எதையும் வேடிக்கையா எடுத்துகணும்.''

"இதுவரை சரி, போகப்போக என்ன ஆகுமோன்னு பயமா இருக்கே.''

"என்னன்னு?''

"இப்போ தனி நபர்களைத்தானே சாமிகளாக காட்டுறாங்க. குடும்பமா அரசியல் நடக்கிறதால அப்பா, அம்மா, ரெண்டு பிள்ளைகள்னு ஒரு நிலைமை வந்தா..''

''அவங்க சோமாஸ்கந்தமூர்த்தி படத்தைப் போட்டுக்கட்டும், தப்பில்லே.''

"ரெண்டு பிள்ளைகளும் அவங்கவங்க இடத்திலதான் இருக்கணுமா, இல்லே இடம் மாறிக்கலாமா'' என்று நாரதர் குறுக்கே கேட்க, சிவன் கோபித்துக்கொண்டார். "நீர் முதலில் எட்டிப்போவதே நல்லது என்று நினைக்கிறேன். பழத்தைக் கொடுத்து என் பிள்ளைகளிடையே போட்டி வைத்தீர். கெட்டிக்காரப் பிள்ளை காலடியில் தங்கிவிட, முருகன் சுற்றிச்சுற்றி எங்கேயோ போகவேண்டியிருந்தது. அந்தச் சிக்கலையே நான் இன்னும் தீர்க்கலை; சகோதரர்களா, இடம் மாறிக்கிறீங்களான்னு கேட்டு இப்போ புதுசா ஒரு கலகத்தைத் தூண்டிவிடுகிறீரே.''

"ஓ. இப்போ விஷயம் அப்படி வந்துட்டுதா? சரி, பிள்ளைகள் எப்படியாவது தீர்த்துக்கொள்ளட்டும்னு தகப்பனாரான நீர் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்ளவேண்டியதுதானே. நல்லவேளை, நீர் ஒரு மகளைப் பெற்றுக்கொள்ளவில்லை.''

''அதுவேறு உனக்கு சங்கடமாக இருக்கிறதா?''

"அப்படியே பெத்துக்கிட்டிருந்தாலும் சங்கடமில்லை. தேவலோகத்தில் கலை அணி தொடங்கி, ரம்பை, ஊர்வசி, திலோத்தமையின் கலை நிகழ்ச்சிகளுக்கு மகளைத் தலைமைதாங்கச் சொல்லலாம். அப்புறம் கலை நாட்டம் வேறு பாதையில் பயணம் செய்வது மகளின் சாமர்த்தியத்தையும் உமது ஆதரவையும் பொறுத்தது.''

"ஏன் 'பிறர் எதிர்க்காததையும்

பொறுத்தது' என்றும் சொல்லக்கூடாதா?''

"எல்லா உண்மையையும் சொல்லக் கூடாது.''

"தொந்தரவு புடிச்ச ஆளையா நீ. முதல்ல இடத்தைக் காலிபண்ணு.''

"செய்தி மோசம் என்கிறது புரியாம, பத்திரிகைக்காரனை நசுக்கிறது மாதிரி என்மீது கோபப்படறீங்க. உங்களுக்கு பிரச்னைன்னா அதைப் பெண்டாட்டிகளிட்ட பிரிச்சுக் குடுத்துடவேண்டியதுதானே.''

"சொல்வீர் ஐயா, சொல்வீர்; நன்றாகச் சொல்வீர். பெண்டாட்டிகள்தானே எனக்குப் பெரிய பிரச்னை. தலையில் ஒருத்தி, இடுப்பில் ஒருத்திங்கிற சங்கடம் உமக்கிருந்தால் தெரியும். யாரை எங்கே வைப்பது, வைக்காமல் இருப்பதுன்னு திணறுவீர்.''

"உங்கள் பிரச்னை எப்படியோ போகட்டும். எங்களை இப்போது கவனியுங்கள்'' என்று பார்வதி சொன்னதைக் கேட்டுக்கொண்டே வந்த வியாச பகவான், "என்ன தேவி இப்படிச் சொல்கிறீர்கள், இது நம் கொள்கைக்கு எதிரானதாக இருக்கிறதே.''

"என்ன கொள்கை, எது எதிரானது? புரிந்து பேசுகிறீர்களா, இல்லை புரியாமல் பேசுகிறீர்களா?'' என்று மஹாலக்ஷ்மி கேட்க, வியாசர் சொன்னார், "மனிதர்களை தேவநிலைக்கு உயர்த்த ஞானிகளை பூமிக்கு அனுப்புகிறோம். இப்போது மனிதர்கள் நமக்கு சமமாக வரக்கூடாது என்று நீங்கள் நினைப்பதுபோல், சொல்வதுபோல் தெரிகிறதே, அது தவறல்லவா?''

"வேஷத்தில் சமமாகவேண்டும் என்றா சொன்னோம்?'' என்று பிரம்மதேவன் கேட்ட, அதே நேரத்தில் நரர்கள் கூட்டம் ஒன்று அங்கே வந்துசேர்ந்தது. 'தலைவர் வாழ்க, தலைவர் வாழ்க' என்று பூலோகத்தில் தொண்டைகிழியக் கத்துவதுபோல, அவர்கள் தேவலோகத்திலும் கத்தினார்கள். அந்த அதிர்வில் மேகப் பொதிகள் எல்லாம் பஞ்சாகப் பறந்துபோயின. பூமியில் இதனால் ஆலங்கட்டி மழை பெய்தது. இருக்காதா பின்னே; என்ன கம்பீரமான குரல் வளம். காலம் காலமாகக் கத்திக் கத்தியே கட்சியை வளர்த்தவர்களாயிற்றே.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த எல்லாக் கடவுள்களும் கணங்களின் அதிபதியாகிய கணபதியை வேண்டிக்கொள்ள, அவர் அங்கே பிரசன்னமானார். ஒவ்வொரு தொண்டருக்கும் கை நிறைய மோதகங்கள் கொடுத்து வாயை அடைத்தார் கணபதி. அப்போது, அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்த மூஞ்சூறு சிலரது கால்களை நெருடியதால், என்னவோ ஏதோ என்று அவர்கள் அலறினார்கள். தேவலோக மூஞ்சூறு அல்லவா, கொஞ்சம் பெரிதாகவே இருந்தது. அதைப் பார்த்த சிலர் தடுமாறிக் குதித்தார்கள். இரண்டுபேர் மட்டும் அதன் பெயர் தெரியாமல் "சாமி எலி அது; ஒண்ணும் பண்ணாது. சும்மா இருங்க'' என்றார்கள்.

வந்திருந்த கட்சிக்காரர்களில் பெரிய மோதிரமும் நீண்ட சால்வையும் அணிந்திருந்த நபர் பிள்ளையார் முன் தோப்புக்கரணம்போட, மற்றையவர்களும் அவ்வாறே செய்தார்கள். 'மாஸ்ட்ரில்' மாதிரி சில திரைப்படங்களில் பாடல் காட்சி வருமே, அது போலிருந்தது இந்த சமஷ்டி தொப்புக்கரணம். "சரி எதற்காக வந்திருக்கிறீர்கள், அதுவும் கூட்டமாக? நான் தெரிந்துகொள்ளலாமா?'' என்று ரொம்ப விநயமாகக் கேட்டார் விநாயகப்பெருமான்.

"வந்து, வந்து...முதல்ல நாங்க ரெண்டு பேர்தான் இங்க வாரதா இருந்தோம். கோஷம்போட்டுக்கிட்டு நாங்க புறப்பட்டதால கூட்டமும் சேர்ந்துடுச்சு. எங்களுக்கு எப்பவும் 'இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா'ன்னு கேட்டே பழக்கம். அதனால், தொண்டர்கள் படையா வந்துட்டாங்க. நீங்க தப்பா நினைச்சுக்காதீங்க.''

"அது பரவாயில்லை, என்னன்னு சொல்லுங்க'' என்று கேட்டார் மஹாவிஷ்ணு.

"இன்னும் ரெண்டு வாரத்தில் நாங்க தலைநகரில் மகளிர் மாநாடு நடத்தப் போறம். முன் வரிசையிலே நடந்து போக அழகா சிலபேர் இருந்தா நல்லாயிருக்குமேன்னு சில நடிகைகளை ஏற்பாடு பண்ணினோம். அவங்களைத் திருப்திப்படுத்த முன்யோசனையோடு என்னென்னவோ விருதுகள் கொடுத்திருந்தோம். அவங்களும் நன்றியோட ஊர்வலத்தில கலந்துட்டாங்க. ஆனா, ரொம்ப நேரம் வெய்யில்ல நின்றதால அவங்க 'மேக்அப்' கலைஞ்சிடுச்சு. பார்த்தவங்க இது மகளிர் அணி யில்லை, மாதர் அணின்னு நெனைச்சுட்டாங்க. மேக்அப் கலைஞ்சமாதிரி கட்சியின் இமேஜும் கலைஞ்சிடுச்சு. அதனால ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய தேவலோக மங்கையர் அகப்பட்டா புடிச்சுட்டுப் போறதுக்கு வந்தோம்'' என்றார்கள் புறா பிடிக்க வந்த நாடோடிக் குறவர்கள்போல.

ஏற்கனவே, முருகனும் பார்வதியும் மஹாலக்ஷ்மியும் உப தெய்வங்களும் கொடுத்த தெய்வ அவமதிப்புப் புகார்களுக்கு தீர்ப்பு சொல்லமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த மும்மூர்த்திகளுக்கு, கட்சித் தொண்டர்கள் தேவலோகத்தில் சீன ஊடுருவல்போல இப்படி அத்துமீறி நுழைந்து தேவலோக மங்கையரை கட்சி மாநாட்டுக்கு அழைத்துச்செல்ல விரும்புவதாக சொன்னது கவலையளித்து. மும்மூர்த்திகள் உடனே துவாரபாலகர்களை அழைத்து, "நீங்கள் விழித்துக்கொண்டிருந்தீர்களா? எப்படி இவர்கள் திமுதிமுவென்று இங்கு நுழைந்தார்கள்'' என்று கேட்டார்கள்.

தொலைவில் நின்றுகொண்டிருந்த தொண்டர்களுக்கு 'திமுதிமு' என்ற வார்த்தைகள் காதில் விழுந்ததனால் ஆஹா, நம்மை அடையாளம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; அதனால் நன்றாக கவனிப்பார்கள் என்று எதையெதையோ அங்கே அன்பளிப்புகளாக எதிர்பார்த்தார்கள். இவர்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்ட விநாயகர், வேண்டியமட்டும் பருகுங்கள் என்று குவளை குவளையாக சோமபானத்தையும் சுராபானத்தையும் கொடுத்தார்.

பலப்பிரயோகம் பண்ணாமலேயே இந்த நரர்களை பூமிக்கு திருப்பியனுப்பும் யோசனையுடன் இந்தப் பக்கம் வந்த நாரதர், நரர்கள் தரையில் மூர்ச்சையுற்றதுபோல் கிடப்பதைப் பார்த்துவிட்டு "என்ன விநாயகரே, ரயிலில் மயக்க பிஸ்கட்காரன் வருவானே, அது மாதிரி ஏதாவது செய்துவிட்டீரா?'' என்றார்.

"உம் மனதில் ஓடும் எண்ணம் எனக்குத் தெரியாதா? இவர்களை பூமிக்கு எப்படி அனுப்புவது என்றுதானே யோசித்துக்கொண்டிருந்தீர்? இப்பொழுது பாரும்'' என்று ஒரு திசையைப் பார்த்துக் கண்ணசைக்க தேவகணங்கள் அங்கே வந்தன. கைக்குழந்தையைக் கைகளால் ஏந்துவதுபோல் பிள்ளையார் ஜாடை காட்டினார். அவ்வளவுதான், கணங்கள் நரர்களைத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

"ஐயோ என்ன செய்யப்போகிறீர்கள் இவர்களை?'' என்று நாரதர் பதற, அதோ கீழே பாரும் என்றார் பிள்ளையார். நாரதர் பார்த்தார். கணங்கள் நரர்களை மேகங்களில் ஏற்றி மலை உச்சி, ஆற்றங்கரை, வைக்கோல் போர் என்று பூமியில் பல இடங்களில் பத்திரமாக இறக்கிவிட்டார்கள். அப்பாடா ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய தேவலோக மங்கையர்கள் தப்பித்தார்கள் என்று, கொஞ்ச நேரம் தம் கவ

லையை மறந்திருந்த தெய்வங்கள் மகிழ்ந்தன.

அப்போது மும்மூர்த்திகளும் விநாயகரைப் பார்த்துக் கேட்டார்கள், "கணேசா, தன் முகத்தை ஓர் அரசியல்வாதிக்கு போட்டுவிட்டார்கள் என்று முருகன் கவலைப்படுகிறான். அதுபோல், தங்கள் அலங்காரங்களைச் சில நடிகைகள் தாங்கியதற்கு தேவியரும் வருத்தப்பட்டார்கள். உன்னிடம் ஒரு கேள்வி. ஏன் உன் உருவத்தை எந்த அரசியல்வாதியும் வைத்துக்கொள்வதில்லை? தொண்டர்களுக்கு உன்னைப் பிடிக்காதா?''

"அப்படியில்லை. நான் ரொம்பவும் குண்டாக இருக்கிறேன். அது ஒரு காரணம். என் யானை முகம் இரண்டாவது காரணம். மூன்றாவது, ஏற்கனவே அரசியல்வாதிகளுக்கு கை நீளம் என்ற பேச்சு இருக்கிறது. இதில் தும்பிக்கையும் மூன்றாம் கையாகச் சேர்வதை அவர்கள் விரும்புவதில்லை. அதுமட்டுமல்ல, நான் தொந்தியும் தொப்பையுமாக இருப்பதால் பொலிஸ்காரர்களுக்கு 'கட்அவுட்' வைத்தால் மட்டுமே எனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும்.''

இதைக் கேட்டு எல்லோரும் தம் குறைகளையும் கவலைகளையும் மறந்து உரக்கச் சிரித்துவிட்டார்கள்.

நாரதர் கொஞ்சம் பலமாகச் சிரித்தார். ஏனென்று மும்மூர்த்திகள் கேட்க, "இல்லை, கணபதியைக் கான்ஸ்டபிள் முதற்கொண்டு டிஜிபி வரை காக்கிச் சீருடையில் கற்பனைபண்ணிப் பார்த்தேன்'' என்று சொல்ல, எல்லோரும் அடுத்த ரவுண்ட் சிரித்தார்கள். கணபதி சிரிக்கவில்லை. 'எனக்கு ஜீன்ஸ் டிரஸ் போடுகிறார்கள். செம்பருத்தி இலையில் படம் போடுகிறார்கள். திருமணப் பத்திரிகைகளில் வெறும் அரைகுறைக் கோடாக காட்டுகிறார்கள். நிற்பதுபோல, நடப்பதுபோல, நடனம் ஆடுவதுபோல, ஏன், கிரிக்கட் ஆடுவதுபோல கூட. நான் கவலைப்படுவதில்லை. ஏதோ என்னால் மற்றவர்கள் சந்தோஷப்பட்டால் சரி.''

"சிலருடைய சந்தோஷம் பிறருக்கு சங்கடமாகிவிடக்கூடாதல்லவா? சாமி வேஷ விவகாரத்தில் நாங்கள் ரொம்பவும் சங்கடப்படுகிறோம்'' என்றார்கள் தேவியர்.

அப்போது முருகப்பெருமான் கேட்டார், "இவர்கள் 'தெய்வம் இல்லை' என்கிறார்கள்; பின் ஏன் எங்கள் உடையும் உருவமும் ஆயுதங்களும்? ஏதாவது அரசியல்வாதிக்கு உங்கள் படத்தை ஒட்டுவேலை செய்தால் உங்களுக்கும் கோபம் வராதா? இவர்கள் உம்மைச் சங்கடப்படுத்துவதில்லை. ஏனென்றால் இவர்கள் மான்தோலை உடுத்திக்கொண்டு பாம்பையும் மண்டை ஓட்டையும் தூக்கிக்கொண்டு திரிவதில்லை. அதனால்தான் உம்மை விட்டுவிட்டார்கள். அடுத்தாற்போல் பூமியில் 'மஹாவிஷ்ணு அவதாரம்' எடுக்கப் போகும் அரசியல்வாதி யார் என்று தெரியவில்லை. ஆண் அரசியல்வாதிகளுமே இப்போது தடித்த சங்கிலிகளையும் முரட்டு மோதிரங்களையும் அணிந்துகொள்கிறார்கள்.''

"சேர்த்திருக்கும் செல்வத்தில் பலர் மஹாவிஷ்ணுவை சாதாப் பணக்காரர் ஆக்கிவிடலாம், சந்தேகமில்லை. இவர்களுக்கும் ஸ்ரீதேவியும் பூமாதேவியும் உண்டு. இவர்கள் பணப்படுக்கையில் படுப்பார்கள், பாம்புப் படுக்கையில் அல்ல. என்னவோ செய்துவிட்டுப்போகட்டும். இவர்களும் நம் மக்களே. நிரீஸ்வரவாதத்திலிருந்து இவர்கள் தேவ அலங்காரத்துக்கு வந்துவிட்டார்களே யென்று நாம் சந்தோஷப்படுவோம்.''

அப்போது நாரதர் கேட்டார், "எல்லாம் சரி, தம்மை தெய்வமாக வரித்துக் கொள்ளும் இவர்கள் கட்சித் தொண்டர்களை அழைக்கும்போது தெய்வங்கள் நினைவுக்கு வருவதில்லையே. சிங்கங்களே, புலிகளே, காளைகளே, அடலேறுகளே, சிறுத்தைகளே என்று சொல்கிறார்களே, அது சரியா?''

"அதுமட்டுமா, சொந்தக் கட்சிகளைக் காட்டுமிராண்டிகளாக அழைக்கும் இவர்கள், மற்ற கட்சித் தலைவர்களை 'குரங்கு, கோட்டான், ஆந்தை, பச்சோந்தி என்று அழைக்கிறார்களே, அது தகுமா?'' என்று முருகப்பெருமான் கேட்க, "ஏதோ உன் மயிலையும் பாம்பையும் என் மூஞ்சூறையும் விட்டுவிட்டதற்காக சந்தோஷப்படலாம்'' என்று அசிரத்தையான திருப்தியை வெளிப்படுத்தினார் விநாயகர்.

இந்த அரசியல்வாதிகள் என்னைக் குறிப்பிடுவதில்லை. ஏனென்றால், என்னளவு நன்றியும் விசுவாசமும் தமக்கும் இல்லை, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இல்லை என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது'' என்று, தான் இப்படி அரசியல் புகழ் பெறாததற்கு திருப்திப்பட்டார் பரமசிவனின் காலடியில் இருந்த பைரவர்.

"சரி, என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று தேவியர் கொஞ்சம் குரலை உயர்த்திக் கேட்கவும் பிரம்மதேவன், "என்ன இருந்தாலும் மனிதர்கள் நம் படைப்புக்கள்; நம் குழந்தைகள். ஏதோ சின்னச்சின்ன குறும்புகள் செய்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டு மன்னித்துவிடலாமே'' என்று சிவனையும் விஷ்ணுவையும் பார்க்க, இருவரும் பார்வையாலேயே இந்த 'அமனெஸ்டி'யை ஆமோதித்தார்கள்.

"சரி, அடுத்தமுறை இவர்கள் இப்படிச் செய்தால் எப்படிப் பொறுத்துக் கொள்வது? அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று முருகப்பெருமான் கேட்க, பிரம்மதேவன் திகைத்தார்.

"ஊகங்களின் அடிப்படையிலான கேள்விகளுக்கு பதில்சொல்ல முடியாது'' என்று பரமசிவன் பதில் சொல்ல, "நீங்கள் அடிக்கடி அரசியல்வாதிகளின் பேட்டிகளைச் செய்தித்தாள்களில் படிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்'' என்றார் முருகன்.

"சரிதான். அது ஊகமல்ல, நிஜம்தான்.''

ஊகமோ நிஜமோ என் கேள்விக்கு பதில் சொல்லவில்லையே என்று முருகன் மும்மூர்த்திகளை நிர்ப்பந்திக்க, மஹாவிஷ்ணு சொன்னார், "அடுத்த முறை அரசியல்வாதிகள் இப்படி வேஷம்போட்டால் முதலில் மனிதர்களாக இருங்கள்; அப்புறம் தெய்வங்களாக மாறலாம். மீறி தேவவேஷம் போட்டால் உங்களுக்கு மிருகங்களின் தலைகளை வைத்துவிடுவேன் என்று கறாராகச் சொல்லிவிடுவேன்.''

அப்போது பரமசிவன் சொன்னார், "கெடுத்தீர் ஐயா காரியத்தை. நீர் அப்படிச் செய்தால் மிருகங்கள் இப்படி ஒரு தூதுக்குழுவாக வரும். பிரம்மதேவன் இந்த தேவலோக மங்கையரைச் சமாளிப்பதுபோல் மிருகங்களைச் சமாளிக்கமுடியாது. சரியான தீர்ப்பு வழங்கி இந்த அரசியல்வாதிகளை தண்டிக்காவிட்டால் நம்பாடு திண்டாட்டமாகிவிடும். மிருகங்கள் நம் தீர்ப்பை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்யும். என்பாடு கஷ்டமாகிவிடும். ரிஷபம் வேலைநிறுத்தம் செய்து என்னைக் கீழே இறக்கி விட்டுவிடும். மயில் முருகனைப் பாதிவழியில் இறக்கிவிடலாம். மூஷிகம் மலை உச்சியிலிருந்தபடியே விநாயகரைக் கீழே தள்ளிவிட்டால்.. உம் கதையையே எடுத்துக் கொள்வோமே. ஆதிசேஷன் 'போய்யா, நான் கரைக்குப் போகிறேன்' என்று நகர்ந்தால் நீர் பாற்கடலில் ஜலசமாதி ஆகவேண்டியதுதான்.''


இதைக்கேட்ட மற்ற தெய்வங்களும் தேவகணங்களும் பயந்தார்கள். அரசியல்வாதிகள் அடுத்தாற்போல் என்ன வேஷம் போட்டாலும்சரி, மிருகங்களை விட்டுவிடலாமே. மிருகங்களுக்கு ரோசம் அதிகமாயிற்றே என்று கவலைப்பட்டார்கள். ■

### திரை உலகில் 50 ஆண்டுகள்

# பெரிதினும் பெரிது கேள்

## கமல் ஹாசன் ஒரு நட்சத்திரமா? ஒரு கலைஞனா?

யுகன்



ஐந்து வயதில் தேசிய விருதுடன் தன் திரை வாழ்வைத் தொடங்கிய கமல் ஹாசன், திரையுலகுக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று அவர் உலக நாயகன் என்று போற்றப்படுகிறார். தயக்கத்துடன்தான் நடிக்கத் துவங்கினேன் என்று கூறும் கமல், இன்று மகத்தான நடிகராக விளங்குகிறார். திரையுலகின் பல்வேறு துறைகளில் தன் அடையாளத்தையும் தனக்கான இடத்தையும் தேடிக்கொண்டிருந்த அவருக்கு நடிப்பதில் இருந்த தயக்கத்தைப் போக்கி, சரியான திசையில் திருப்பியவர் இயக்குநர் கே. பாலசந்தர்.

பதினாறு வயதுக்கு முன்னரேயே கமல் ஒரு 'ஹீரோ' வாக நிலைபெற்றுவிட்டாலும் '16 வயதினிலே' படம்தான் அவரின் நடிப்பின் மேதமையை வெளிக்காட்டுவதாய் அமைந்தது. அடுத்து 'சிகப்பு ரோஜாக்கள்'. இப்படங்களை நடித்து முடித்தபோது அவரின் வயது 24. இந்த வயதில் இவ்வளவு அற்புதமாக நடித்தவர் இப்போது 55 வயதில் நடிப்பில் பல சிகரங்களை எட்டியிருக்கவேண்டுமல்லவா? உலகம் போற்றும் நடிகராக மாறியிருக்கவேண்டுமல்லவா? அதாவது, அவரது ரசிகர்கள் அவரை அன்போடு அழைப்பதுபோல, உண்மையிலேயே 'உலக நாயகனா'க ஆகியிருக்கவேண்டுமல்லவா?

இன்று கமல் இந்திய அளவில் முக்கியமான நடிகராகக் கருதப்படுகிறார். இந்திய அளவில் நசீருதீன் ஷா, ஓம் பூரி, மம்முட்டி, மோகன்லால் என்று எத்தனையோ திறமைசாலிகள் இருந்தாலும், பன்முக நடிப்பு - அதுவும் படத்தைத் தோளில் சுமக்கும் நாயக வேடங்களில் - என்று வரும்போது, கமல் தன் சமகாலத்தவர்கள் பலரைவிடவும் சில அடிகளாவது முன்னால் நிற்கிறார் என்பதில் சந்தேகமில்லை. அமிதாப் பச்சன், தர்மேந்திரா போன்ற நட்சத்திரங்கள் பன் முக நடிப்பில் தங்கள் திறமையை நிரூபித்தி ருக்கிறார்களென்றாலும், மிகவும் வித்தியாசமான வேடங்கள், வேடங்களுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளல்; எல்லாவகை நடிப்பிலும் காணப்படும் நுட்பமான வெளிப்பாடுகள் என்று பார்க்கும்போது, கமலின் திறமை தனித்து நிற்கிறது. ஆனால், இந்தத் திறமைகள் அவரிடமிருந்து மிகச் சிறந்த சினிமா அநுபவத்தைச் சாத்தியப்படுத்தியிருக்கவேண்டும். சிறந்த படங்கள், அசாத்தியமான பாத்தி ரங்கள் என்று அவரது எல்லைகளும் பங்களிப்பும் விரிவடைந்திருக்கவேண்டும். அப்படி நடக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். ஏன் நடக்கவில்லை? இதற்குக் காரணம் என்ன?

தமிழ் சினிமாவின் வணிகச் சூழல் அவரை நட்சத்திரமாக்கிவிட்டது. நட்சத்திரமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் புதிய பரிசோதனைகளைத் தேடலை முடக்கிவிட்டது. எனவே, அவரது திறமை முழுமையாக வெளிப்படாததற்கு வணிகச் சூழல்தான் காரணம் என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். இது ஒரு முக்கியமான காரணம்தான். ஆனால், இது மட்டும்தான் கமல் என்னும் கலைஞனின் விகாசத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்தது என்று சொல்லிவிட முடியுமா? பிற துறைகளில் சாதித்தவர்கள் எப்படிச் சாதித்தார்கள்? அவர்களுக்கு மட்டும் சூழலின் ஒத்துழைப்புக் கிடைத்துவிட்டதா?

செஸ் விளையாட்டில் அதிக ஆர்வம் இல்லாத நம் தேசத்திலிருந்து உலகம் போற்றும் ஒரு விஸ்வநாதன் ஆனந்த் உருவானது எப்படி? துப்பாக்கி சுடும் போட்டியின் திறமையாளர்களை ஊக்குவிக்கும் சூழல் இல்லாத ஒரு துறையில் அபினவ் பிந்தரா சாதித்தது எப்படி? பண்டிட் ரவிஷங்கர், பிஸ்மில்லா கான் போன்றவர்கள் உலக அளவில் மதிக்கப்படும் கலைஞர்களாக உருவானது எப்படி? சத்யஜித் ரே இறு

திவரை கலைஞராக வாழ்ந்துவிடவில்லையா? பதேர் பாஞ்சாலி படமெடுக்க அவர் பட்டபாடு நாடறியும். அதுதானே இந்தியாவில் உன்னதமான சினிமாவைத் தொடங்கிவைத்தது. அடூர் கோபாலகிருஷ்ணன் ஏன் ஒவ்வொரு படம் எடுப்பதற்கும் இவ்வளவு பாடுபடவேண்டும்? ஹொலிவூட் சினிமாவில் அகப்பட்டுக்கொண்டு நல்ல கதாபாத்திரங்களுக்காக ஏங்கி அலைந்தாரே இங்கிரிட் பெர்க்மன். ஒரு தொழிலதிபர் அவரிடம் நட்புகொள்ள, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஒரு ஸ்ரூடியோவே வாங்கித் தருகிறேன் என்றபோது அதெல்லாம் எனக்கெதற்கு, எனக்குத் தேவை நல்ல இயக்குநரும் ஒரு நல்ல கதையும்தான் என்று அவர் சொல்லவில்லையா?. "நல்ல படமெடுப்பதற்காக என் சம்பாத்தியம் அனைத்தையும் இழந்தேன். ஆனால், இன்று என் படங்கள் இல்லாத வீடியோ லைப்ரரியே இல்லை என்று விக்டோரியா டிசிகா பெருமைப்பட்டுக்கொள்ளவில்லையா?

இந்தக் கேள்விகள் கமல் ஹாசனைக் குறைத்து மதிப்பிடும் நோக்கில் எழுப்பப்படவில்லை. ஆனால், நட்சத்திரமாக ஜொலிப்பதற்காக கலைஞனாக வாழமுடியாமல்போனது துரதிருஷ்டவசமானது. கலைஞனாக வாழ்வதா, நட்சத்திரமாக வாழ்வதா என்பதைக் குறிப்பிட்ட நபர்தான் முடிவு செய்யவேண்டும். கலைஞனாக வாழ விரும்பினால் காலத்திடம் அதற்கான விலையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். புதுமைப்பித்தன் எந்த விலைகொடுத்தாரோ அந்த விலை; தாஸ்தாவோஸ்கி என்ன விலை கொடுத்தாரோ அந்த விலை. கலைஞனாக வாழ்வது அத்துணை எளிதன்று. அதுவும், தமிழ் சினிமாவில். தவிர, வெற்றியும் கலை உணர்வும் இசைந்துபோவது தமிழில் மட்டுமல்ல, எங்குமே கடினமான விஷயம்தான். இந்தப் பின்னணியில்தான் ஒருவரது இலக்கு என்ன என்பது குறித்த கேள்வி எழுகிறது.

உலக அளவில் சிறந்த நடிகனாக அறியப்பட வேண்டுமென்றால், சாதிக்க வேண்டுமென்றால், அதற்கான விலை கொடுத்தேயாகவேண்டும். கமலை ஒஸ்கார் நாயகன், உலக நாயகன் என்று அழைத்து நாம் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். ஆனால், உண்மையிலேயே இந்தப் பட்டங்களுக்குத் தகுதியானவராக ஆகவேண்டும் என்று அவர் நினைத்தால், தமிழகச் சூழலில் பெருவாரியான மக்களைக் கவர்ந்து, வசூலைக் குவிக்கும் படங்களை மட்டும் நம்பியிருந்தால் போதாது. நம்மிடம் மகத்தான தொழில்நுட்பக் கலைஞர்கள் இருக்கிறார்கள். கதாசிரியர்கள் இருக்கிறார்கள். இயக்குநர்கள் இருக்கிறார்கள். நடிப்பதற்கு கமல் இருக்கிறார். வேறு என்ன தேவை, சர்வதேச விருதுகளை வெல்ல?

'கேன்' விருது சிறந்த கலை முயற்சிகளுக்காகக் கொடுக்கப்படும் விருது. ஒஸ்கார் விருது என்பது வெகுஜனத் திரைப்படங்களுக்கானது. அது அமெரிக்கப் படங்களுக்கு அமெரிக்கர்களே கொடுத்துக்கொள்வது. ஆனால், சிறந்த வெளிநாட்டுத் திரைப்படங்களுக்கான ஒஸ்கார் விருதுப் பிரிவு ஒன்றிருக்கிறது. அது இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு விருது கொடுத்திருக்கிறது. அதில் குறைந்த பட்சம் 40 படங்களாவது மகத்தான படங்கள் என்று கூறிவிட முடியும் (பைசிக்கிள் தீவ்ஸ், ரஷோமன், லாஸ்ட்ரடா, போர்பிடன் கேம்ஸ், தி வேர்ஜின் ஸ்பிரிங், நோ மன்ஸ் லான்ட் ஆகியவை சில உதாரணங்கள்.) இந்தப் படங்களுடன் வைத்துப் பேசக்கூடிய அசலான படம் எதிலேனும் கமல் இது வரை நடித்திருக்கிறாரா? இவற்றோடு ஒப்பிடக்கூடிய படங்களை எடுக்கும் இயக்குநர்கள் ஒரு சிலர் இந்தியாவில் இருக்கிறார்கள் (உதாரணம், அடூர் கோபாலகிருஷ்ணன்.) அவர்கள் படங்களில் கமல் நடிக்காமல் போனதற்குக் காரணம் என்ன?

நட்சத்திர அந்தஸ்துக்கேற்ற படங்களில் நடித்து கமல் பொருளும் புகழும் சம்பாதிப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், உலக நாயகன் என்று புகழப்படும் அவர், அந்தப் புகழ்ச்சிக்கு நியாயம் செய்யும் விதத்தில் அவ்வப்போது சில படங்களில் நடிக்கலாமே என்பதுதான் கமலிடம் அதிகமாக எதிர்பார்ப்பவர்களின் ஆதங்கம். திரைப்பட விழாக்களுக்கு அனுப்புவதற்கு என்றே கமலின் நடிப்பில் ஏன் படம் தயாரிக்கப்படக்கூடாது? சர்வதேச போட்டியில் ஜாம்பவான்களோடு மோதி விருது வென்றுவரும் வாய்ப்பு அவருக்கு ஏன் கிடைக்கக்கூடாது?

'இதுபோன்ற படங்கள் இங்கே ஓடாது' என்று சொல்லப்படுவதில் முழு உண்மை இல்லை. வங்காளத்தில் சத்யஜித் ரேயின் 'பதேர் பாஞ்சாலி' திரையிடப்பட்ட ஒரே வாரத்தில் சினிமா தியேட்டர்காரர்கள் படத்தை நிறுத்திவிட்டார்கள். அது, கேன் விருது வென்றபின்னர் மீண்டும் அவர்களே திரையிட்டார்கள்; படம் நூறு நாள்கள் தாண்டி ஓடியது.

இயக்குநர் மகேந்திரன் கூறியது போன்று, 'உலக சினிமா எடுப்பது ஒன்றும் சீனப்பெருஞ்சுவர் கட்டுவதுபோலக் கடினமான காரியம் இல்லை. 'த வே ஹோம்' என்னும் கொரியப் படத்தில், பேரன் தன் பாட்டிக்கு ஊசியில் நூல் கோர்த்துக் கொடுப்பது போன்றதுதான்' என்றார். நாம் உலக அளவில் விருதுகளை வென்றால் தமிழ்ப் படங்களின் நிலைமை மாறும்.

வெற்றுக் கால்களுடன் மரதனில் ஓடி தங்க பதக்கம் வென்ற அந்த எதியோப்பிய வீரனால் ஓர் இனம் எழுச்சி கொள்ளவில்லையா? அதுபோன்ற சர்வதேச விருதுகளை பெறும்போது நம் இனமும் எழுச்சி கொள்ளும்.

டிசிகா சொல்வதுபோல, 'கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து வணிகப் படங்களை எடுப்பதை விட, அதே பணத்தில் எட்டு 'பைசிக்கிள் தீவ்ஸ்'களை எடுத்துவிடலாம். பணமும் திரும்ப வரும்; மகத்தான படங்களும் கிடைக்கும்".

75 லட்ச ரூபாவில் மட்டும் எடுக்கப்பட்ட படம்தான் 'சில்ட்ரன் ஒவ் ஹெவன்'. அப்படம் பெறாத பாராட்டுக்கள் இல்லை; விருதுகள் இல்லை. செலவழித்த பணத்துடன் பல மடங்கு பணத்தையும் அது திரும்பக் கொண்டுவந்தது.

'அபராஜிதோ' படம் உள்ளூரில் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட பொருள் நஷ்டத்தைத் திரைப்பட விழாவில் வென்ற விருது சரிக்கட்டியது' என்று ஒருமுறை சத்யஜித் ரே சொல்லியிருக்கிறார். அதனால், பண நஷ்டம், விநியோகஸ்தர்கள் பற்றியெல்லாம் கவலைப்படவேண்டியதில்லை.

உலக அளவில் இந்திய சினிமா என்றாலே சத்யஜித் ரேதான். ரே மாபெரும் இயக்குநர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தமிழில் அப்படி யாரும் உருவாக முடியாதா? தாகூர் பெற்ற நோபல் பரிசை பரிசுப் பொருளாக வைத்து, தாகூருடன் கவிபாடி வென்று, அப்பரிசை அவரே எனக்குத் தரும்படி செய்வேன் என்று சொன்னானே பாரதி, அந்த அளவுக்குத் தன்னம்பிக்கையும் முனைப்பும் உடையவர்கள் யாரும் இங்கு இல்லையா? 'பெரிதினும் பெரிது கேள்' என்றான் மகாகவி. நாமும் பெரிய இலக்குகளை வகுத்துக்கொண்டு அதற்காகப் போராடவேண்டும்.

ஆயிரம் மைல் பயணம், காலடி நிலத்திலிருந்துதான் தொடங்குகிறது.

இதற்கான முயற்சிகளை இப்பொழுது எடுக்கத் தொடங்கினால் இன்னும் நாலைந்து ஆண்டுகளில் கமல் தமிழ்ப் படத்துக்காக ஒஸ்காரோ, கேன் விருதோ வென்றுவரும் நிலை உருவாகலாம். அப்போது, அந்த உலக நாயகனை வரவேற்க மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாபெரும் கூட்டம் அலைமோதும். ■



## ஆதவன்

தயாரிப்பு: ரெட் ஜெயண்ட் மூவீஸ்
இயக்கம்: கே.எஸ். ரவிக்குமார்
நடிப்பு: சூரியா, நயன்தாரா, வடிவேலு, சரோஜாதேவி, சாயாஜி ஷிண்டே, முரளி
இசை: வித்யாசாகர்

### தர்க்கத்தைப்பற்றி பேசக்கூடாது

தமிழில் வித்தியாசமாக நடிக்க முயல்பவர்களில் ஒருவரான சூர்யா, தன்னை எல்லாத் தரப்பு ரசிகர்களுக்குமான ஸ்டாராக நிலைநிறுத்திக் கொள்வதற்காக நடித்திருக்கும் இன்னொரு படம்தான் ஆதவன்.

கூலிக்கு கொலைசெய்யும் ஆதவனிடம் ஒரு நீதிபதியைக் கொல்லவேண்டிய வேலை வருகிறது. ஆனால், தன் முதல் முயற்சியில் தோற்கிறான். பிறகு அவன் நீதிபதியின் வீட்டுக்குள்ளேயே ஒரு வேலைக்காரனாக நுழைந்து, தன் முயற்சியைத் தொடர்கிறான். அங்கே நீதிபதியின் குடும்பத்தோடு, முக்கியமாக அவரது தங்கை மகள் நயன்தாராவோடு பழக்கம் ஏற்படுகிறது. அவனது நோக்கம் என்ன, அது நிறைவேறியதா, காதல் கைகூடியதா ஆகியவற்றுக்கான பதில்தான் மீதிக்கதை.

மசாலாப் படத்தில் தர்க்கத்தைப் பற்றிப் பேசக்கூடாதுதான். இருந்தாலும், ரவிக்குமார் அதிகமாகவே சலுகை எடுத்துக்கொள்கிறார். ஆபத்து நேரும் போதெல்லாம் சூர்யா தப்பிக்கும் விதம், மிக முக்கியமான வழக்கை விசாரிக்கும் நீதிபதியின் வீட்டுக்குள் சூர்யா நுழையும் விதம் என்று பல சறுகள். நீளமான கிளைமாக்ஸ் காட்சி எடுபடவில்லை.

சூர்யா நன்றாகத்தான் நடிக்கிறார். ஆனால், பாத்திரத்தில் வலு இல்லாததால் எதுவும் மனதில் நிற்கவில்லை. நயன்தாரா கொஞ்சம் சதையைக் குறைத்து, கவர்ச்சியையும் குறைத்து பவனிவருகிறார். வடிவேலுவின் காமெடி ரசிக்கும்படி உள்ளது.

ஹாரிஸ் ஜெயராஜின் பாடல்கள் பரவாயில்லை. பின்னணி இசை சரியில்லை. கணேஷின் ஒளிப்பதிவு நன்று.

வணிகப் படம் எடுப்பதற்குப் பேர்போன ரவிக்குமார் அந்தப் படங்களையும் மேலும் நம்பகத்தன்மையோடு எடுக்க முயல்வது நல்லது. இல்லையேல் அவரது படங்களுக்கான குறைந்தபட்ச உத்தரவாதம் விரைவில் காலாவதியாகிவிடும்.

## பேராண்மை

இயக்கம்: ஜனநாதன்
தயாரிப்பு: ஐங்கரன் இண்டர்நேஷனல்
நடிப்பு: ஜெயம் ரவி, சரண்யா, தன்ஷிகா, வசுந்தரா, ஊர்வசி, வடிவேலு, பொன்வண்ணன்
இசை: வித்யாசாகர்
ஒளிப்பதிவு: எஸ். ஆர். சதீஷ்குமார்

### புதிய பாதையில் ஒரு படம்

வனத்துறை இளம் அதிகாரி துருவன் (ஜெயம் ரவி) மலைவாழ் சமூகத்தை சேர்ந்தவன். சென்னையிலிருந்து பயிற்சிக்காகக் காட்டுப் பகுதிக்குச் செல்லும் என்சிசி மாணவிகளில் ஐவரைக் காட்டுக்குள் அழைத்துச் சென்று பயிற்சி கொடுக்கிறான். அரசியல் பிரக்ஞைகொண்ட அவன், தன்னை இழிவுபடுத்தும் பெண்களை வெறுக்காமல் பயிற்சி அளிக்கிறான்.

காட்டுக்குள் அந்நிய சதித்திட்டம் ஒன்றைத் தற்செயலாக் கண்டுபிடித்த பிறகு படம் வேறு திசையில் பயணம் செய்கிறது. துருவனை இகழ்ந்த பெண்கள் அவன் மதிப்பை உணர்ந்து அவன் தலைமையில் அந்நிய சதிக்கு எதிராகப் போராடுகிறார்கள். இதற்கிடையில் துருவனின் நேர்மையைச் சந்தேகிக்கும் உயர் அதிகாரி, அவனைச் சுட்டுக் கொல்ல உத்தரவிடுகிறார். இவரிடமிருந்து தப்பி அந்நிய சதியை துருவன் எப்படி முறியடிக்கிறான் என்பதே கதை.


வழக்கமான பாதையைவிட்டு வெளியே வந்து ஒரு படத்தை உருவாக்கியிருப்பதற்காக ஜனநாதனைப் பாராட்ட வேண்டும். இட ஒதுக்கீடு, மலைவாழ் மக்களின் வாழ்நிலை, அவர்கள் மீது பிறருக்கு இருக்கும் அலட்சியம் ஆகியவற்றைச் சொல்வதற்கான முயற்சி பாராட்டுக்குரியது. ஆனால், இந்த முயற்சி வலுவாக மேம்போக்காக மேற்கொள்ளப்பட்டிருப்பதால் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாமல்போகிறது.

காட்டுக்குள் நடக்கும் சாகச பயணமும் சண்டைகளும் விறுவிறுப்பாக படமாக்கப்பட்டிருக்கின்றன. வெறும் கவர்ச்சிப் பதுமைகளாக வந்துபோகும் பெண்களைப் போராளிகளாகப் பார்ப்பது ஆறுதல் அளிக்கிறது. ரவிக்கும் சரண்யாவுக்குமிடையே ஏற்படும் ஈர்ப்பு மென்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. டூயட், காமெடி டிராக் ஆகியவை இல்லாதது மிகப் பெரிய ஆசுவாசம்.

கூலிப்படையின் சதியை முறியடிக்கும் துருவனின் திட்டம் தொடங்கும் விதம் நன்றாக உள்ளது. ஆனால், போகப்போக நம்பகத்தன்மை காணாமல்போகிறது. சோஷலிசம் பேசும் துருவன் ஏவுகணைகள், பற்றியும் பாடம் எடுக்கிறான். என்.சி.சி. மாணவிகள் அதிநவீன ஆயுதங்களை சர்வ சாதாரணமாகக் கையாள்கிறார்கள்.

தீவிரமாக நடித்திருக்கும் ரவியும் சாகச காட்சிகளில் திறமையாக நடித்திருக்கும் பெண்களும் பாராட்டுக்குரியவர்கள். ஆனால், ரவி வசனம் பேசுவது பாவமாக இருக்கிறது. சதீஷ்குமாரின் கமெரா அற்புதமாகச் செயல்பட்டிருக்கிறது..

தன் முன்னைய படங்களான இயற்கை, ஈ ஆகியவற்றைப் போலவே இதிலும் புதிய விஷயத்தைக் கையாள முயற்சித்திருக்கிறார் ஜனநாதன். ஆனால், முன்னைய படங்களில் இருந்த குவிமையம் இதில் இல்லை. சாகசமும் அரசியல் செய்தியும் கலந்த இந்தப் படத்தில் அரசியல் தொனி அரைவேக்காட்டுத்தனமாக இருக்கிறது. இருந்தாலும் வழக்கமான பாதையில் பயணம்செய்ய மறுக்கும் துணிச்சலுக்காக ஜனநாதனைப் பாராட்டலாம்.



## கண்டேன் காதலை

நடிகர்கள்: பரத், சந்தானம், தமன்னா, சிங்கமுத்து
இசை: வித்யாசாகர்
ஒளிப்பதிவு: பிஜி முத்தையா
தயாரிப்பு: மோசர் பேர் எண்டர்டெயின்மெண்ட்
இயக்குநர்: ஆர். கண்ணன்

### கலகலப்பு காப்பாற்றுகிறது

விரக்தியில் தற்கொலை செய்து கொள்ள முயலும் ஒரு பணக்கார இளைஞனும் (பரத்) உற்சாகத்தோடும் உயிர்த் துடிப்போடும் உள்ள ஒரு இளம் பெண்ணும் (தமன்னா) சந்திக்கும்போது என்ன நடக்கும்? காதல் முளைக்கவில்லை. காரணம், அந்தப் பெண் தன் காதலனைச் சந்திக்கப் போய்க்கொண்டிருக்கிறாள்.

பரத்தின் நடவடிக்கையால் ரயிலைத் தவறவிடும் அவளைப் பத்திரமாக ஊர் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொறுப்பு இவன் தலையில் விழுகிறது. அந்தப் பயணம் அவன் வாழ்க்கையில் திருப்புமுனையாகிறது. அந்தப் பெண்ணின் காதலுக்கு அவள் வீட்டார் போடும் முட்டுக்கட்டையை முறியடிக்க இவர்கள் திட்டம் தீட்டுகிறார்கள். அவள் காதல் நிறைவேறியதா? இவன் தன் வாழ்க்கையை மீட்டுக் கொண்டானா?

மணிரத்தினத்திடம் பாடம் படித்த கண்ணனின் இரண்டாம் படம் இது (முதல் படம் ஜெயம்கொண்டான்). ஜப் வி மெட் என்னும் ஹிந்திப் படத்தை தழுவி எடுத்திருக்கும் அவர் காட்சிகளை பெரும்பாலும் மூலத்தை அடியொற்றியே செல்கிறார். காட்சிகளை சுவாரஷ்யமாக அமைத்து அவற்றை திரையில் நேர்த்தியாக வடிக்கிறார். கண்ணுக்குக் குளிர்ச்சியான ஒளிப்பதிவு (பிஜி முத்தையா), நேர்த்தியான வசனங்கள் (பட்டுக்கோட்டை பிரபாகர்), கலகலப்பு ஆகியவை படத்தின் பலம்.



ஆனால், ஹிந்திப் படத்தோடு ஒப்பிடுகையில் காட்சிகளில் இயல்புத் தன்மை குறைவுதான். தவிர, பரத் விரக்தியிலிருந்து மீளும் வேகம், தமன்னாவின் காதலனின் பாத்திர வார்ப்பு ஆகியவை பலவீனமாக உள்ளன.

பரத் சுமாராக நடித்திருக்கிறார். தமன்னா நன்றாக நடித்திருந்தாலும் ஹிந்தியில் கரீனா கபூரைப் பார்த்தவர்களுக்கு ஏமாற்றமாகவே இருக்கும். ஓரளவு சிரிக்க வைக்கும் சந்தானம் இரைச்சலைக் குறைத்துக்கொள்வது நல்லது. வித்யாசாகரின் இசையில் சில பாடல்கள் பரவாயில்லை.

சில குறைகள் இருந்தாலும் வன்முறை, ஆபாசம் தவிர்த்த கலகலப்பு படத்தைக் காப்பாற்றுகிறது.

---


## பழசிராஜா

இயக்கம்: ஹரிஹரன்

திரைக்கதை, வசனம்: எம்.டி. வாசுதேவன் நாயர்
நடிப்பு: மம்மூட்டி, சரத்குமார், மனோஜ் கே ஜெயன், கனிகா, பத்மப்ரியா, சுமன், திலகன், நெடுமுடிவேணு, அஜய் ரத்னம்
இசை: இளையராஜா
ஒலிக்கலவை: ரசூல் பூக்குட்டி
ஒளிப்பதிவு: ராமநாத் ஷெட்டி

### நகர மறுக்கிறது

இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம் பரவிய காலத்தில் அதனை எதிர்த்துப் போராடிய குறுநில மன்னர்களில் ஒருவனான பழசிராஜாவின் புகழைப் பாடும் கதை. கட்டபொம்மன், புலித்தேவன், திப்பு சுல்தான் போன்ற மன்னர்களில் ஒருவனான பழசிராஜா ஆங்கிலேயரின் வலிமைக்குமுன் தோற்றுப் பின்வாங்கினாலும், ஆதிவாசிகளின் துணையுடன் எப்படி அவர்களை எதிர்த்துப் போராடினான் என்பதை மிக விரிவாகச் சொல்லும் படம் இது.




விறுவிறுப்பான சம்பவங்கள், உணர்ச்சிகரமான காட்சிகள், போர்த் தயாரிப்புகள், போர்க்களச் சித்தரிப்புகள், அசரவைக்கும் சண்டைக் காட்சிகள் என்று பல அம்சங்கள் சிறப்பாக உள்ளன. கூர்மையான வசனங்களும் வலு சேர்க்கின்றன. ஆனால், படம் ஒரு கட்டத்துக்கு மேல் நகர மறுக்கிறது. ஒரேவிதமான காட்சிகள் திரும்பத்திரும்ப வருகின்றன. பல காட்சிகள் கலபத்தில் யூகித்துவிடக்கூடியவை. நெடுமுடிவேணு, அஜய் ரத்னம் ஆகிய பாத்திரங்கள் கதைக்குத் தேவை என்று தோன்றவில்லை.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் பழசிராஜா (மம்மூட்டி), போர்த் திறமும் விசுவாசமும்கொண்ட தளபதிகள் (சரத்குமார், மனோஜ் கே. ஜெயன்), சொந்த நாட்டவரைக் காட்டிக்கொடுக்கும் சந்து (சுமன்), கைதார் சேரன் (அஜய் ரத்னம்), நவீன ஆயுதங்கள் கொண்ட ஆங்கிலேயர்கள், பழசிராஜாவின் மனைவி (கனிகா), போராளி நீலி (பத்மப்ரியா) என படத்தில் பலரும் நடித்திருக்கிறார்கள்.

மம்மூட்டியின் அனுபவம் அவரது நடிப்பில் வலுவாக வெளிப்படுகிறது. சரத்குமார் கச்சிதம். மனோஜ், திலகன், சுமன், கனிகா, பத்மப்ரியா ஆகியோர் தங்களுக்கு அளிக்கப்பட்ட பங்கைச் சரியாகச் செய்திருக்கிறார்கள்.

இளையராஜாவின் இசையில் பாடல்கள் நன்றாக இருக்கின்றன. பின்னணி இசை அற்புதம். ஒஸ்கார் விருது பெற்ற ரசூல் பூக்குட்டியின் ஒலிக்கலவை அபாரம். ஒளிப்பதிவாளர் ராம்நாத் ஷெட்டி போர்க் காட்சிகளையும் நிலக் காட்சிகளையும் நன்றாகப் படம்பிடித்திருக்கிறார். தமிழ் வசனங்கள் ஜெயமோகன். சிக்கனமான, நறுக்குத் தெறிக்கும் விதத்தில் எழுதியிருக்கிறார். சில இடங்களில் மலையாள வாடை அடிப்பதை தவிர்த்திருக்கலாம். ஆங்கில வசனங்களுக்கு ஏன் சப்-டைட்டில் இல்லையென்று புரியவில்லை.

போரிட்டு மடிந்த வீரர்களைப் பற்றிய வரலாற்றுப் படங்களில் முடிவு எல்லோருக்கும் தெரியும் என்னும் நிலையில் கதையைச் சொல்லும் முறையில்தான் பார்வையாளர்களை உட்கார வைக்கமுடியும். பழசிராஜாவின் திரைக்கதை இதில் ஓரளவுதான் வெற்றி பெற்றிருக்கிறது.



## யோகி

### எதைச் சாதிக்கிறது?

'சோட்ஸி' என்னும் தென் ஆபிரிக்க படத்தின் பாதிப்பில் உருவான படம் 'யோகி' என்று, இயக்குநர் சுப்பிரமணியம் சிவாவே ஒப்புக்கொண்ட பிறகு இந்தப் படம் காப்பியடித்த படம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. என்றாலும் அந்தப் பாதிப்பில் எடுத்தவர்கள் உருப்படியாக எடுத்திருக்கக் கூடாதா என்னும் கேள்வியை எழுப்பாமல் இருப்பதிலும் அர்த்தம் இல்லை.

ஜோகனஸ்பேர்க் நகர்ப்புறத்தின் விளிம்பு நிலையில் வாழும் ஒரு ரவுடியின் வாழ்வில் தற்செயலாகப் பிரவேசிக்கும் ஒரு குழந்தை உருவாக்கும் சலனங்களை அற்புதமாகக் காட்டிய படம் சோட்ஸி. நகர்ப்புற விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வும், குழந்தையின் வரவால் ஏற்படும் மாற்றங்களும் மிக யதார்த்தமாக, அழுத்தமாகச் சித்தரிக்கப்பட்ட இந்தப் படம், ஐந்து சர்வதேச விருதுகளை பெற்றுள்ளது. இதே கதையை, பல காட்சிகளின் அப்பட்டமான மறுபதிப்புடன், எடுத்துள்ள சுப்பிரமணிய சிவாவும், திரைக்கதை எழுதி நாயகனாக நடித்திருக்கும் அமீரும் கையாண்டிருக்கும் விதம் தமிழ்த் திரையுலகின் நோய்க்கூற்றினை உணர்த்துகிறது.

படத்தில் இடம் பெறும் விளிம்பு நிலை வாழ்வு குறித்த சித்தரிப்பு வழமையாக தமிழ்ப் படங்களில் நாம் பார்த்துவரும் வகைமாதிரிச் சித்தரிப்புதான். இறுக்கமான முகமும் முறுக்கேறிய உடலும் வெகுஜன கதாநாயக நடிகர்களுக்கான ஆகிவந்த ஸ்டைல்களுமாக வளையவரும் அமீர் பாத்திரத்தைவிட, தனது நடிக அவதாரம் குறித்த படிமத்துக்கே அதிக முக்கியத்துவம் தந்திருக்கிறார். ஆங்காங்கே சினிமாத்தனமான திருப்பங்களை வைப்பதிலேயே இயக்குநர் குறியாக இருக்கிறார். பின்னர், யதார்த்தத்தை எங்கேபோய்த் தேடுவது? செயற்கையான திருப்பங்கள் நிறைந்த திரைக்கதையில் விளிம்பு நிலை குறித்த பணிவு முறையாக உருப்பெறவில்லை. குழந்தையால் நாயகனுக்குள் சுரக்கும் ஈரம் அதற்கான தன்மையுடன் பிரதிபலிக்கபடவில்லை.

காதல், டூயட் என்ற வழக்கமான பாதையைத் தவிர்த்திருப்பது பாராட்டுக்குரியதுதான். ஆனால், அதற்காகவே ஒரு படத்தை நல்ல படம் என்று சொல்லிவிட முடியாது. பல காட்சிகள் தொடங்கும்போதே அடுத்து என்ன ஆகும் என்பதை எளிதாக யூகித்துவிட முடிகிறது. நாயகனின் தந்தைபற்றிய தட்டையான பிம்பம், தமிழ்த் திரையில் பார்த்துப் பார்த்துச் சலித்த ஒன்று. வில்லன் பாத்திரமும் அடிபட்டுத் தேய்ந்து போன பிம்பம்தான்.

யுவன் ஷங்கர்ராஜாவின் பின்னணி இசை கவர்கிறது. சமீர் ரெட்டியின் ஒளிப்பதிவு நன்றாக இருக்கிறது.

அமீரை அதிரடி நாயகனாக அறிமுகப்படுத்துவதைத் தவிர, பெரிதாக எதையும் யோகி சாதித்துவிடவில்லை.

## ரேணிகுண்டா

### உணர்வுக்கு வடிவமா?

வன்முறையை மையமாகக் கொண்ட இன்னொரு படம். அப்பா, அம்மாவைப் பறிகொடுத்துவிட்டு, அதையொட்டிய பிரச்னைகளால் ஜெயிலுக்கு வருகிறான் ஓர் இளைஞன். அங்கே உள்ள சூழல் அவனைத் திணறவைக்கிறது. காவலர்களும் அடித்துத் துவைக்கிறார்கள். கலங்கிப் போன அவன், சக கைதிகளின் உதவியோடு சிறையிலிருந்து தப்புகிறான்.

அதிலிருந்து தொடங்குகிறது இரத்த வேட்டை. வஞ்சம் இழைத்தவர்களைத் தேடிச் சென்று குரூரமாக வஞ்சம் தீர்க்கும் படலம் பதைக்க வைக்கும் காட்சிகளின் வடிவில் அரங்கேறுகிறது. கொலைகளுக்கு நடுவில் கலகலப்பும் காதலும் தலை காட்டுகின்றன.

வேட்டையாடும் காவல் துறையிடமிருந்து தப்பும் முயற்சிகளுக்கிடையே மாட்டிக்கொள்கிறது காதல். இந்தப் படையினரும் காதலும் என்ன ஆனது என்பது குருதி தோய்ந்த உச்சக் காட்சியில் சொல்லப்படுகிறது.


கொலைப் படையில் உள்ள ஐவரும் நன்றாக நடித்திருக்கிறார்கள். குறிப்பாக 'டப்பா'வாக வரும் தீப்பெட்டி கணேசன் பிரமாதமான அறிமுகம். நாயகன் பாத்திரத்தில் அறிமுகமாகியிருக்கும் ஜானியும் வலுவான நடிப்பை வெளிப்படுத்துகிறார். சனுஷா அழகான அறிமுகம்.

ராஜசேகரின் சண்டை இயக்கம் மூச்சை நிறுத்துமளவுக்கு பயங்கரம். குறிப்பாக, ஆளரவமற்ற மணற்பரப்பில் வில்லனைக் கொல்லும் காட்சி.

ஒளிப்பதிவாளர் ஷக்தியின் கைவன்மை படத்துக்கு பலம் சேர்க்கிறது. கணேஷ் ராகவேந்திராவின் பின்னணி இசை படத்துடன் பார்வையாளர்களை ஒன்றவைக்கும் விதத்தில் உள்ளது.

விபச்சாரப் பெண் தொடங்கி, வில்லன் பங்கர்வரை பாத்திரப் படைப்பில் இயக்குநரின் கவனம் பளிச்சிடுகிறது. மழையையும் ஒரு பாத்திரமாகவே பயன்படுத்தியிருக்கும் நுட்பத்தைப் பாராட்டலாம். கடைசியில் கொலைகாரன் அழும்போது அவனுக்காகத் திரையரங்கமே அழும் இடம், இயக்குநரின் ஆளுமையை உணர்த்துகிறது.

வெகுஜன ரசிகத் திரளின் உளவியலைப் புரிந்துகொண்டு படம் எடுத்தி



ருக்கும் இயக்குநர், படத்துடன் அவர்களை ஒன்றச் செய்வதில் திறமையாகச் செயல்படுகிறார். வன்முறையைக் கொண்டாடுதல், கொண்டாட வைத்தல் ஆகியவற்றை இவர் வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டுகிறார். இது எந்த அளவுக்கு ஆரோக்கியமான போக்கு என்ற கேள்வியை நாம் எழுப்பியாக வேண்டியிருக்கிறது.

வன்முறைக் காட்சிகளை ரசிகர்கள் கைதட்டி வரவேற்பதைப் பார்க்கும் போது பயமாக இருக்கிறது. நியாயமான காரணத்தை முன்னிறுத்தி யாரையும் கொல்லலாம் என்னும் விதியை தமிழ் சினிமா பார்வையாளர்கள் மத்தியில் விதைத்திருக்கிறதா அல்லது புலப்படாத நெருப்பாக, மக்களின் பொதுப்புத்தியில் உறங்கியிருக்கும் இந்த உணர்வுக்கு திரைப்படம் வடிவம் கொடுக்கிறதா என்பதும் நாம் எழுப்பவேண்டிய, எழுப்பிக்கொள்ளவேண்டிய, கேள்வி.

**- அரவிந்தன்**

## சினிமா | செய்தி



### வேட்டையாடப்படும் 'வேட்டைக்காரன்'

விஜய், அனுஷ்கா நடித்துள்ள 'வேட்டைக்காரன்' படத்தை சன் பிக்சர்ஸ் வாங்கியிருக்கிறது அல்லவா? விஜய் ஏற்கனவே பெரும் ரசிகக் ஆதரவு கொண்ட ஹீரோ. சன் பிக்சர்ஸ் ஒன்றுமில்லாத படத்தைக்கூட தன் அதிரடிச் சந்தை உத்திகளால் பரவலாக எடுத்துச் செல்லக்கூடிய நிறுவனம். எனவே, வேட்டைக்காரன் சக்கை போடுபோடும், விஜயின் தொடர் தோல்விகளைத் தடுத்துநிறுத்துமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடப்பது வேறு.

படம் அவர்கள் கைக்குப் போனதிலிருந்தே விஜய்க்கும் அவரது அப்பா எஸ்.ஏ. சந்திரசேகருக்கும் ஏகப்பட்ட பதற்றம், ஆற்றாமை.

முதலில், படத்தில்வரும் அரசியல் சார்புள்ள வசனங்களை நீக்கச்சொல்லி சன் பிக்சர்ஸ் உத்தரவிட்டது. விஜய் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், படத்தை மொத்தமாகப் பணம்கொடுத்து வாங்கிவிட்ட நிறுவனம் தன் நிலையில் பிடிவாதமாக இருந்தது. கடைசியில் விஜய் இறங்கி வந்தார். அரசியல் வசனங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதில் புதிதாகச் சில காட்சிகளை நடித்துக் கொடுத்தார்.

அதன்பிறகு வேறோர் அவமானம். விஜய், படத்தைப் பார்க்க விரும்பினாராம். ஆனால், நாங்கள் யாருக்கும் இப்போதைக்கு ஷோ போடுவதாக இல்லையென்று கூறிவிட்டதாம் சன் பிக்சர்ஸ். படம் வெளியாகும் தினமான டிசம்பர் 18ஆம் தேதிக்குமேல் தனி ஷோ போடுகிறோம் என்று கறாராகச் சொல்லிவிட்டார்களாம்.

இனி யாருடைய படத்தில் நடித்தாலும் ஒப்பந்தத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டாகவேண்டும் என்று தந்தையும் தனயனும் முடிவுசெய்திருக்கிறார்களாம். படத்தை விநியோகஸ்தர்களிடம் நேரடியாக விற்பனை செய்பவர்களுக்கு மட்டுமே கால்ஷீட் என்பதுதான் அந்த முடிவு.


இது ஒருபுறம் இருக்க, வேறொரு விஷயமும் விஜய் தரப்பைப் பயமுறுத்துகிறதாம். சமீபத்தில் தமிழில் டப்பிங் செய்யப்பட்டு வெளியான 2012 படத்தின் வசூல் தமிழகத்தில் பத்து கோடியைத் தாண்டிவிட்டது. வெறும் 55 லட்சத்துக்கு வாங்கிய படம், இந்த அளவுக்கு வசூலைக் குவித்திருப்பது சர்வதேச நிறுவனமான சோனியை யோசிக்கவைத்திருக்கிறது.

வேட்டைக்காரன் வெளியாகும் அதே தேதியில் 'அவதார்' என்ற ஹொலிவுட் படம் வரவிருக்கிறது. 2012 நன்றாக ஓடியதைப் பார்த்துவிட்டு இதன் தமிழ் டப்பிங் உரிமையை வாங்க ஏகப்பட்ட போட்டி நிலவுகிறது. ஆனால், இந்திய விநியோக உரிமையை வைத்திருக்கும் சோனி நிறுவனம், தானே நேரடியாக வெளியிடலாம் என்று முடிவுசெய்திருக்கிறது. தமிழில் 200 பிரதிகளுடன் மிரட்டலாகக் களம் இறங்குகிறது இந்த அவதார்.

இந்தப் படம் தங்கள் படத்தைப் பாதிக்குமோ என்ற அச்சம் விஜய் தரப்பில் எழுந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அவதார் வெளியாவதால் திரையரங்கங்கள் கிடைப்பதிலும் வேட்டைக்காரனுக்குச் சிக்கல். இதே நாளில் வெளியாகும் 'கந்தக் கோட்டை' என்னும் தமிழ் படமும் வேட்டைக்காரனின் வேதனையைக் கூட்டியிருக்கிறது. இதன் தயாரிப்பாளர் கல்பாத்தி அகோரம். இவரது முன்னைய படமான 'மாசிலாமணி'யால் கணிசமாகச் சம்பாதித்த தியேட்டர் அதிபர்கள் இவருக்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள். இதுவும் வேட்டைக்காரனுக்கு நல்ல திரையரங்கம் கிடைப்பதைச் சிக்கலாக்கியிருக்கிறது.

இத்தனை பேர் சூழ்ந்துகொண்டு தாக்குவதை வேட்டைக்காரனால் சமாளிக்க முடியுமா என்பது விரைவில் தெரிந்துவிடும். ■


ரொறன்ரோவில்




படங்கள்:
என். லோகேந்திரலிங்கம்
புதுவை. இராமன்

வடமேற்கு லண்டன் பகுதியில் மிகுந்த பிரபல்யத்துடன்,
தனது வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்தர சேவையையும்
ஆலோசனையையும் வழங்கிவரும் சட்ட நிறுவனம்

Immigration - குடிவரவு விவகாரங்கள்
European Union Law - ஐரோப்பிய ஒன்றிய சட்டங்கள்
Entry Clearance applications and appeals - வீசா விண்ணப்பங்கள், மேன்முறையீடுகள்
Marriage Applications (Certificate of Approval) - விவாக விண்ணப்பங்கள்
Human Rights Claims and Appeals - மனித உரிமை விண்ணப்பமும் மேன்முறையீடும்
Point Based System - Applications and Appeals

Tier 1 (Highly skilled Workers, Entrepreneurs, Investors)
Tier 1 (Post Study Work)
Tier 2 (Sponsored skilled workers) (formerly 'work permit')
Tier 4 (Students)
Tier 5 (Temporary workers)

Asylum Claims and Appeals - அகதி தஞ்ச விண்ணப்பமும் மேன்முறையீடும்
British Citizenship and Nationality - பிரிட்டிஷ் பிரஜாவுரிமை
Detention and Deportation - தடுத்துவைத்தலும் நாடுகடத்தலும்
Judicial Review

**Personal Injury (On No Win No Fee Basis) - விபத்து காயங்கள்**
**(வென்றால் மட்டுமே கட்டணம்)**

- **Road Traffic Accident**
- **Slip and Trip**
- **Work Related Accidents**
- **Clinical Negligence**

*Community Legal Service*

*Criminal Defence Service*

**Crime (Public Funding Available) - குற்ற செயல்கள்**
**24 Hour Police Station Representation**
**Representation at Magistrates Court**
**Representation at Crown Court**

**Property - உடமைகள்**
**Residential Property**
**Commercial Property**
**Landlord and Tenant Matters**

**Family Matter - குடும்ப விவகாரங்கள்**
**Divorce Matters**
**Ancillary relief**
**Other Family matters**

# MALIK & MALIK SOLICITORS

## Commissioners for Oaths

**232 High Road, Willesdon, London NW10 2NX**
**Tel: 020-8830 3050 Fax: 020-8830 3051 Mobile: 24 Hour Police Station Service 07710 989 203**





RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

Canada - Toronto வுக்கு
அண்மித்த பகுதியில்......

Real Estate Service


வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....



**Karu Kandiah** FRI. CRES,
Real Estate Broker / President

* 20 Years Real Estate Experience
* Multi Award Winner

Dir: 416-284-5698
Bus: 416-284-5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909